பக்கங்கள்: 12

Registered as a Newspaper

STAFF COPY
NOT FOR SALE

PUMP
with
Standard Accessories
Select

NEWTONE
Water Pumps

சஞ்சீவி

அறிவு-ஆக்கம்-அபிவிருத்தி

விலை ரூபா 4-00

தரமான
உதிரிப்பாகங்களை
கொண்டு தயாரிக்கப்படும்

நீயூரோன்
வாட்டர் பம்புகளை
வாங்குங்கள்

மலர்: 4 யாழ்ப்பாணம் சுக்கில ஷூ சித்திரை மீ 09 உ சனிக்கிழமை ஹிஜ்ரி 1409 றமழான் பிறை 15 (22-04-89) SANJEAVY REGENERATIVE TAMIL WEEKLY கிரம்: 51

வடபிராந்திய போக்குவரத்துச் சபை:

நடத்துனர் பதவிக்கு 50 பேர் நியமனமாவர்

யாழ்ப்பாணம், ஏப்ரல் 22

நடத்துனர் பதவிக்குப் புதிதாக தெரிவு செய்யப்பட்ட 50 பேருக்கு வட பிராந்திய போக்குவரத்துச் சபை நியமனக் கடிதங்களை அனுப்பி வைக்க உள்ளது.

நியமனக்கடிதங்கள் எதிர் வரும் திங்கட்கிழமையளவில் அனுப்பி வைக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இதேவேளையில் முல்லைத்தீவு வவுனியா, கிளிநொச்சிப் பகுதி டிப்போக்களுக்கான நடத்துனர் பதவிக்கு நேர் முகப்பரீட்சைகள் நேற்று கோண்டாவில் வடபிராந்திய போக்குவரத்துச் சபை அலுவலகத்தில் நடைபெற்றன. [ஒ-எ]

அரசு - விடுதலைப் புலிகள் பேச்சின் பெறுபேறுகளைப் பொறுத்தே ஈரோஸ் ராஜீவுடன்பேசும்

யாழ்ப்பாணம், ஏப்ரல் 22

ஸ்ரீலங்கா அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் நடைபெறும் பேச்சுவார்த்தைகளின் பெறுபேறுகளைப் பொறுத்தே ஈரோஸ் இந்திய அரசுடன் பேச்சுவார்த்தையை மேற்கொள்ளும்.

ஈரோஸ் இயக்கத்தின் பேச்சாளர் ஒருவர் இத்தகவலைச் சஞ்சீவிக்குத் தெரிவித்தார்.

வடக்கு-கிழக்கு பகுதிகளில் தற்பொழுது ஏற்பட்டுள்ள நிலைமை குறித்தும், ஈரோஸ் எம். பிக்கள் நாடாளுமன்றத்தை பகிஷ்கரித்து வருவது குறித்தும் புதுடில்லியில் பிரதமர் ராஜீவ்காந்தியுடன் பேச்சு நடத்த முன்னர் உத்தேசிக்கப்பட்டிருந்தது.

எனினும் தற்பொழுது இலங்கை அரசு தமிழீழ விடுதலைப் புலிகளுடன் பேச முன் வந்ததை அடுத்து புதுடில்லிப் பேச்சுவார்த்தை பின்போடப் பட்டுள்ளதாக ஈரோஸின் அந்தப் பேச்சாளர் மேலும் சொன்னார். (ஒ-10)

நெடுந்தீவுப் பகுதி நேற்று அதிகாலை சுற்றிவளைப்பு

படகுச் சேவையும் இல்லை

நெடுந்தீவு, ஏப்ரல் 22

நேற்று அதிகாலை நான்கு ஹெலிக்கொப்டர்களில் நெடுந்தீவில் வந்திறங்கிய அமைதிப் படையினர், அப்பகுதிகளைத் திடீரென சுற்றி வளைத்தனர்.

நேற்று இப்பகுதிகளில் பெரும் தேடுதல் வேட்டை நடைபெற்றுக் கொண்டிருந்தது. கைதானோர் பற்றிய தகவல் ஏதும் கிடைக்கவில்லை.

தேடுதல் காரணமாக நேற்று நெடுந்தீவுப் படகுச் சேவையும் நடைபெறவில்லை. (ஒ-111)

பருத்தித்துறை சார்ஜன்ட் நேற்றுச் சுட்டுக் கொலை

கரவெட்டி, வதிரிச் சந்தியில் நேற்று பொலீஸ் சார்ஜன்ட் ஒருவரின் சடலம் கிடக்கக் காணப்பட்டது.

கொலையுண்ட சார்ஜன்ட் பருத்தித்துறை பொலீஸ் நிலையத்தில் கடமையாற்றி வந்தார். அவரது பெயர் எஸ். கிருஷ்ணகோபால். வயது 55. நவின்டிலைச் சேர்ந்தவர்.

அவரது சடலத்தில் துப்பாக்கிச் சூட்டுக் காயங்கள் காணப்பட்டன. அவர் எங்கு வைத்துச்சுடப்பட்டார் என்ற விவரம் உடனடியாகத் தெரிய வரவில்லை.

இச்சம்பவத்தை அடுத்து நேற்று இப்பகுதியில் தேடுதல் நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டது. (ஒ-10)

நாடற்றவர் பிரச்சினை தீர்ந்துவிட்டது -தொண்டா

இலங்கை நாடற்றவர் பிரச்சினை தீர்ந்து விட்டது என்று அமைச்சர் எஸ். தொண்டமான் திருச்சியில் நேற்றுத் தெரிவித்தார்.

இம்மாதம் இலங்கை நாடாளுமன்றத்தில் குடியுரிமைச் சட்டம் நிறைவேறியவுடன் மலையகத்தில் வாழும் சுமார் 10 லட்சம் இந்திய வம்சாவளியினருக்குக் குடியுரிமையுடன் வாக்குரிமையும் கிடைத்துவிடும்.

இவ்வாண்டு மத்தியில் நடைபெற உள்ள உள்ளூராட்சித் தேர்தலில் இவர்கள் வாக்களிக்க முடியும்.

இந்திய அரசு தலையிட்ட பின்னர்தான் தமிழுக்கு ஆட்சி மொழித் தகுதி, அரசு அதிகாரங்களைப் பரவலாக்குதல், தமிழ் மக்களுக்கான தனி மாநிலம் போன்ற நெடுநாளையக் கோரிக்கைகளை இலங்கை அரசு செயற்படுத்தியது.

இலங்கையில் அமைதி ஏற்பட முடியாத நிலை இருப்பது வருத்தத்தைத் தருகிறது. இப்படி அமைச்சர் தொண்டமான் சொன்னார். (ஒ-எ)

ஜே.வி.பி. மாஜி உறுப்பினர் குத்தியும் வெட்டியும் கொலை

கொழும்பு, ஏப்ரல் 22

மக்கள் விடுதலை முன்னணியின் முன்னாள் உறுப்பினரான கே. எம். எம். பண்டார ஆயுதக் கோஷ்டி ஒன்றினால் குத்தியும் வெட்டியும் கொல்லப்பட்டார்.

கடந்த திங்கட்கிழமை தெல்தெனியாவில் இதாவ என்னும் இடத்தில் இச் சம்பவம் இடம்பெற்றது. [ஒ.எ]

ஆபத்து! ஆபத்து! ..... கால்நடைகளுக்குத் தொற்றுநோய்

இறைச்சிக் கடைகளை 'சீல்'வைத்துமூட உத்தரவு

இறைச்சி சாப்பிட வேண்டாம் எனப் பொதுமக்களுக்கும் அறிவுறுத்து

யாழ்ப்பாணம், ஏப்ரல் 22

யாழ்ப்பாண மாவட்டத்தில் கால்நடைத் தொற்று நோய் ஒன்று பரவ ஆரம்பித்துள்ளது!

அதனால் சகல இறைச்சிக் கடைகளையும் மறு அறிவித்தல் வரை மூடுமாறு உத்தரவிடப்பட்டுள்ளது!

அதேவேளை இறைச்சி சாப்பிட வேண்டாம் என்று மக்களுக்கும் அறிவுறுத்தப்படுகிறது!

யாழ்ப்பாணத்தில் ''புட் மவுத்'' எனப்படும் கால் நடைத் தொற்றுநோய் பரவி வருவதை மிருக வைத்தியப் பகுதியினர் கண்டறிந்துள்ளனர்.

அதைத் தொடர்ந்து,யாழ்ப்பாண மாவட்ட உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு எஸ். திவகலாலா, குடாநாட்டில் உள்ள மாநகரசபைகள், நகர சபைகள், பிரதேச சபைகளின் பொறுப்பதிகாரிகள் சகலரையும், அவ்வப் பகுதியில் உள்ள இறைச்சிக் கடைகளை மறுஅறிவித்தல் வரை ''சீல்'' வைத்து மூடுமாறு உத்தரவிட்டிருக்கிறார்.

இதேவேளை இறைச்சிவகைகளை வாங்கிச் சாப்பிட வேண்டாம் என்று அவர் பொது மக்களுக்கும் வேண்டுகோள் விடுத்திருக்கிறார். (அ)

பிட்டிகல பொலீஸ் நிலையம் மீது நேற்று அரை மணி நேரத் தாக்கு!

ஒரு கான்ஸ்டபிளும், ஒரு சிப்பாயும் பலி!!

கொழும்பு, ஏப்ரல் 22

காலி மாவட்டத்தில் பிட்டிகல பொலீஸ் நிலையத்தின்மீது நேற்று அதிகாலை தீவிரவாதிகள் நடத்திய தாக்குதலில் ஒரு பொலீஸ்காரர் கொல்லப்பட்டார். மூன்று பொலீஸார் காயமடைந்தனர்.

இத் தாக்குதல் 30 நிமிடங்கள் நீடித்தது.

பொலீஸார் திருப்பி நடத்திய தாக்குதலைத் தொடர்ந்து தீவிரவாதிகள் பின்வாங்கினர் என்று அரச தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

அதேசமயம் பிட்டிகலத் தாக்குதலை முறியடிக்க எல்பிட்டி இராணுவ முகாமில் இருந்து இராணுவத்தினர் ஜீப்பில் விரைந்து கொண்டிருந்த சமயம் கின்டிபொல சந்தியில் வைத்து தீவிரவாதிகள் மறைந்து இருந்து நடத்திய தாக்குதலில் இராணுவ வீரர் ஒருவர் கொல்லப்பட்டார். (ஒ-எ)

திருமலைக்கு பஸ் சேவை

யாழ்ப்பாணம், ஏப்ரல் 22

இன்று யாழ்நகரிலிருந்து திருகோணமலைக்கு அரச பஸ் ஒன்று சேவையில் ஈடுபட உள்ளது.

ஆனாலும் இங்கிருந்து வவுனியாவரை செல்லும் பஸ் படையினர் பாதுகாப்புக் கொடுத்தால் மட்டுமே பயணத்தை தொடரும் என அறிவிக்கப்படுகிறது. (ஒ-9)

மல்லாகத்தில் இளைஞர் சடலம்

யாழ்ப்பாணம், ஏப்ரல் 22

மல்லாகம் ரயில் நிலையத்துக்குச் சமீபமாக நேற்று மாலை சூட்டுக் காயங்களுடன் இளைஞர் ஒருவரின் சடலம் கிடக்கக் காணப்பட்டது.

18 வயது மதிக்கத்தக்க இந்த இளைஞரின் சடலத்துக்கு அருகில் துண்டுப்பிரசுரம் ஒன்றும் இருந்தது. (ஒ-10)

சுபநேரம்

22 — 04 — 1989
சனிக்கிழமை
சித்திரை - 09
சுபநேரம்:
03.01 முதல் 04.31 வரை.
ராகுகாலம்:
09.01 முதல் 10.31 வரை
இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்

சுழிபுரத்தில் மோதல்; 3 இளைஞர்கள் உயிரிழப்பு

யாழ்ப்பாணம், ஏப்ரல் 22

நேற்று முன்தினம் (வியாழக்கிழமை) சுழிபுரம்கிழக்கு காலையடி வைரவர்கோயிலடிப் பகுதியில் மோதல் சம்பவம் ஒன்று இடம்பெற்றது.

இம் மோதலின்போது மூன்று இளைஞர்கள் உயிரிழந்தனர் எனத் தெரிவிக்கப்பட்டது.

இம் மூவரது சடலங்களையும் இப்பகுதி மக்கள் நேற்று வெள்ளிக்கிழமை யாழ் ஆஸ்பத்திரியில் ஒப்படைத்தனர். சடலங்கள் இன்னும் அடையாளம் காணப்படவில்லை. [ஒ-10]

பண்ணாகம், சுழிபுரம் நேற்று சுற்றிவளைத்துத் தேடுதல்

தாயும், மகனும் ஆஸ்பத்திரியில்

யாழ்ப்பாணம், ஏப்ரல் 22

கடந்த வியாழக்கிழமை இடம்பெற்ற மோதல் சம்பவத்தை அடுத்து நேற்று பண்ணாகம், சுழிபுரம் பகுதிகள் சுற்றிவளைக்கப்பட்டன.

நேற்று இப்பகுதிகளில் இடம்பெற்ற தேடுதலின் போது சில பகுதிகளில் துப்பாக்கிச் சூட்டுச் சத்தங்கள் கேட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

அதேசமயம் சுழிபுரம், தவறணையடியிலுள்ள ஒரு வீட்டில் விழுந்த கிரனேட் வெடித்ததில் இருவர் காயமடைந்தனர்.

காயமடைந்த தாயும், மகனும் யாழ். ஆஸ்பத்திரியில்

(4 ஆம் பக்கம் பார்க்க)

பெண் சூட்டுக்கு பலி

யாழ்ப்பாணம், ஏப். 22

நேற்று சுழிபுரம். பண்ணாகம் பகுதியில் பெண் ஒருவர் சூட்டுக்கு இலக்காகி மரணமானதாகத் தெரிவிக்கப்பட்டது.

மரணமானவர் பண்ணாகத்தைச் சேர்ந்த அன்னபூரணம் கனகநாயகம் (வயது 40)எனத் தெரிவிக்கப்பட்டது.

இவரது சடலம் நேற்று யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் ஒப்படைக்கப்பட்டது. [ஒ-10]

புதனன்று பேச்சு?

இலங்கைஅரசுக்கும் தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்தின் பிரதிநிதி அன்ரன் பாலசிங்கத்துக்கும் இடையேயான பூர்வாங்கப் பேச்சுவார்த்தைகள் வருகிற புதன்கிழமை (26-04-89) ஆரம்பமாகலாம் என்று கொழும்பில் கூறப்படுவதாக பி. பி. சி. நேற்று இரவு தெரிவித்தது. [ஒ-எ]

வாகன சோதனை

வலந்தலைச் சந்தியிலுள்ள அமைதிப் படை முகாம் முன்னால் பயணிகள் பஸ் உட்பட அனைத்து வாகனங்களும் தீவிர சோதனைக்குள்ளாகின்றன.

தென்பகுதி ரோந்திலும் 'பவ்ளோ' கவச வாகனம்

கால் நடை பவனியும் ஆரம்பம்!

கொழும்பு, ஏப். 22

தென்பகுதி இராணுவ நடவடிக்கைகளின்போது தென் ஆபிரிக்கத் தயாரிப்பான ''பவ்ளோ'' (Buffaloa) கவச வாகனங்கள் பயன்படுத்தப் படுவதாகத் தெரிய வருகிறது.

இந்த பவ்ளோ கவச வாகனங்களைத்தான் முன்னர் வட பகுதியில் இடம் பெற்ற இராணுவ நடவடிக்கையின்போது ஸ்ரீலங்கா இராணுவத்தினர் பாவித்தனர் என்பது தெரிந்ததே.

இவற்றுடன் உள்ளூர் தயாரிப்பான யூனிக்கோர்ன் கவச வாகனங்களும் பயன்படுத்தப் படுகின்றன.

தென்பகுதியில் அண்மைக் காலமாக அடிக்கடி நிலக் கண்ணி வெடித் தாக்குதல்கள்

[4 ஆம் பக்கம் பார்க்க]

ஒரே குடும்பத்தைச் சேர்ந்த ஐந்து பேர் சுட்டுக்கொலை!

தெற்கில் நேற்றுச் சம்பவம்

கொழும்பு, ஏப்ரல் 22

ஒரே குடும்பத்தைச் சேர்ந்த ஐவர் நேற்றுத் தென்பகுதியில் கொலை செய்யப்பட்டனர்.

இதற்கு ஜே. வி. பி. இயக்கமே காரணம் என்று பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

இக் குடும்பத்தைச் சேர்ந்த இளைஞன் ஒருவனை பொலீஸார் கைது செய்திருந்தனர்.

அவன் ஜே. வி. பி இயக்கத்தினரைக் காட்டிக் கொடுத்ததற்காக அவனின் தாய், தந்தை, சகோதரன் மற்றும் இரண்டு உறவினர்களையும் தீவிரவாத சந்தேக நபர்கள் படுகொலை செய்தனர் என்று நம்பப்படுகிறது. [ஒ-எ]

வெளிவந்துவிட்டது! விற்பனையாகிறது!!
உதயன் வெளியீட்டகத்தின்
இந்துமத மாத மஞ்சரி
★ ஞானக்கதிர் ★
இப்போது அமோகமாக விற்பனையாகிக் கொண்டிருக்கிறது. நீங்களும் தவறாது வாங்கிப் படியுங்கள்.
★ திருமுருக கிருபானந்தவாரியார்
★ ஆத்மஜோதி நா. முத்தையா
★ புலவர் நா. சிவபாதசுந்தரனார்
★ அ. குமரகுரு
★ கலாநிதி க. ந. வேலன்
ஆகியோரின் ஆழம் செறிந்த சமயக் கட்டுரைகளுடனும்—
★ மாமுனி யோகர் சுவாமி
★ ஸ்ரீ சத்திய சாயி பாபா
ஆகியோர் பற்றியும் —
★ நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சாரிய ஸ்வாமிகள்
★ சிவத்தமிழ்ச்செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி
★ கொழும்பு, மட்டக்களப்பு, பருத்தித்துறை இராமகிருஷ்ண மிஷன் மடாதிபதிகள்
ஆகியோரின் ஆசியுரைகளுடனும்
★ விநாயகரின் வண்ணப்பட முகப்புடனும் முதலாவது கதிர் ஒளிபரப்புகிறது.
விலை ரூபா 5/- மட்டுமே!
உதயன் விற்பனை முகவர்களிடம் கிடைக்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சின்னஞ் சிறு விளம்பரம்

விற்பனைக்கு

பாவித்த வீட்டுத் தளபாடங்கள், கடை விறுக்கிகள், அலுமாரிகள், Fan, Cot, T.V., Type-writer, Voltage Regulator, bicycle மற்றும் பல விற்பனைக்கு உண்டு. 343, பருத்தித்துறை றோட், அரசடி சந்தி, நல்லூர். [10624]

Trailor Racing Motor Bicyle 50 CC விற்பனைக்கு உண்டு. உடன் தொடர்பு கொள்ளவும்: Dr. S. Thiru navukkarasu, Kaithady South, Kaithady. (196)

Casio and Yamaha [Organs] விற்பனைக்கு உண்டு. தொடர்பு: No. 9 Aboobucker Road. Jaffna. (10640)

நல்ல நிலையில் வியாபாரம் நடந்து கொண்டிருக்கும் வீடியோ, ஒடியோ சாதனங்கள் உடன் விற்பனைக்கு உண்டு. 600 வீடியோ கசற், 800 R G வீடியோ கசற், 140 E.P. ஒடியோ றைக்கோட், 60 L. P. ஒடியோ றைக்கோட் முழுமையாக விற்பனை செய்யப்படும். தொடர்பு; Asian Textiles, Palaly Road, Thirunelvely. (216)

உரும்பராயில் கோப்பாய் வீதியில் 100மீற்றர் தூரமுள்ள ஒழுங்கையில் [தம்பசிட்டி] கிணறுள்ள நாலு பரப்பு வெறுங்காணி வீடுகோ, தோட்டத்துக்கோ சிறந்தது. தொடர்புகொள்க. க. ஞானசுந்தரம், உரும்பராய் கிழக்கு, உரும்பராய். (3371)

நல்ல நிலையிலுள்ள Morris Minor கார் விற்பனைக்கு உண்டு. விபரம் 40/25 வைமன் வீதி, நல்லூர். (10647)

காணி விற்பனைக்கு

கண்டி வீதியில் பாரதியார் வீதியும் ஸ்ரான்லி கல்லூரி வீதியும் சந்திக்கும், சந்திக்கு அருகாமையில் 3/4 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. தொடர்புகொள்ள வேண்டிய முகவரி; திருமதி இரத்தினசிங்கம் செல்லம்மா, 237, கண்டி வீதி, யாழ்ப்பாணம். [10643]

New City Traders

Daytron T. V. 12'', 14'' கறுப்பு வெள்ளை, Daytron T. V. 14'', 20'' கலர், Daytron வீடியோ கசெற், Phillips கசெற் ரெக்கோடர், Phillips Gas cooker மற்றும் வீட்டுக்கு தேவையான மின் உபகரண பொருள்களையும் பெற்றுக் கொள்ள New City Traders, 135, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். (C/2291)

கோழிக்குஞ்சு விநியோகம்

பிறிமாயின ஒருநாள் லோமன் புறொயிலர்க் குஞ்சுகள், லோமன் வெள்ளைப் பேட்டுக் குஞ்சுகள் 29-4-1989 இல் விநியோகிக்கப்படும். 25-4-89க்கு முன் பதிவு செய்க. குஞ்சுகள் எடுப்பவர்களுக்கு மருந்துள் இலவசமாக வழங்கப்படும். திருமதி ஸ்ரோன் K. K. S றோட், எக்ஸாம் சென்டர், திருநெல்வேலி சந்தி S. K. றோட் சென்டர் 81 கச்சேரி- நல்லூர் றோட். (197)

Biraha Farm புறொயிலர் குஞ்சுகள் திங்கட்கிழமை (24-4-89)திலும், Hvline வெள்ளை, கறுப்பு பேட்டுக் குஞ்சுகள், கறுப்புச் சேவற் குஞ்சுகள் செவ்வாய்க்கிழமை (25-4-89)திலும் Golden Comet பிறவுண் பேட்டுக் குஞ்சுகள், சேவற்குஞ்சுகள் புதன்கிழமை (26-4-89)திலும் விநியோகிக்கப்படும். சற்குணராஜா & பிறதர்ஸ், பிரம்படிலேன், கொக்குவில். (225)

பிறிமா லோமன் வெள்ளை, சிவப்பு பேட்டுக்குஞ்சுகள், Golden Comet சிவப்புப் பேட்டுக்குஞ்சுகள், சிவப்புச் சேவல் குஞ்சுகள், வளர்ந்த குஞ்சுகள், புறொயிலர் குஞ்சுகள், கோழிகள், கோழித் தீன், கோழிகளுக்கான மருந்து வகைகள், ஆலோசனைகள் ஆகியனவற்றிற்குத் தொடர்பு கொள்ளுங்கள்; பரம் ஏஜென்ஸி, கிளிநொச்சி. (9313)

கோழிக்குஞ்சு விநியோகம் UPLANDS FARM

(Cobb) புறொயிலர் குஞ்சு, (Dekalb) பிறவுண் சேவல் குஞ்சு (25. 4. 89) செவ்வாய் கிழமை விநியோகிக்கப்படும். சேவல் குஞ்சு விலை ரூபா 4. 50 தொகையாக எடுப்பவர்களுக்கு விசேஷ சலுகை உண்டு. முன்கூட்டியே பதிவு செய்க. இல.9, சந்தையா லேன், சுன்னாகம் (புகையிரத நிலையத்துக்கு அருகாமையில்) (10635)

இறைச்சிக்கோழி விற்பனைக்கு

Broiler பேட்டுக்கோழி சேவல், சூப் குஞ்சு விருத்துக் குஞ்சு வகைகள் எப்பொழுதும் சுத்தம் செய்து பெற்றுக் கொள்ளலாம். எங்கள் ஒழுங்கை முகப்பிலும் எங்கள் பண்ணை வாசலிலும் Nallur Video Centre என்னும் விளம்பர பலகை உண்டு. Nallur Farm Centre 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச்சந்தையடி, நல்லூர். (சி-2087)

தேவை

Woolsley Ford Prefect A-40 Farina or Morris Minor சகல விபரங்களுடனும் தொடர்பு கொள்ளவும்: 488, C/o. உதயன், யாழ்ப்பாணம். (220)

யாழ் நவீன சந்தையில் அமைத்துள்ளபான்ஸி சவுஸில் வேலை செய்வதற்கு 20 வயதுக்கு உட்பட்ட ஆண் விற்பனையாளர் தேவை. C/o, 487, உதயன். (209)

மணமகன் தேவை

இந்து வேளாள சைவ உணவு உண்ணும் ஆயுர்வேத இறுதிப் பரீட்சையில் சித்தியடைந்த 40 வயதுப் பெண்ணுக்கு வாழ்க்கைத் துணை வரை தேடுகிறோம். சாதகக் குறிப்புடன் மற்ற விபரங்களுடனும்எழுதவும். இல. 52, C/o உதயன். (10629)

மன்னாரில் படிப்பிக்கும் யாழ்ப்பாண கத்தோலிக்க ஆசிரியைக்கு 25-32 வயதுக் கிடைபட்ட ஆசிரியர் அல்லது ஒத்துவரக்கூடிய உத்தியோகம் உள்ள மணமகன் தேவை. மங்கள ஏஜென்சி, கொய்யாத் தோட்டம், யாழ்ப்பாணம். [224]

மணப்பெண்கள் தேவை

வங்கி உத்தியோகத்தராக வேலை செய்யும் இந்து கோவியர் இன இரண்டு மணமக்களுக்கு 30 வயதுக்குட்பட்ட மணப்பெண்கள் தேவை. அதே இனத்தில் வெளிநாட்டிலிருந்து வந்த மணமகனுக்கு செவ்வாய்தோஷமுள்ள மணப்பெண் தேவை. மங்கள ஏஜென்சி, கொய்யாத் தோட்டம், யாழ்ப்பாணம். (10628)

மணமகள் தேவை

யாழ் இந்து குருகுல ஜெர்மனியில் வசிக்கும் 36 வயதுடைய மணமகனுக்கு அழகிய சிவந்த 25 வயதுக்கும் 30 வயதுக்கும் இடைப்பட்ட மணமகள் தேவை. ஜெர்மனியில் வசிக்கும் மணப்பெண்ணுக்கு முதலிடம் கொடுக்கப்படும். சீதனம் எதிர்பார்க்கப்படமாட்டாது. உடன் தொடர்பு கொள்ளவும். 489, C/o உதயன் யாழ்ப்பாணம். [226]

எமது சேவையில்

கலர் பிலிம் சுருள்கள் கொம்பியூட்டரில் Processing & Print பிரதி ஒன்று 4/75 மட்டுமே. அத்துடன் இலவசமாக அல்பம் [Album] குயிக் ஸ்ரார் [மனோகரா சந்திக் கண்மையில்] 163, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். [10626]

TYPEWRITER

தட்டச்சு இயந்திரங்கள் வாங்கவும், விற்கவும் சிறந்த முறையில் திருத்திக் கொள்ளவும், தமிழ் ஆங்கிலரைப்பிங் செய்து கொள்ளவும் நாடுங்கள்: Fudo Enterprises, 39/17, மின்சார நிலைய வீதி, 3 ஆம் ஒழுங்கை, யாழ்ப்பாணம் [C/2124]

போட்டோஸ்ரற்

காலை முதல் மாலை வரை மிகவும் தெளிவாகவும் விரைவாகவும் போட்டோஸ்ரற் பிரதிகள் எடுக்கப்படும். கூடுதல் பிரதிகளுக்கு கழிவு உண்டு. நாடுவோர் மக்மிலன் புத்தகசாலை, ஆஸ்பத்திரிவீதி, பஸ்நிலையம், யாழ்ப்பாணம். (C/2292)

வகுப்புக்கள்

கேக் ஐசிங், ஜென்றல் குக்கரி பிரத்தியேகமான செய்முறைப் பயிற்சியுடன் பயிற்றுவிக்கப்படும். வெளிநாடு செல்வோருக்கும், இல்லத்தரசிகளுக்கும் சிறந்த ஒரு வரப்பிரசாதம். சனி, ஞாயிற்றுக் கிழமைகளில் ஆரம்பம்: 22.04.1989 தொடர்பு: N Arullananda, 11/2, Wyman Road, Nallur. [/2260]

ஆங்கிலப் புத்தகம்

ஆரம்பமுதல் G. C. E. (O/L) வரை இலக்கணம், அப்பியாசம், பேச்சுப்பயிற்சி முதலியவற்றை உள்ளடக்கிய புதுமையான முறையில் T. Rajalingam என்பவரால் எழுதப்பட்ட ஆங்கிலப் புத்தகம்தான் Basic Grammar and Spoken Practical கிடைக்குமிடம் பூபாலசிங்கம் புத்தகசாலை, யாழ்ப்பாணம். (10620)

'கெட்டிக்காரர்கள்'

இலங்கை வானொலி தமிழ்ச் சேவைத் தனி நாடகங்களின் முதலாவது தொகுப்பு நூல். அராலியூர் ந. சுந்தரம்பிள்ளை எழுதிய படித்துச் சுவைப்பதற்கும், நடித்து மகிழ்வதற்கும் ஏற்ற 9 நாடகங்கள் 176. பக்கங்கள். விலை: 25/- [10603]

குருநகர்
றெக்கிளமேசன் சனசமூக நிலைய

25 ஆவது ஆண்டு நிறைவு விழாவை முன்னிட்டு நடைபெற இருக்கும் போட்டிகள்:

(1) மென்பந்தாட்டம் (கிரிக்கெட்)
7 பேர் கொண்ட 12 ஓவர் விளையாட்டு

(2) கரப்பந்தாட்டம்
6 பேர் கொண்ட ஓவர் விளையாட்டு

(3) வலைப்பந்தாட்டம்
பெண்களுக்கான 6 பேர் கொண்ட விளையாட்டு

யாழ். உதவி அரசாங்க அதிபர் பிரிவு எல்லைக்குட்பட்ட சகல விளையாட்டுக் கழகங்களும் பங்குபற்றலாம்.

விண்ணப்ப முடிவு திகதி: 30 - 04 - 89

தொடர்பு முகவரி:
வி. இ. றஞ்சித்,
20, புதுமை மாதா மேற்கு வீதி,
குருநகர், யாழ்ப்பாணம்.

[சி-2227]

நூலகம் திறப்பு

முல்லைத்தீவு ஏப்ரல் 22 முல்லைத்தீவு செல்வபுரம் சந்திரன் விளையாட்டுக்கழகம் அண்ணு படிப்பகத்தில் ஆரம்பித்த நூலகத்தை முல்லைத்தீவு வடக்கு கிராம சேவை உத்தியோகஸ்தர் திரு. சி. சுப்பிரமணியம் திறந்து வைத்தார்.

விழாவுக்குக் கழகத் தலைவர் திரு. செ.யோசேப் தலைமை தாங்கினார்நூலகச் செயலாளர் திரு. எம். ஏ. எம். பேனாட் நன்றியுரை வழங்கினார். [க-92)

ஞாயிறு தினங்களில் கடைகள் மூடப்படுகின்றன

அச்சுவேலியிலும் ஞாயிற்றுக் கிழமைகளில் கடைச்சட்ட நடைமுறை கண்டிப்பாகக் கடைப்பிடிக்கப்படுகின்றது.

சென்ற மாதம் 26 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை தொடக்கம் உணவுச்சாலைகள் மருந்துக்கடைகள் தவிர ஏனைய வியபார நிலையங்கள் யாவும் மூடப்படுகின்றன.

சீனாவிலிருந்து அரிசி; 20,000 மெற்றிக் தொன்

20 ஆயிரம் மெற்றிக் தொன் அரிசியை சீனாவில் இருந்து இறக்குமதி செய்ய உணவுத் தினைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளது.

உணவுத்தினைக்களம் அரிசி இறக்குமதி செய்வது இதுவே கடைசியாக இருக்கும்.

அடுத்த மாதத்தில் இருந்து உணவுப்பொருள் இறக்குமதி வேலைகளை கூட்டுறவு மொத்த விற்பனவு ஸ்தாபனத்திடம் ஒப்படைக்க அரசு முடிவு செய்திருப்பது தெரிந்ததே.

வரட்சி நிவாரணமாக 5 மாவட்டங்களைச் சேர்ந்த மக்களுக்கு 10 ஆயிரம் மெற்றிக் தொன் அரிசியை அரசு வழங்கி வருகிறது.

இதனால் அரிசிக் கையிருப்பு குறையும். அக்குறைவை நிரப்பவே புதிதாக சீனாவில் இருந்து அரிசி இறக்குமதி செய்யப்படுகிறது. (இ - எ)

பாடசாலை திருத்த வேலைகள்

காரைநகர், ஏப்ரல் 22 காரைநகர் புதுறோட் திரு. ஆ. சுப்பிரமணியம் வித்தியாசாலைப் பெற்றோர் ஆசிரியர் சங்கத்தினதும் அதிபரினதும் முயற்சியினால் இப் பாடசாலையின் திருத்த வேலைகள் மிகத் துரிதமாக நடைபெற்று வருகின்றன.

திருத்த வேலைகளுக்கு பெற்றோர்கள் ரூபா 25 ஆயிரம் நன்கொடையாக வழங்கியுள்ளனர்.

இப்பாடசாலை கடந்த காலத்தில் பொம்மர் ஹெலித் தாக்குதல்களில் சேதமுற்றிருந்தது. (க - 73)

சங்கானையில் காசநோய்ப் பிரிவு

மானிப்பாய் ஏப்ரல் 22 சங்கானை அரசினர் வைத்திய சாலையில்புதிதாக காசநோய்ப் பிரிவு ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

ஒவ்வொரு மாதமும் வரும் நான்காவது செவ்வாய்க் கிழமைகளில் இச்சிகிச்சைப் பிரிவில் காச நோயாளருக்கு சிகிச்சை அளிக்கப்பட்டு வருகின்றது. (ச-90)

நற்சமூக உருவாக்க விரிவுரை

யாழ்ப்பாணம், ஏப்ரல் 22 யாழ்ப்பாணம் 4-ஆம் குறுக்குத் தெருவிலுள்ள நற்சமூக நடுநிலைய கேட்போர் கூடத்தில் இன்று சனிக்கிழமை காலை 9. 30 மணிக்கு பல்கலைக் கழக தமிழ்ப் பேராசிரியர் கலாநிதி ஏ. சண்முகதாஸ் ''சமூகமும் மதமும்'' என்னும் பொருள் பற்றி சிறப்புரை நிகழ்த்துவார்.

அருட்திரு கலாநிதி சி. யோ. இமானுவல் சிறப்புரை நிகழ்ச்சிக்குத் தலைமை வகிப்பார். (ச)

மீண்டும் ஆரம்பம்

மட்டக்களப்பு, ஏப்ரல். 22 மட்டக்களப்பு மாவட்டத்தில் கடந்த பல மாதங்களாக இடை நிறுத்தப்பட்டிருந்த உள்ளூர் பஸ்சேவைகளை ஆரம்பிக்கும் நடவடிக்கையில் இ.போ ச. டிப்போ ஈடுபட்டுள்ளது.

மாமாங்கம் - நாவலடி களுவாஞ்சிக்குடி - மண்முனை மட்டக்களப்பு - வெருகல் மட்டக்களப்பு - ஆரையம்பதி மட்டக்களப்பு - புல்லுமலை ஆகியவற்றுக்கிடையிலான பஸ் சேவைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. (ச-21]

6 ஆம் மாத நினைவஞ்சலி



மலர்வு: 19 - 04 1966

மறைவு: 22 - 10 - 1988

திரு. செல்லையா கிளேற்றன்

எம் அன்புச் செல்வமே!
பாசமுள்ள சோதரனே!!
எம் குடும்பத்தின் சூரியனே!!!
உமது அஸ்தமனத்தால் - எம்
வாழ்வில் இருள் சூழ்ந்ததையா!
உம் மலர் வதனம் காணாமல் - எம்
கண்கள் குருடானதையா!
உம் கரும்பு மொழி கேளாமல் - எம்
காதும் செவிடானதையா!
மாதங்கள் ஆறென்ன ஓராயிரம்தான் சென்றாலும்
மாளாது எம் துயரம்! மறவோம் உமைநாமே!

உம் பிரிவால் வாடும்
பெற்றோர், சகோதரர்
மாமன், மாமி, மைத்துனர்

18/3 மடம் வீதி,
யாழ்ப்பாணம், (10631)

3ஆம் வருட நினைவஞ்சலி

திருமதி கண்மணி சீனிவாசகம்

எங்கள் இல்லத்தின் தெய்வமாக துலங்கி
எங்கள் நல்வாழ்வுக்கு வழிகாட்டியாய்
விளங்கிய எமது அன்புத் தாயே
எங்களைத் தவிக்கவிட்டு நீங்கள்
இறைவனடி சேர்ந்த போதும் உங்கள்
நினைவு எங்கள் நெஞ்சங்களில்
அணையாத ஒளித் தீபமாக ஒளிவீசும்.

உங்கள் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கும்:

கணவன்,
மக்கள், மருமக்கள்.
பேரப்பிள்ளைகள், உறவினர்கள்.

54/4, இராமநாதன் றோட்,
(ஆத்தி சூடி வீதி),
யாழ்ப்பாணம். [10644]

ஆத்ம சாந்திக் கிரியைகள்

சென்ற 16 - 04 - 1989 ஞாயிற்றுக்கிழமை தேக வியோகமடைந்த ஸ்ரீ முன்னேஸ்வரம் தேவஸ்தானத்தைச் சேர்ந்த

பிரம்மஸ்ரீ கி. பாலசுப்பிரமணிய ஐயர்

அவர்களின் ஆத்ம சாந்திக் கிரியைகள் பின்வரும் தினங்களில் ஸ்ரீ முன்னேஸ்வரத்தில் நடைபெறும்.

25 - 04 - 1989 (செவ்வாய்) — தசாகம்
26 - 04 - 1989 (புதன்) — ஏகோதிஷ்டம்.
27 - 04 - 1989 (வியாழன்) — சபிண்டீகரணம்.
28 - 04 - 1989 (வெள்ளி) — கிருஷயக்ஞம்

மேற்படி கிரியைகளில் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

பா. சிவராமகிருஷ்ண சர்மா
கல்வி அதிகாரி (விஞ்ஞானம்)
கல்வித்திணைக்களம்,
யாழ்ப்பாணம்.

மனைவி, மக்கள், மருமக்கள்.

300, கோயில் வீதி, நல்லூர்,
யாழ்ப்பாணம்.

[சி-2315[

41ஆம் நாள் கண்ணீர் அஞ்சலி

செல்வன் பே. குணநாயகம் [பாபு]

மண்ணின் மடியில்: 05-05-1972
மக்கள் மனதில்: 13-03-1989

நண்பா பாபுவே
அன்பின் உறைவிடமாய்
பண்பின் சிகரமாய்
நட்பின் இலக்கணமாய்
மிளிர்ந்தாயே தரணியில்
நாட்டின் விடுதலைக்காய்
கொதித்தெழுந்தாயே.....!
சிறுவயதிலேயே உன்
வாழ்வும் முடிந்ததுவோ.....!
அமைதியைத் தேடி சென்றனையோ?

உன் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்:
நண்பர்கள், அயலவர்கள்.

திருநெல்வேலி கிழக்கு. (10648)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிறந்த நாள் வாழ்த்து

22- 04- 1989

ஜெ. சிறிதாஸ்

வல்வெட்டி கருணாநிதி ச. ச. நிலையத்தைச் சேர்ந்த ஜெகதாஸ் [அத்தி] சிறிகாந்ததேவி தம்பதிகளின் செல்வப் புதல்வன் சிறிதாஸ் தனது மூன்றுவது பிறந்தநாளை 22- 4- 89 அன்று தனது இல்லத்தில் வெகு சிறப்பாகக் கொண்டாடுகின்றார். இவரை அன்பு அப்பா, அம்மா, சுவிஸ் சிறிமாமா, நெல்லியடி "மலர்ஸ்" ஸ்தாபனத்தார், அம்மம்மா சிவப்பி ஆகியோர் பல்கலைகளும் பெற்று நலமுடன் வாழ்க என வாழ்த்துகிறார்கள்.

[C/2221]

கொம்பியூட்டர் பயிற்சி

Diploma in Data Processing & Computer Programming Course

புதிய பிரிவுகள்:

BASIC : 26-04-89 (Week day) 10.00a.m
ADVANCED BASIC : 29-04-89 (Weekend) 1.00p.m

1st Payment Rs. 500/-

IBM SUPER/XT, IBM COMPATIBLE, APPLE உட்பட பல நவீன Computerகளில் சிறப்பு பயிற்சி அளிக்கப்பட்டு அங்கீகாரம் பெற்ற சான்றிதழ்கள் வழங்கப்படும்.

★ மல்லாகம் கிளையிலும் சில பிரிவுகள் 4.00 மணிக்கு ஆரம்பமாகும்.

IDP Computer Centre,
342, K.K.S. Road, Jaffna.
(சிவன் கோயிலடி)
Branch: 7th Mile Post, Mallakam.

[சி-2268]

உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் வேலைவாய்ப்பினைப்பெறுவதற்கான

கம்பியூட்டர் கல்வி

DIPLOMA IN DATA PROCESSING AND COMPUTER PROGRAMMING IN BASIC LANGUAGE

ஆரம்பம்: 30. 04. 1989
(திங்கள், புதன், வெள்ளி வகுப்புக்கள்)

சேரும்போது செலுத்தவேண்டியது ரூ. 500/- மாத்திரம்

O/L படித்த இருபாலாரும் சேரலாம். கூடிய நேர செய்முறைப் பயிற்சி குளிரூட்டப்பட்ட அறையில் (IBM COMPATIBLE) கம்பியூட்டரில் வழங்கப்படும்.

பயிற்சி முடிவில் அங்கீகாரம் பெற்ற சான்றிதழ் வழங்கப்படும்.

குறிப்பிட்ட தொகை மாணவ மாணவிகளே சேர்க்கப்படுவார்கள் ஆகையால், விண்ணப்பப்படிவத்தைப் பெற்றுப் பதிவு செய்துகொள்ளவும்.

விண்ணப்ப முடிவு நாள்: 29 .04. 1989

UNIKCO COMPUTER CENTRE
No. 5, மின்சார நிலைய வீதி,
2 ஆம் ஒழுங்கை,
யாழ்ப்பாணம்.
(உபதபாற் சுந்தோர் அருகாமை)

(சி/2301)

கப்பலில் ★ வேலை வாய்ப்புக்கள் ★

நான்கு கிரேக்க கப்பல்களில்
● உடனடி வேலை வாய்ப்புக்கள் ●

★ 2nd Officers ★ Bosan
★ 3rd Engineer ★ Oiler
★ Radio Officers ★ AB

மேற்கானும் பதவிகளுக்குச் செல்ல விரும்புவோர் உடனடியாக வந்து தொடர்பு கொள்ளவும்.

★ சுவிஸ் ★ இத்தாலி
★ பிரான்ஸ் ★ ஜேர்மனி
★ டென்மார்க்

ஆகிய நாடுகளுக்குப் போவதற்கும் உடனடிப் பிரயாண ஒழுங்குகள் செய்து கொடுக்கப்படும்.

விபரங்களுக்கு:

NATIONAL SHIPPING & TRAVELS,
New Lalitha Building
185/2, KASTHURIAR ROAD,
JAFFNA

(C/2284)

Diploma in Computer Programming & Data Processing

	BASIC	d Base III+
Duration	4 months	2 Months
Commencement	24 - 04 - 89	02 - 05 - 89
Days	Mon., Wed.	Tue., Fri.
Time	8.30 to 10.30	8.30 to 10.30
Monthly Fees	300/-	600/-

- Practicals on computers including I B M (Compatibles)
- More practical time
- Lectures by members of the Institute of Data Processing Management (London)
- Valuable Certificate

ஓர் ஆண்டு நிறைவையொட்டி Computer (Basic) வகுப்பில் சேரும் ஒவ்வொருவருக்கும் Electronic Calculator ஒன்று அன்பளிப்பாகக் கொடுக்கப்படும்.

SCHOOL OF BUSINESS ADMINISTRATION
16, 3rd Cross Street,
(Near O. L. R. Church)
Jaffna.

[C-2312]

குறைந்த கட்டணத்தில்
● விரைவான ● தரமான சேவைக்கு நாடுங்கள்!

★ சென்றல் கிளினிக் ★

193 A, POWER HOUSE ROAD, JAFFNA.

[சி-2225]

கலிகையில் கை உயர்த்தும் பயணிகள்

கரவெட்டி, ஏப்ரல் 22

கலிகையில் பிரயாணிகள் கையை உயர்த்திய நிலையில் செல்லும் நிலை நீடித்து வருகிறது.

கலிகை இந்திய அமைதிப் படையினரின் தடைப் பிரதேசத்தில் பஸ் மற்றும் வாகனங்களிலும் பாதசாரியாகவும் செல்லும் பிராயணிகள் சகலரும் இரண்டு கைகளையும் உயர்த்தியவண்ணம் செல்ல வேண்டியுள்ளது. (க - 70)

அம்பேத்கார் சனசமூக நிலையம்

சுன்னாகம், ஏப்ரல்.22

சுன்னாகம் அம்பேத்கார் சனசமூக நிலையத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் 23 ஆம் திகதி நாளை ஞாயிற்றுக்கிழமை நடைபெறுகிறது. (இ)

கசிப்பு வேட்டை

முல்லைத்தீவு செல்வபுரத்தில் கசிப்பு விற்றவர்களை அப்பகுதியிலுள்ள இளைஞர் இயக்கம் ஒன்று கைது செய்தது. கசிப்புக் கொள்கலன்களை தலையில் வைத்தபடி அவர்களை ஊர்வலமாக அழைத்துச்சென்றது.

ஊர்வலத்தின் பின் கசிப்பு முழுவதும் தெருவில் ஊற்றப்பட்டு கொள்கலன்கள் அடித்து நொருக்கப்பட்டன. [ச-92]

ரயில்சேவை கட்டம்கட்டமாக மின்சாரமயப்படுத்தப்படும்

கொழும்பு, ஏப்ரல் 22

1990ஆம் ஆண்டு முதல் கட்டம் கட்டமாக ரயில் சேவை மின்சாரமயப்படுத்தப்பட உள்ளது.

முதற்கட்டமாக பாணந்துறையில் இருந்து வியாங்கொட வரையிலான ரயில் சேவை மின்சாரமயப்படுத்தப்படும்.

கொழும்புகோட்டை-களுத்துறை தெற்கு ரயில் சேவையும், ராகம - நீர்கொழும்பு ரயில் சேவையும் இரண்டாம் கட்டமாக மின்சாரமயப்படுத்தப்படும்.

1950இல் ரயில்சேவை டீசல் மயப்படுத்தப்பட்டது. அதன் பின்னர் ரயில்சேவையில் சீர்திருத்தம் எதுவும் மேற்கொள்ளப்படவில்லை.

[ஓ-எ]

நாடு முழுவதும்

வலது குறைந்தோர் பற்றிய கணக்கெடுப்பு நடைபெறுகிறது

கொழும்பு, ஏப்ரல்22

நாடு முழுவதிலும் உள்ள வலது குறைந்தவர்கள் பற்றிய கணக்கெடுப்பு ஒன்றை சமூக சேவைகள் அமைச்சு நடத்தி வருகிறது.

கிராமசேவையாளர் பிரிவு மட்டத்தில் இந்தக்கணக்கெடுப்பு நடத்தப்பட்டு வருவதாக சமூக சேவைகள் துணை அமைச்சு செயலாளர் திரு. கே. எஸ். பி. பெரேரா தெரிவித்தார்

"இன்னும் ஒரு மாதத்தில் நாட்டில் வலது குறைந்தவர்கள் எத்தனை பேர் வசிக்கிறார்கள் என்பது தெரிந்துவிடும்.

அதன் பின்னர் வலதுகுறைந்தவர்களின் நல்வாழ்வுக்கான வளர்ச்சித் திட்டங்களைச் செயல்படுத்துவது இலகுவாக இருக்கும்" இது சம்பந்தமாக தேசிய மட்டத்தில் கொள்கை நிர்ணயம் செய்யப்படும்.—

இப்படி துணை அமைச்சுச் செயலாளர் சொன்னார்.

திட்டமிட்டபடி

ஆசிரியர் கல்லூரிகளின் இறுதியாண்டு பரீட்சை 24 முதல்

கொழும்பு, ஏப்ரல் 22

திட்டமிட்டபடி ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிகளுக்கான இறுதியாண்டுப் பரீட்சை இம்மாதம் 24 ஆம் திகதி முதல் நடத்தப்படும் என்று பரீட்சை ஆணையாளர் திரு. ஆர் தர் வெதமுல்ல தெரிவித்தார்.

பரீட்சை பின்போடப்பட்டால் பரீட்சைத் திணைக்களம் இவ்வருடம் நடத்தவிருக்கும் அனைத்துப் பரீட்சைகளையும் உரிய திகதியில் நடத்த முடியாமல் போய்விடும் என்று திரு. வெதமுல்ல சொன்னார்.

ரமழான் மாதத்தை முன்னிட்டு இறுதிப் பரீட்சையை மேமாதம் 9 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கும்படி அகிலஇலங்கை முஸ்லிம் கல்வி மாநாடு கோரியிருந்தது குறிப்பிடத்தக்கது. (ஓ-எ)

முதலாவது ★ பிறந்தநாள் வாழ்த்து ★

செல்வி
★ கஜானி சபாரத்தினம் ★

உரும்பராய் மேற்கைச் சேர்ந்த சபாரத்தினம் யோகராணி [மட்டக்களப்பு ஏறுவூர், 1-ஆம் குறுச்சி] தம்பதிகளின் புதல்வி இன்று தனது முதலாவதுபிறந்த தினத்தை உரும்பராயில் வெகுசிறப்பாகக் கொண்டாடுகின்றார்.

இவரைப் பெற்றோர், செல்வரத்தினம், கமலாதேவி, பெரியப்பா குடும்பத்தினர், அப்பம்மா, பொன்னுத்துரை, இராசரத்தினம், செல்வத்துரை. மாமாமார், சாரதாம்பாள், பவளமலர், ஈஸ்வரி, சந்திராதேவி, அத்தைமார், சிவரத்தினம், குவேந்திரன் [பிரான்ஸ்], நவரத்தினம் [ஜேர்மன்], சித்தப்பாமார், கவிரதன், சுதன், கோபி, மச்சான்மார், சுதாஜினி, சுதர்ஜினி, கோதை, அமுதா, சோபா, சசி, தமயந்தி, துசித்தா குமுதா, வெனிபவானி, மச்சாள்மார், பிரசன்னா, பிள்ளையான், அண்ணாமார், அம்மப்பா, கைத்தம்பிள்ளை அப்பம்மா மாரிமுத்து, மட்டக்களப்பைச் சேர்ந்த குணரத்தினம், இருதயமேரி, அந்கோனிப்பிள்ளை, குணசேகரம் ஆகியோர் வாழ்த்துகின்றார்கள்.

[217]

வெற்றிடங்கள்

கண்ணாடித் தொழிற்சாலைக்கு பயிளராக (BUBBLER) பயிற்சி பெறுவதற்கு 16 வயதிற்கும் 20 வயதிற்குமிடைப்பட்ட ஆண்கள் தேவை. பயிற்சிக் காலத்தில் நாளொன்றிற்கு ரூபா 20/- வழங்கப்படும்.

பயிற்சிக்காக குறிக்கப்பட்ட தொகை ஆட்களே சேர்த்துக்கொள்ளப்படுவார்கள்.

உடன் நேரில் வரவும்.

சேவி கிளாஸ் & மெட்டல் வேக்ஸ்
நீர்வேலி,

[193]

O/L DAY CLASSES

தனித்துவம் வாய்ந்த ஆசிரியர் குழுவினால் ஆரம்பமாகின்றது

24. 04 1989.

NIRU TUITION CENTRE
KONDAVIL.

(சி/2310)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''அப்பியாசக் கொப்பி''

மாணவ மணிகளே!
25 மில்க்வைற் நீலசோப் மேலுறைகளில் உள்ள திருக்குறள்களை வெட்டி அனுப்பி அப்பியாசக்கொப்பி ஒன்றை பரிசாகப் பெற்றுக்கொள்ளுங்கள்.

மில்க்வைற்
யாழ்ப்பாணம்.

சுஞ்சீவி

22 - 4 - 1989 சனிக்கிழமை

''பனை ஓலைத் தொப்பி''

சம்பூரண சலவைக்கு
மில்க்வைற் நீலசோப் வாங்கி உபயோகியுங்கள்.
100 மில்க்வைற் நீலசோப் மேலுறைகளை சேகரித்து நேரில் கொடுத்து அழகிய 'பனை ஓலைத் தொப்பி' ஒன்றை பரிசாகப் பெற்றுக்கொள்ளுங்கள்.

மில்க்வைற்-யாழ்ப்பாணம்.

அரசின் 2 ஆவது அழைப்பு ஜே வி.பி. சாதகமான பதில்?

கொழும்பு, ஏப்ரல் 22

இரண்டாவது அழைப்புக்கு மக்கள் விடுதலை முன்னணியிடம் இருந்து சாதகமான பதில் வரும் என்று இலங்கை அரசு எதிர்பார்த்திருக்கிறது.

பேச்சுக்களை நடத்துவதற்குரிய ஒழுங்குகளைச் செய்ய ஓர் அத்தாட்சிப் படுத்தப்பட்ட பிரதிநிதியை நியமிக்கும்படி இலங்கை அரசு மக்கள் விடுதலை முன்னணியினருக்கு கடந்த புதன்கிழமை இரண்டாவது அழைப்பை விடுத்திருந்தது.

முதல் அழைப்பை இலங்கை அரசின் சார்பில் வெளியுறவு அமைச்சர் ரஞ்சன் விஜேரத்தினா கடந்த 12 ஆம் திகதி விடுத்திருந்தார்.

அதற்குப்பதிலளித்துமக்கள் விடுதலை முன்னணியின் செயலாளர் உபதிஸ்ஸ கமநாயக்கா சென்ற 16 ஆம் திகதி அறிக்கை ஒன்றை விடுத்தார். (அந்த அறிக்கை 21 ஆம் திகதி உதயனில் வெளியானது).

இரண்டாவது அழைப்புக்கு மக்கள் விடுதலை முன்னணியிடமிருந்து சாதகமான பதில் விரைவில் எதிர்பார்க்கப்படுகிறது.

பதில் கிடைத்ததும் பூர்வாங்கப் பேச்சுக்களை நடத்துவதற்கான ஒழுங்குகளை அரசு மேற்கொள்ளும் என்று அரசின் சிரேஷ்ட பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

தமிழக மீனவர்களை விடுவிக்க பேச்சு நடத்த வேண்டும்

சட்டசபையில் கலைஞர் வேண்டுகோள்

தலைமன்னாரில் இலங்கை அதிகாரிகளால் தடுத்து வைக்கப்பட்டுள்ள இரண்டு தமிழக மீனவர்களை விடுவிப்பது பற்றி இந்திய - இலங்கை அரசுகள் பேச்சுக்கள் நடத்தவேண்டும்.

தமிழ்நாடு சட்டசபையில் முதலமைச்சர் மு. கருணாநிதி இந்த வேண்டுகோளை விடுத்தார்.

சென்ற 14 ஆம் திகதி ஐந்து தமிழக மீனவர்களை இலங்கை அதிகாரிகள் கைது செய்தனர். அவர்களில் மூவர் பின்னர் விடுதலை செய்யப்பட்டனர்.

எஞ்சிய இரண்டு பேர் இன்னமும் விடுவிக்கப்படவில்லை என்றும் முதலமைச்சர் தெரிவித்தார். (ஒ-எ)

தென் பகுதியில் இரு கண்ணிகள்

கொழும்பு, ஏப்ரல் 22

கடந்த புதன்கிழமை தென் பகுதியில் நடந்த இரண்டு தனித்தனி நிலக்கண்ணி வெடிச் சம்பவங்கள் நடந்தன.

எனினும் இலங்கை இராணுவச் சிப்பாய்கள் பதினைந்து பேர் அதிர்ஷ்டவசமாக உயிர்தப்பினர்.

ஒன்று கம்புறுப்பிட்டி, காட்டப்பொல வீதியிலும், இரண்டாவது மித்தெனியாவிலும் இடம்பெற்றன.

இராணுவ வாகனங்கள் அந்த இடங்களை அடைவதற்குச் சில நிமிடங்களுக்கு முன்னர் நிலக்கண்ணிகள் வெடித்து விட்டன.

நிலக்கண்ணி வெடிகள் ஒவ்வொன்றும் பத்து கிலோ எடை கொண்டது என்று தெரிவிக்கப்பட்டது. [ஒ-எ]

மீளக் குடியமர்த்தும் பணிக்கு ஆஸ்திரேலியாவும் உதவும்

கொழும்பு, ஏப்ரல் 22

ஐ நா. அகதிகள் புனர்வாழ்வு தூதரகத்தின் வரை

தேயிலை உற்பத்தி வீழ்ச்சி!

கொழும்பு, ஏப்ரல் 22

தேயிலை உற்பத்தியில் 70 சத வீத வீழ்ச்சி காணப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டது.

தென் பகுதியில் இடம்பெறும் வன்செயல்கள் வரட்சி காரணமாகவே இவ் வீழ்ச்சி காணப்படுவதாகவட மேற்கு மாகாண தோட்டத்துரைமார் சங்கக்கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது. [ஒ-எ]

யறுக்கப்பட்ட உதவித்திட்டத்தின் கீழ் இந்தியாவில் இருந்து திரும்பும் இலங்கைத் தமிழ் அகதிகளை மீளக்குடியமர்த்தும் பணிக்கு ஆஸ்திரேலியா ஒரு லட்சம் டாலர் பணத்தை கொடுக்க இருக்கிறது.

கொழும்பில் உள்ள ஆஸ்திரேலியத் தூதரகம் விடுத்த செய்தி அறிக்கையில் இத் தகவல் தெரிவிக்கப்பட்டு உள்ளது. [ஒ-எ]

பாட்டி விட்ட தவறினால் ஐவரின் உயிர் யமனிடம்!

லிமா, ஏப்ரல் 22

பாட்டி விட்ட தவறினால் பாட்டி, அவரது கணவர், அவர்களின் மூன்று பேர்த்திகள் ஆகியோரின் உயிர் யமனிடம் போய்ச் சேர நேர்ந்தது.

''சூப்''பிற்கு மாவு சேர்க்க வேண்டும் பாட்டியோ அதற்குப் பதிலாக 'அல்ட்ரின்' என்ற கிருமிநாசினியைத் தவறுதலாகக் கலந்து விட்டார்.

அதை உண்ட ஐந்து பேரும் பின்னர் உயிரிழந்தனர்.

இது நடந்தது இங்கு அல்ல பெரு நாட்டில். [ஒ-எ]

கர்நாடக சட்டசபை நேற்றுக் கலைக்கப்பட்டது!

பொம்மை அரசு கவிழ்ந்தது!!

புதுடில்லி, ஏப்ரல் 22

கர்நாடக சட்டசபை கலைக்கப்பட்டது. முதலமைச்சர் பொம்மை தலைமையிலான அரசு கவிழ்ந்தது.

ஜனாதிபதி ஆட்சி கர்நாடகத்தில் கொண்டுவரப்பட்டிருப்பதாக உள்துறை அமைச்சர் பூட்டாசிங் நேற்று நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

222 உறுப்பினர்களைக் கொண்ட சட்டசபையில் திரு. பொம்மை அரசுக்கு 108 உறுப்பினர்களின் ஆதரவே இருந்தது.

பெரும்பான்மைப் பலத்தைப் பொம்மை அரசு இதனால் இழந்து விட்டது.

மாற்று அரசை அமைக்கக் கூடிய நிலையில் ஏனைய எதிர்க் கட்சிகளும் இல்லை.

இவ்வாறு கர்நாடக ஆளுநர் வெங்கடசுப்பையா சமர்ப்பித்த அறிக்கையைத் தொடர்ந்தே ஜனாதிபதி ஆட்சி பிரகடனப்படுத்தப்பட்டிருப்பதாக உள்துறை அமைச்சர் பூட்டாசிங் மேலும் தெரிவித்தார். (அ-எ)

பாதுகாப்பு நிலைமை குறித்து சபையில் விவாதம் தேவை

சுதந்திரக் கட்சி கேட்கிறது

கொழும்பு, ஏப் 22

நாட்டின் பாதுகாப்பு நிலைமை பற்றி நாடாளுமன்றத்தில் விவாதம் நடத்த ஒரு நாளை ஒதுக்கித்தரும்படி சுதந்திரக்கட்சி சபாநாயகரை கேட்டுள்ளது.

வருகிற 28 ஆம் திகதி விவாதத்தை நடத்த அனுமதிக்கப்படுவது நல்லது என்று சபாநாயகருக்கு எழுதிய கடிதத்தில் சுதந்திரக்கட்சி தெரிவித்துள்ளது.

திருகோணமலைக் கார்க் குண்டு வெடிப்புச் சம்பவம், வெலிஓயா நிலக்கண்ணித் தாக்குதல் உட்பட பல சம்பவங்கள் பற்றி விவாதிக்க வேண்டியிருக்கிறது.

நாட்டின் பாதுகாப்பு நிலை மோசமாகிவருகிறது. முந்திய நாடாளுமன்றத்தில் மாதாமாதம் அவசரகாலச் சட்ட நீடிப்பு பிரேரணை விவாதத்துக்கு வந்தது. அதனால் பாதுகாப்புநிலை பற்றி விவாதிக்கக்கூடியதாக இருந்தது.

இப்படி சுதந்திரக்கட்சி தனது கடிதத்தில் தெரிவித்துள்ளது. ஒ - எ]

பாடசாலைகள் 24 ஆம் திகதி ஆரம்பமாகும்

கொழும்பு, ஏப்ரல் 22

ஏற்கனவே அறிவித்தபடி நாளை மறுதினம் 24 ஆம் திகதி பாடசாலைகள் இரண்டாம் தவணைக்காகத் திறக்கப்படும் என்று அரசு நேற்று அறிவித்தது [ஒ]

சோவியத் தூதரகம் மீது ஷெல் தாக்குதல்

காபூல், ஏப்ரல் 21

காபூலில் உள்ள சோவியத் தூதரகம் கெரில்லாக்களின் ஷெல் தாக்குதலுக்கு இலக்கானது.

அதிஷ்டவசமாக தூதரக அதிகாரிகள் எவரும் காயமடையவில்லை என்று டாஸ் செய்தித் ஸ்தாபனம் அறிவித்தது. [ஒ-எ]

உலக சந்தையில் செயற்கை ரத்தம்

மனித இரத்தத்துக்குப் பதிலாக செயற்கை ரத்தம் உலக சந்தையில் விற்பனைக்கு வரவுள்ளது.

இந்தச் செயற்கை இரத்தம் எந்த குரூப் இரத்தம் உள்ளவர்களும் பயன்படுத்தக் கூடியது.

அமெரிக்காவில்சிக்காகோ நகரில் உள்ள நோர்த்பில்ட் ஆய்வு கூட நிறுவனமும் சுவீடன் நாட்டு நிறுவனம் ஒன்றும் கூட்டாக செயற்கை இரத்தம் தயாரிக்க ஒப்பந்தம் செய்து கொண்டுள்ளன.

தென்பகுதி-----

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

நடத்தப்படுகின்றன.

இதற்குத் தாக்குப் பிடிக்கு மாற்போல இலங்கை ஆயுதப் படையினரும் தங்கள் உத்திகளையும் செயற்பாட்டு முறைகளையும் மாற்றி வருகின்றனர் என்று பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

நிலத்தில் புதைத்து வைக்கப்பட்டுள்ள கண்ணி வெடிகளைத் தவிர்க்க கால்நடை ரோந்துகளும் அதிகரிக்கப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது' (ஒ-எ)

படை முகாம் அகற்றப்பட்டது

யாழ்ப்பாணம், ஏப்ரல் 22

யாழ். மாநகரசபை வளவில் அமைக்கப்பட்டிருந்த இந்தியப் படையினரின் முகாம் தற்பொழுது அகற்றப்பட்டுள்ளது.

இதேவேளை இருபாலை — கோண்டாவில் வீதியில் அமைக்கப்பட்டிருந்த முகாமும் மாற்றப்பட்டுள்ளது. (ஒ-10)

● அவரும் ஒருவர்!

கொழும்பு, ஏப்ரல் 22

ஒருவாரகால போர் நிறுத்தத்தின் போது சரணடைந்தவர்களில் ஒருவர் முன்னாள் கல்விச் சேவைகள் மற்றும் புனர்வாழ்வு அமைச்சர் லயனல் ஜயத்திலகாவைக் கொலை செய்ததாக சந்தேகிக்கப்படுபவரும் அடங்கியுள்ளார்.

இத்தகவலை அரசு வட்டாரங்கள் நேற்று வெளியிட்டன. [அ-எ]

பெண் உட்பட மூவர் கொலை

கொழும்பு, ஏப் 22

கட்டுக்காஸ்தோட்டையில் நடந்த திங்கட்கிழமை இரவு தொம்பேதம்மன, வத்துவெல ஆகிய கிராமத்தில் ஒரு பெண் உட்பட 3 பேர் இனந்தெரியாதோரால் கொல்லப்பட்டனர். [ஒ - எ]

பண்ணாகம்-----

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

சேர்க்கப்பட்டுள்ளனர்.

இந்திரன் சந்திரலேகா (வயது 33), இந்திரன் அன்பழகு (வயது 10) [illegible] அந்த இருவருமாவர். [illegible]

மரண அறிவித்தல்கள்

திரு. க. ஆனந்த நடராஜா

[Engin er District of Railway]

இல. 75, பிறவுண் வீதியைச் சேர்ந்த க. ஆனந்த நடராஜா 20. 4. 89 அன்று காலமாகி விட்டார் இவர் மகேஸ்வரியின் அன்புக் கணவரும், மதீதன் (Engineer-U. K) அமீலன் [Medical College, Ragama] அனுஷா ஆகியோரின் அன்புத் தந்தையும், காலம்சென்ற திரு. கனகரத்தினம், திருமதி சி. கனகரத்தினம் அவர்களின் மருமகனும், திருமதி செல்லம்மாவின் அருமை மசனும், திரு. சுப்பிரமணியத்தின் பெருமகனும், திருமதி சரஸ்வதி தர்மராஜா, திருமதி சுசீலா ஜெயபாலன் (Canada), திருமதி பத்மாவதி சபாநாதன் (U. K). திரு. சதானந்தன் [Canada] அவர்களின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் 23. 4. 89 ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் கோம்பயன் மணல் மயானத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டு தகனம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
மனைவி, மக்கள்.

75, Brown Road
Jaffna. [233]

செல்வி குகமூர்த்தி சத்தியதேவி

யாழ்ப்பாணம், கந்தர்மடம், இல. 259, நாவலர் வீதியைச் சேர்ந்த வைத்திய கலாநிதி குகமூர்த்தி, [யாழ், தொலைத்தொடர்புத் திணைக்கள உத்தியோகத்தர்] சிவசக்தி தம்பதிகளின் சிரேஷ்ட புத்திரி சத்தியதேவி [வேம்படி மகளிர் கல்லூரி மாணவி] அகால மரணமானார். இவர் வேலாயுதமூர்த்தி [யாழ் இந்துக்கல்லூரி மாணவன்], ராஜகேவி [வேம்படி மகளிர் கல்லூரி மாணவி] ஆகியோரின் சகோதரியுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 22-04-89 இன்று சனிக்கிழமை மாலை 3 மணிக்கு நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரிகைகளுக்காக கோம்பையன்மணல் மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படுமென உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

தகவல்: வைத்தியகலாநிதி குகமூர்த்தி
[10654]

மரண அறிவித்தல்கள்

இராசையா ஜெகசிலகிருஷ்ணன் (இன்பம்)

ஆனைக்கோட்டை இல, 10 லோட்டஸ் வீதியைச் சேர்ந்த இராசையா ஜெயசிலகிருஷ்ணன் (இன்பம்) அகாலமரணமானார். இவர் இராசையா தங்கச்சிப் பிள்ளையின் அன்புப்புதல்வனும், வாடாமலர், ஜெகராஜா, ஜெநதீசன் (ஆயுள்வேத வைத்தியர்), ஜெயக்குமாரி, ஜெகநாதன், ஜெகறூபன் (சவூதிஅரேபியா), ஆகியோரின் தம்பியுமாவார். அன்னாரின் பூதவுடல் 22-4-89ஆம்திகதிஇன்றுசனிக்கிழமைமாலை4-00மணியளவில் கோம்பயன்மணல் மயானத்தில் தகனம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

இல 10, லோட்டஸ் வீதி,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.

தகவல்:
இ. ஜெகராஜா.
[10653]

திருமதி ஞானம்மா நடராசா

திருமதி ஞானம்மா நடராசா 20 - 04 - 1989 இல் காலமானார். அன்னார் காலம் சென்ற செல்லையா நடராசா [இளைப்பாறிய புகையிரத இலாகா, ஓடிற்றர்] யின் அன்பு மனைவியும், ஞானசவுந்தரி, புஸ்பவதி,, பாலாம்பிகை [உப அதிபர், வேம்படி மகளிர் கல்லூரி] இராசலட்சுமி ஆகியோரின் அன்புத் தாயாரும், திரு. V. S, இராமநாதர் [இளைப்பாறிய கூட்டுறவு உதவி ஆணையாளர்] திரு. M. மகாதேவா [இளைப்பாறிய உப அதிபர், முத்துத்தம்பி வித்தியாசாலை], திரு. K. புவனேந்திரராஜா [ஆசிரியர், வைத்தீஸ்வராக் கல்லூரி], திரு. C. V. இராஜேந்திரம் [ஆசிரியர்] ஆகியோரின் அன்பு மாமியாரும், திரு. ஏ. அருளானந்தம் திருமதி அன்னரத்தினம் செல்லத்துரை ஆகியோரின் அன்புச் சகோதரியும், திருமதி சித்திரலேகா சரவணமுத்து, திருமதி சுமித்திரலேகா விஜயகுமார் [U.K.] வசந்திதேவி, மோகனா [கூட்டுறவுப் பரிசோதகர்], ரோகினி ஆகியோரின் அன்புப் பேத்தியாரும், சசிகுமார், பிரசன்னா [Jaffna Hindu College] வினோஜன் [U.K.] ஆகியோரின் அன்புப் பூட்டியுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் கொக்குவில் கே. கே. எஸ். வீதி [Spring] இல்லத்தில் இன்று 22-04-89 சனிக்கிழமை நடைபெற்று காலை 9. 00 மணிக்கு பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். தயவு செய்து இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
மு. மகாதேவா

''Spring''
K. K. S. Road,
Kokuvil. [228]

இன்னாசிமுத்து றோசமுத்து

நாரந்தனையைச் சேர்ந்த இன்னாசிமுத்து றோசமுத்து அவர்கள் காலமாகிவிட்டார். இவர் காலஞ்சென்ற பாவிலுப்பிள்ளை இன்னாசிமுத்து அவர்களின் அன்பு மனைவியும், திரேசா, அல்பிறெட் (வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்), பிலோமினா (இளைப்பாறிய ஆசிரியை), பிரான்சிஸ் சேவியர் (சட்டத்தரணி, யாழ். மனித உரிமையகம்), மரியதாசன் (அதிபர், குளமங்கால் றோ. க. வித்தியாலயம்), யுஸ்தீனா (பவுலின்) ஆகியோரின் அன்புத் தாயாரும், அருளப்பு (இளைப்பாறிய அதிபர் கன்னாட்டி), காலம்சென்ற றஞ்சி, இராசேந்திரம் (இராஜாங்க அமைச்சு), திலகம், வசந்தி, காலம் சென்ற ஞானகுரியர் ஆகியோரின் மாமியாரும், வைத்திய நிபுணர் யோசவ் (லண்டன்), கலாநிதி அருள், யசிந்தா, எட்வேட் இராசநாயகம், வசந்தா (கனடா) கலாநிதி W. G. இராசேந்திரம் (அவுஸ்திரேலியா), தியாகநாதன் (பிரான்ஸ்), மாலினி, N. G. இராசேந்திரம் (லண்டன்), சுதாகரன் (கனடா), நந்தினி (லண்டன்), சாந்தினி, றஜனி (லண்டன்), B. C. இராசேந்திரம் (லண்டன்), யஸ்மின் (கனடா), ஜெகநாதன் (லண்டன்), ரூதி (கனடா), குணன், காலஞ்சென்ற ரெனி, நிசா, மொறின், சுகி (கனடா), நியூட்டன், நிகால், நிக்கிலன், வில்சன், சுரேன் (பிரான்ஸ்), சுஜித் [கனடா] ஆகியோரின் அன்புப் பேத்தியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் 23-04-1989 இன்று சனிக்கிழமை பிற்பகல் 3-45 மணிக்கு நாரந்தனை பண்ணைவீதியிலுள்ள அவரது இல்லத்தில் இருந்து சம்பேதுறு, சம்பாவிலு ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுப்பதற்காக எடுத்துச் செல்லப்பட்டு, நாரந்தனை சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

தகவல்:
குடும்பத்தினர்

[229]

திரு. முத்தையா செல்லையா

தொழில் திணைக்கள உத்தியோகத்தரும், தொழிற்சங்கவாதியுமான முத்தையா செல்லையா அகாலமரணமானார்.

இவர் ஜெசியின் அன்பான கணவரும், வாசுகி [பட்டதாரி ஆசிரியை - அல்கிசரா முஸ்லிம் மகா வித்தியாலயம் - கொழும்பு), சுபத்திரா, கோகிலா, மைதிலி [யாழ். பல்கலைக்கழகம், கலைப்பீடம்], இளங்கோ நக்கீரன் [கொழும்பு பல்கலைக்கழகம்] ஆகியோரின் பேரன்புத் தந்தையுமாவார்.

அன்னாரின் பூதவுடல் ஜி. பி. எஸ் வீதி, கல்வியங்காடு இல்லத்திலிருந்து 22-04-89 சனிக்கிழமை மு. ப. 10.30 மணிக்கு தகனக் கிரியைக்காக இருபாலை மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளுங்கள்.

தகவல்:
உறவினர்.

கல்வியங்காடு. [10652]

ஒப்புநோக்குநர் பதவிகள்

உதயன் நிறுவனத்தில் ஒப்புநோக்குநராகப் பணிபுரிவதற்கு தகுதியானவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விண்ணப்பதாரர் பின்வரும் தகைமைகளைப் பெற்றிருக்க வேண்டும்.

ஆகக் குறைந்தது ஜீ. சீ. ஈ. உயர்தரத்தில் மூன்று பாடங்களில் சித்தி அடைந்திருத்தல் அவசியம்.

தமிழில் நிரம்பிய புலமையும், ஆங்கிலத்தில் போதிய தேர்ச்சி உடையவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

25 வயதுக்கும் 30 வயதுக்கும் இடைப்பட்டவர்களாக இருத்தல் வேண்டும்.

பகல், இரவு மாறிமாறிப் பணியாற்ற ஆயத்தமாக இருக்க வேண்டும். முன் அனுபவம் உடையவர்களுக்கு மேற்கண்ட வயதெல்லை, கல்வித் தகைமை கட்டாயம் என்பதில்லை.

ஏற்கனவே பத்திரிகை அலுவலகங்களில் பணிபுரிந்தவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படுவதோடு நல்ல சம்பளமும் பேசித் தீர்மானிக்கப்படும்.

29-04-1989 ஆம் திகதிக்கு முன்னர் இரண்டு நற்சான்றிதழ்கள் அத்தாட்சிப்பத்திரங்களின் பிரதிகளுடன் கீழ்க்கண்ட விலாசத்துக்கு மனுச் செய்யவும்:-

முகாமையாளர் (ஆளணி)
நியூ உதயன் பப்ளிக்கேஷன்ஸ் லிமிட்டெட்,
292/2, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

[illegible] யாழ்ப்பாணம், நாவலர் வீதி, 292/2 இல் உள்ள அச்சகத்தில் 22—04—1989 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது

பெரடெனியா இன்ஸ்ரிரியூட்
கொக்குவில்
A/L 91

இந்து நாகரிகம், தமிழ்: பாலா
அளவையியல்: சந்திரராஜா
அரசியல்: செபராஜா
வரலாறு: புஸ்பரத்தினம்

அனுமதிக்கு முந்துங்கள்!

சுஞ்சீவி சஞ்சிகை

22 - 04 - 1989 சனிக்கிழமை

பெரடெனியா இன்ஸ்ரிரியூட்
கொக்குவில்
A/L 91

கணக்கியல்: வன்னியசிங்கம்
வர்த்தகம்: தேவா
பொருளியல்: உதயன்
புவியியல்: வேலாயுதபிள்ளை

வகுப்புகள் ஆரம்பமாகிவிட்டன.

கருத்துக் கலசம்

இரத்த தானம்

மனித வாழ்வில் ஒவ்வொருவனும் செய்யவேண்டியவற்றில், பிரதானமானவற்றில் தானங்களும்அடங்கும். தானம் வழங்கவேண்டியதன் அவசியத்தை, தர்மங்கள், சமயங்கள் வலியுறுத்தும்.

தானம் செய்வதற்குத் தகுதி தேவையில்லை; தாராதரம் அவசியம் என்பதில்லை. மனவிருப்பம், மனப்பக்குவம் ஒன்று இருப்பின் அதுவே தானம்வழங்க நிலையான, உறுதியான தகுதியும், தராதரமும் ஆகும்.

பெரியோர்கள், அறநூலோர் சொல்லிவைத்த தானங்கள் யாவுமே சிறப்புடையவையே; நல்வினை பயப்பவைதான். ஆனால் உயிர்த்தானம், உயிர்த்தியாகம் என்பது எல்லாத் தானங்களையும் விட மேலான மகிமை உடையதாகும். இது எல்லோராலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒன்று.

இரத்ததானமும் உயிர்த்தியாகத்துக்கு ஒருவிதத்தில் நிகரானதே. ஏனெனில் இரத்ததானம் அடுத்தவன் உயிரைக் காப்பாற்ற உதவுவது.

இவ்வளவு மகிமைமிக்க இரத்ததானம் செய்வதற்கு இப்பிரதேச வாழ் மக்களின் மனம் இன்னும் பக்குவப்படவில்லை என்பது பெரும் வேதனைக்குரிய விடயம்.

உயிராபத்து உள்ள நோயாளியைக் காப்பாற்றுவதற்கு வேண்டிய இரத்தம் இல்லாமல் ஆஸ்பத்திரிகளில் டாக்டர்கள் கஷ்டப்படுகிறார்கள். இரத்தத்தைச் சேமித்து வைக்க வங்கி வசதி இருந்த போதிலும், தேவைப்படும் அளவில் இரத்தம் கிடைப்பதில்லை.

இந்த நிலைமை குறித்து எல்லோரும் வெட்கப்பட வேண்டும்!

ஏனைய நாடுகளின் தனியார் நிறுவனங்கள் கூட, இரத்த வங்கிகளை நடத்தி தேவைப்படுவோருக்கு, சத்திரசிகிச்சைகளுக்கு உட்பட வேண்டியவர்களுக்குத் தாராளமாக இலவசமாக இரத்தம் வழங்குகின்றன. அதை அவை ஒரு மக்கள் தொடர்பு சேவையாகச் செய்கின்றன.

இப்பகுதியில் உள்ள தனியார் நிறுவனங்கள், தொண்டர் ஸ்தாபனங்கள் என்பன இரத்ததானம் செய்வதற்கு மக்களை ஊக்குவிக்க வேண்டும்.

ஏனைய நாடுகளைப் போலவே எங்கள் பகுதியிலும் இரத்தம் தேவைப்படும் ஒருவர் சிரமமின்றி அதனைப் பெறுவதற்கு எப்போது வழி பிறக்கும்?

மக்கள் மனமுவந்து இரத்த தானம் செய்யும் காலம் விரைவில் மலர வேண்டும். இப்போதைய நிலைமை மாறவேண்டும். அதுவே மனிதன் மனிதனுக்குச் செய்யும் மாபெரும் உதவி. ★

இறைவனிலும் விட சிறந்தது எது? சுங்கப் புலவனின் புதிய பார்வை

- வே. வரதசுந்தரம் -

'திருமாலே! உன்னிலும் சிறந்தது! உனது திருவடி'! இவ்வாறு பாடினார் ஒரு பழந்தமிழ்ப்புலவர்.

திருமாலின் நீலத் திருமேனிக்கு – மையையும், மரகதத்தையும், மழைமுகிலையும், மறிகடலையும் விஞ்சிய அவனது அழகுக்குக் கிட்டாத பெருமை அவனது திருவடிக்குக் கிடைத்துள்ளது.

திருமாலின் பரந்த மார்பிலே புனைமறுப்போன்று காணும் திருமகளுக்குக் கிட்டாத அப்பேறு—

அவன் அணிந்துள்ள நறுமணம் கமழும்துழாய்மாலைக்கு எட்டாத சிறப்பு—

அவன் தன் அழகிய நீலத் திருமேனியில் உடுத்தியுள்ள பொன்னுடைக்கு வராத பெருமை—

அவனுடைய அழகான சிவந்த தாமரைக் கண்கள் பெறாத பெரும்பேறு—

அவன் கையில் தாங்கியுள்ள கொடியில் காணும் கருடனுக்குக் கிடைக்காத சிறப்பு—

அவனது திருவடிகளுக்குக் கிடைத்துள்ளது.

இயற்கையில் இறைவனைக் கண்டு இன்புறுகின்றார்கள் அடியவர்கள்.

இயற்கை அழகிலே இறைவனது இயல்புகளைக்கண்டு துள்ளிக் குதிக்கிறார்கள்.

இறைவன் திருவருள் பெருக்கினை இயற்கை வளத்தில், வனப்பில் கண்டு ஆனந்தப் பெருக்கில் திளைக்கின்றார்கள் பக்தர்கள்.

இந்த வரிசையில் இடம் பெறுகிறார் பழந்தமிழ்ப் புலவன் கடுவன் இளஎயினனார். இவரது பாடல் பரிபாடலில் கடவுள் வாழ்த்தாக அமைந்துள்ளது.

வெண்பா முதலிய நால்வகைப் பாக்களின் அடிகளும் விரவி வரும் ஒருவகை இசைப்பா இது.

பெட்டகனார் இசைவகுத்த இப்பாடலுக்குரிய பண்—பாலை.

எழுபத்து மூன்று அடிகளைக் கொண்ட இப்பாடல் திருமாலின் திருமேனி அழகை, திருஅவதாரச் சிறப்பை, திருவருள் மாட்சியைப் பாடுகிறது.

அப்புலவன் பாடுவதைப் பார்ப்போம்:-

இறைவா! தியதைச்சாடி நல்வடியார்களுக்குக் கதகதப்பைத்தரும் உனது வெப்பத்தையும், இருளைப் போக்கும் ஒளியையும் நான் கதிரவனிடம் கண்டுமகிழ்கின்றேன்.

நின் - வெம்மையும், விளக்கமும் ஞாயிற்றுஉள.

இறைவா! உனது ஈரநெஞ்சத்தை, அருள் திறத்தினை சந்திரனிடத்துக்கண்டு களிப்படைகிறேன்.

நின் - தண்மையும் சாயலும் திங்கள் உள.

இறைவா!உனது கொடைத் திறத்தை நெடுந்தொழிலில் தான் நல்கும் மழையிடத்துக் கண்டு மகிழ்கின்றேன்.

நின் - சுரத்தலும் வண்மையும் மாரி உள.

இறைவா உயிர்களைப் பேணிப் பாதுகாக்கும் உனது காத்தல் இயல்பை, பொறை உணர்வினை நிலத்தில் காண்கிறேன்.

நின்- புரத்தலும் நோன்மையும் ஞாலத்து உள.

இறைவா! உனது நறுமணத்தையும், வண்ணத்தையும், பொலிவையும் காயாம்-பூவில் கண்டு களிப்படைகிறேன்.

நின்- நாற்றமும் ஒண்மையும் பூவை உள.

இறைவா! உனது தோற்றத்தையும், விரிவையும் நீரிலே கண்டு வியக்கிறேன்.

நின்- தோற்றமும் அகலமும் நீரின் உள.

இறைவா! உனது வடிவத்தையும், ஒலியின்பத்தையும் வானின் வனப்பில் கண்டு வற்றாத இன்பம் அடைகிறேன்.

நின்- உருவமும் ஒலியும் ஆகாயத்து உள.

இறைவா! உனது அவதாரத்தையும், ஒடுக்கத்தையும் காற்றில் கண்டு களிப்புவகை அடைகிறேன்.

நின்- வருதலும் ஒடுக்கமும் மருத்தின்உள.

இப்படியெல்லாம் இயற்கை அழகில் இறைவனைக் கண்ட புலவன் இறைவனது திருவடிகளுக்குத் தனிச்சிறப்புண்டு என்று வாழ்த்துகிறான்.

வேறெந்த புலவனும்' அடியாரும், பக்தனும் வழங்காத தனிப்பெருமையை கடுவன் இள எயினனார் இறைவன் திருவடியில் காண்கின்றார். ஒரு புதுப்பார்வை. புதிய கண்ணோட்டம். ஒரு புதிய நோக்கு.

மதனுடை நோன்றாள்,
மலரடி,
திருந்து சேவடி,
பொன்னடி,

பூங்கழல்— என்று அடியார்கள் இறைவனடியை வாழ்த்தி உள்ளார்கள்.

சிவபுராணத்தில் இறைவனடியை,

வாழ்க,
வெல்க,
போற்றி—என்று பல அடிகளில் மணிவாசகப் பெருந்தகை வாழ்த்துகிறார்.

இருப்பினும் நாயன்மார்கள், ஆழ்வார்கள், புலவர்கள் பாடிய பாடல்கள் எதிலும் கடுவன் இள எயினனார் போல் திருவடிகள் வாழ்த்தப் பெறவில்லை.

'இறைவா – உன்னிலும் சிறந்தது உனது திருவடி'— என அவர் பாடுகின்றார்.

பிறவிப் பெருங்கடல் நீந்த உதவும் பிறப்பறுக்கும் பற்றுக்கோடாக, பிறப்பறுக்கும் பெய்கழல்களாக இறைவன் திருவடிகளைக் காண்கிறார் புலவர்.

திருவடி அழகினையும், திருவடிச் சிறப்பினையும், திருவடிப் பேற்றினையும் பற்றிச் சிந்தை செய்ய வைக்கும், சொல்நயம் பொருளாழம் வாய்ந்த அந்த அடி இது தான்:

நின்னிற் சிறந்த நின்தாளிணையவை!

எண்ணியவற்றை எண்ணியபடி அடைய உண்மையான தியானப் பயிற்சி உதவும்

- சுவாமி சச்சிதானந்தா -

ஒருவர் தம் உள்ளத்தை ஒரு முகப்படுத்தும் ஆற்றல் படிப்படியாக வளர்கிறது. பரம அணு என்னும் மிகச் சிறிய அளவில் இருந்து பேரண்டம் என்னும் மிகப் பெரிய அளவுவரையிலும்வளர்கிறது.

சுருக்கமாகச் சொன்னால் மனோ ஆற்றலின் வளர்ச்சிக்கு எத்தகைய வரம்பையும் அறுதியிட்டுக் கூறமுடியாது. மனத்தின் வேகத்தையும் அளவிடமுடியாது.

ஆனால் உணர்ச்சி வளர வளர மனோ ஆற்றலும் வளர்ந்து கொண்டே இருக்கும்.

உலகம் முழுவதையும் தம் ஆற்றலுக்குள் அடக்கிக் காட்டும் எல்லையற்ற சக்தி மனதுக்கு உண்டு.

மிக நுட்பமாக அணுவுக்கும் அணுவான கோணில் இருந்து எல்லாவற்றையும் தம்முள் அடக்கிக் கொண்டு இருக்கும் பிரபஞ்சத்தையும் கடந்து நிற்கும் ஒப்பற்ற ஆற்றல் மனதுக்கு உண்டு.

மனம் இத்தகைய மகத்தான எல்லையை அடையும் போது அது பரிபூரணமான இன்ப வடிவத்தைப் பெற்று உயர்ந்து விடுகிறது.

இதையே 'அணுவுக்கு அணுவாய், அப்பாலுக்கு அப்பாலாய் கணு முற்றி நின்ற கரும்பு' என்ற ஞானயோகியாகிய ஔவைப்பிராட்டியார் தம் ஞானயோக அனுபவத்தைப் பற்றிக் கூறும் போது சொல்லி இருக்கிறார்.

மனதுக்கு ஏற்படும் இந்தப் பிரமாண்டமான உருவத்தையே திருவருட்பிரகாச வள்ளலார் அன்பு உருவம், அருள் உருவம், இன்ப உருவம் என்று முத்திறல் வடிவமாகக் குறிப்பிட்டிருக்கிறார்.

அணுவைப்பல லட்சம் ஆயிரம் ஆண்டுகளுக்கு முன் இந்திய நாட்டு அறிஞர்கள் கண்டு பிடித்து இருக்கிறார்கள்.

பரம அணு என்ற சொல்லை பதஞ்சலி முனிவர் எடுத்து ஆள்வதைப் பற்றித் தெரிந்து கொள்ள வேண்டும்.

கிரேக்க ஞானியான டெமாக்கிரிட்டஸ் என்ற பேரறிஞர் சொல்லி இருப்பது போல் பரம அணு பிளக்க முடியாத ஒன்று அல்ல என்பதை பதஞ்சலி முனிவரின் அனுபவத்தின் மூலமாக உணர்ந்து கொள்ளலாம்.

இன்றைய விஞ்ஞானிகள் அணுவைப் பிளந்தும், சேர்த்தும் பல அற்புதங்களைச் செய்து வருகின்றனர்.

அணுவுக்குள் இருக்கும் பரம அணு, அணுவைவிட மிகச் சிறியது என்பதை பதஞ்சலி முனிவர் தம் அனுபவத்தின் வாயிலாகப் பார்த்து இருக்கிறார்.

பரம அணுவை விடச்சிறியது கதிர் அணு. கதிர் அணுவை விடச் சிறியது வால் அணு என்று திருவருட்பிரகாச வள்ளலார் சொல்கிறார்.

இதை மிகச் சிறிய அணுத்துகள் என்றும் மூலகாரண அணு என்றும் சொல்லலாம்.

இதுதான் உடம்பின் மிக நுட்பமான பாகத்தில் தலை உச்சியில் விளங்கும் இறைவன் என்று ஞான யோகிகள் சொல்கின்றனர்.

இறை என்ற சொல்லுக்கு மிக நுண்ணியது என்றே பொருள்.

நம் மனதிற்கு எட்டாத எந்தப்பொருளும் இந்தப் பிரபஞ்சத்தில் இருக்க முடியாது.

தியான ஆற்றல் வளர, வளர மனோ ஆற்றலும் வளருகிறது. அது இறைவனையும் உறுதியாகப் பற்றிக்கொள்கிறது என்று பதஞ்சலி யோகத்தில் கூறப்பட்டுள்ளது.

யோகி என்பவர் யார்? என்ற கேள்விக்கு பதஞ்சலி சூத்திரங்கள் விளக்கம் தருகின்றன.

தியான ஆற்றலால், ஓர் ஆணோ, பெண்ணோ உண்மையான யோகியாக உயர்ந்து விளங்க முடியும்.

இதுதான் எல்லாவற்றையும் அளக்கும் ஆற்றல் உடைய தியானம் ஆகும்.

ஏதோ ஒரு சம்பிரதாயமாக ஒவ்வொரு நாளும் தியானத்தில் உட்கார்ந்து எழுந்து விடுவதும் பிறகு சினிமா, தொலைக்காட்சி முதலியவற்றைப் பார்த்து மகிழ்வதும் தியானம் செய்வதாகாது.

அருள் ஆற்றல் பெறும் லட்சியத்தை நோக்கித் தியானம் செய்வதுதான் உண்மையான தியானப் பயிற்சி ஆகும்.

இதைத்தான் அருட்பிரகாச வள்ளலார் 'இருந்து அறியேன். இருந்தவரை ஏற்றிடவும் அறியேன்'— என்று சொல்கிறார்.

தியானம் உண்டானால் இந்த உலகில் எல்லாவற்றையும் அடைய முடியும் என்பதை 'செல்வங்கள் யாவும் உண்டாகும். தியானம் உண்டாகில் அரசே' என்று வள்ளலார் பாடுகிறார்.

இதுவரையில் சொல்லப்பட்டிருக்கும் தியானப் பயிற்சி முறைகளில் ஏதாவது ஒன்றைக் கடைப்பிடித்து வர வேண்டும். அப்போது உண்மையான யோகியாக யாரும்உயர்ந்து விளங்கலாம். எண்ணியவற்றை எல்லாம் எண்ணியபடி அடைந்து இன்புறலாம்.

எந்தப் பொருளைத் தியானத்துக்குத் தேர்ந்தெடுத்துக் கொள்ளலாம் என்பது அவரவர் மனநிலைக்கும் விருப்பத்துக்கும் உரியதாகும்.

பரம அணு முதல்பரமன் திருவடி வரையில் எந்தப் பொருளையும் தியானத்துக்கு உரிய பொருளாகத் தேர்ந்து எடுத்துக் கொள்ளலாம்.

பகைமையை நீக்கி நட்பைப் பெருக்கிக் கொள்ளவும் தியானம் உதவும்.

புகை நடுவிலும் தீ இருப்பதைப் பூமியில் க...டோமே!

பகை நடுவிலும் அன்பு உருவான நம் பரமன் வாழ்கின்றான்!

–இப்படி மகாகவி பாரதியாரும் பாடிப் பரவுகிறார்.

நண்பர்களுக்கு நல்லதைச் செய்வதைவிட, பகைவர்களை நண்பர்களாக்கிக் கொள்வது மிக வேகமாகச் செய்ய வேண்டிய ஒன்றாகும்.

இதைத்தான் திருவள்ளுவர்,

நட்டார்க்கு நல்ல
செயலின் விரைந்ததே
ஒட்டாரை ஒட்டிக்
கொள்ளல்—

என்று சொல்லி இருக்கிறார். ★

விடியற்காலை வேளையில் மூன்று மணியில் இருந்து ஆறு மணி வரையில் பிரம்ம முகூர்த்த நேரம் ஆகும்.

நித்திரைக்குப் பிறகு மனமும் கர்மேந்திரியங்களும் அந்த வேளையில் அமைதியாக இருக்கின்றன. அப்போது சத்வகுணம் ஓங்கி இருக்கிறது.

இந்த வேளையில் சொல்லும் தியான சுலோகங்கள் யாவும் அதிகபலன் தரமுடியும். நம்மிடத்தில் அமைதியும், நம்மைச் சுற்றி அமைதியும் நிறைந்துள்ள அந்த வேளைதான் தியானத்துக்கு மிகவும் ஏற்றது.

—பகவான்
ஸ்ரீ சத்தியசாயி பாபா

ரமழான் சிந்தனை

ரமழான் மாதத்தில் ஓரிரவு வரும். அவ்விரவில் ஜிப்ரயீல் (அலை) அவர்கள் மலக்குகள் ஒரு கூட்டத்துடன் பூமிக்கு வருகை தருகின்றார்கள். நின்ற நிலையிலும், உட்கார்ந்த நிலையிலும் அல்லாஹ்வை நினைவுகூர்ந்து கொண்டிருப்போருக்கு பிரார்த்தனை செய்கின்றனர். அந்த இரவுதான் லைலதுல்கத்ர் என்னும் இரவாகும். இன்னும் அல்லாஹ் நோன்புப் பெருநாள் தினத்தன்று தன் அடியார்களின் வணக்கம் பற்றி பிரஸ்தாபித்துக்கூறுகின்றான்.

ஸஹர் முடிவு 4-25
நோன்பு திறக்கும் நேரம் 6-20

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெண்மனம்

- செ. ரஞ்சிதம் -

சஞ்சீவி சிறுகதை

ரேகா குளித்துவிட்டு சாமி அறையினுள் கும்பிட்டுக்கொண்டிருந்தாள். அன்றலர்ந்த ரோஜாபோல விளங்கும் அவள் வாழ்க்கையை ஆண்டவன் மிகச் சோதித்துவிட்டான்.

ஏன் தான் இறைவன் நல்லவர்களின் வாழ்க்கையில் குறுக்கிடுகிறானோ. அமைதியான அவளது அழகு முகத்தில் ஒரே சோகம். அவள் கண்கள் நீண்டிருப்பதே ஓர் அழகு.

ரேகா கும்பிட்டு முடித்து வெளியில் வந்தாள். கணவனுக்கு தேநீர் கொண்டு போய்க்கொடுத்தாள். 'அந்த மேசையில் வைத்துவிட்டுப் போ' என்று எரிந்து விழுந்தான். பொங்கிவந்த அழுகையை அடக்கிக்கொண்டு தன் அறைக்குள் போய் இருந்து அழுதாள்.

ரேகாவின் தந்தை செய்த வேலைதான் அவள் வாழ்க்கையைப் பாழாக்கியது. 'அப்பா உங்களின் கடமை முடிந்துவிட்டது. நான் நரக வாழ்க்கை வாழ்கிறேனே' என்று விக்கி விக்கி அழுதுகொண்டிருந்தாள்.

தன் கடந்த கால வாழ்க்கையை நினைத்துப் பார்க்கிறாள். நிரோத் அவள் கண் முன்னால் சிரித்தான். கண்ணீர் வழிந்தபடியே இருந்தது. 'நிரோத் என் நிலையைப் பார்த்தீர்களா? உங்களுக்கு செய்த துரோகம் இப்படி அணு அணுவாய்ச் சாகிறேனே'.

★ ★ ★

ரேகாவும் நிரோத்தும் காதலர்கள். நிரோத் வங்கியில் ஒரு விகிதர். ரேகா அங்கு ரைப்பிஸ்ட். சந்தர்ப்பவசத்தால் அன்பால் இணைந்தார்கள். அவன் நினைவில் இவ்வுலகையே மறப்பாள். அவன் இல்லாது போனால் உலகே இருண்டுவிடும் என நினைப்பாள். அப்படித்தான் நிரோத்தின் நிலையும்.

ராஜன், ரேகா வசிக்கும் ஊரிலேயே வசிப்பவன். அவனுக்குத் தூரத்துச் சொந்தமும்கூட. ரேகா ஒரு நாள் வேலைக்குப் போய்க் கொண்டிருந்தாள். காரில் வந்து கொண்டிருந்தான் ராஜன். பின்னால் வந்த ராஜன்—

'ரேகா நில்லு' என்றான். அவனைப் பார்த்தாள்.

'உன்னை கல்யாணம் செய்துகொள்ள விரும்புகிறேன். உன் அபிப்பிராயம் என்ன?' என்று கேட்டான் ராஜன்.

'ஓ அப்படியும் ஒரு எண்ணமா? அந்த எண்ணம் இருந்தால் மறந்துவிடவும். சரியா' என்று சொன்னாள் ரேகா.

'ரேகா நான் நினைத்ததை சாதிப்பவன். நீ தான் என் மனைவி' என்று சவால்விட்டு விட்டுப் போனான் ராஜன்.

'சில நாட்களில் ராஜனின் அப்பா வேலாயுதம்பிள்ளை ரேகாவின் வீட்டுக்கு வருகிறார் பெண் கேட்க.

வழக்கமான உபசார சம்பிரதாய உரையாடல் முடிந்தபின் விசயத்திற்கு வருகிறார் வேலாயுதம்.

'கிருஷ்ணா நமது உறவு விட்டுப்போகக்கூடாது. ஆகவே உனது மகளை மருமகளாக்கிக் கொள்ள விரும்புகிறேன். உன் எண்ணமென்ன?'

சிறிது நேர மௌனத்திற்குப் பின் 'சந்தோச சமாச்சாரம் தான். விதி இருந்தால் நடக்கட்டுமே' என்று சம்மதித்தார் கிருஷ்ணன்.

வேலையால் வீட்டுக்கு வந்த ரேகாவை கூப்பிடுகிறார் கிருஷ்ணன்.

'சொல்லுங்கள் அப்பா'

'அம்மா உனக்கு திருமணம் செய்ய உத்தேசித்துள்ளேன்.'

ரேகாவுக்கு ஒரே அதிர்ச்சி உலகமே சுற்றியது. தந்தைக்கு என்ன பதில் சொல்வது எனத் தடுமாறினாள்.

'அ...ப்...பா இப்போது என்ன அவசரம் கல்யாணத்துக்கு. சில காலம் போகட்டுமே' என்றாள்.

'ஏம்மா இப்படிச் சொல்கிறாய். தாயில்லாத பெண் நீ. காலா காலத்தில் கல்யாணம் நடக்கணும். என் கடமை அது.'

'அப்பா எனக்கு இதில் இஷ்டமில்லை.'

'ஏன் பயப்படாமல் உன் மனதிலே உள்ளதைக் கூறம்மா' என்று சொன்னார்.

சிறு துணிவுடன் ரேகா 'நான் ஒருவரை மனதாரா நேசிக்கிறேன்' என்றாள்.

திடுக்கிட்ட கிருஷ்ணன் 'என்னம்மா இது ராஜனின் அப்பாக்கு வாக்குக்கொடுத்து விட்டேன். அதை மாற்ற முடியுமா? பேச்சிலே நறுக்கு வேணும். உன் முடிவை மாற்றிக்கொள்' என்று கலங்கினார்.

'இல்லை அப்பா என்னை மன்னியுங்கள்'— அழுதாள் ரேகா.

கோபம் பொத்துக்கொண்டு வந்தது அவருக்கு. 'என் விருப்பப்படிதான் எல்லாம் நடக்கும் இல்லாவிட்டால் தற்கொலை செய்வேன்' என்று கத்தினார். சொன்னதைச் செய்யும் பிடிவாதக்காரர் கிருஷ்ணன்.

'உனக்கு நானு அவனு வேண்டும் என நீயே முடிவு செய்' எனக் கூறிவிட்டு வெளியேறினார்.

இரு கண்களில் எதை வேண்டாம் என்பாள் ரேகா. தலை எல்லாம் ஒரே வலியாய் வலித்தது. நிரோத்தை இழந்து அவளால் வாழமுடியாது நினைக்கவே இயலாத காரியம். தன் உள்ளத்தோடு உள்ளமாய் இணைந்தவனை மறப்பதா?

திடீரென ஒரு முடிவுக்கு வருகிறாள். நித்திரைக் குளிசைகள் சிலவற்றை எடுத்து வாயில் போடப்போகும் போது அவள் அறைப்பக்கம் போன தந்தை இதைப்பார்க்கிறார்.

'ரேகா, அம்மா, என்ன செய்கிறாய்' கத்தியபடி ஓடி வந்து அதைத் தட்டிவிடுகிறார்.

'அப்பா பேதைப் பெண்ணான என்னால் என்ன செய்ய முடியும்? உள்ளம் ஒரு இடமும் உடல் வேறு இடமும் கொண்டு என்னால் வாழமுடியாதப்பா.'

'மகளே எனக்கு ஒரு நாக்கு. ஒரு சொல்தான். நாணயம் தவறினால் இந்த கிருஷ்ணன் வாழமாட்டான். உன் இஷ்டம்போல நட. என் பிடிவாதம் உனக்குத் தெரியுமே அம்மா.

'அப்பா' என்று கூப்பிட்டாள் ரேகா. சூன்யமாக எங்கோ பார்த்தபடி 'உங்களின் விருப்பம் போல செய்யுங்கள்' கூறிவிட்டு ஓடிப் போய் படுக்கையில் விழுந்து அழுதாள்.

அடுத்த நாள் நிரோத்தும் ரேகாவும் வழக்கமாகச் சந்திக்கும் இடத்திற்கு வருகிறார்கள். நிரோத் ரேகாவின் முகத்தைப் பார்க்கிறான். களையிழந்து உயிரிழந்துபோய் இருந்தாள். விஷயத்தை நிரோத்திடம் தெரிவித்தாள் ரேகா.

சிலையென, மரமென நின்றான் நிரோத். 'பெண்களே இப்படித்தானா. துரோகிகளா? என்று முணுமுணுத்தன அவன் உதடுகள்.

ரேகாவுக்கு சில நாட்களில் திருமணம் நடந்து. ரேகாவின் முதல் இரவு அன்று ராஜன் அட்டகாசமாய்ச் சிரித்தான்.

'ரேகா உன்னைப் பழிவாங்கிவிட்டேன். என்னை அன்று தூக்கி எறிந்தா பேசினாய்? உன் காதல் விவகாரம் அத்தனையும் அறிவேன். உன்னை நான் விரல் நுனியால்கூட தீண்டமாட்டேன். நமக்குள் எந்த உறவுமே கிடையாது குட்பை' என்று கூறியபடி லேற்றை அணைத்துவிட்டு உறங்கினான் ராஜன்.

இரு துருவங்களாக வாழ்ந்து கொண்டிருந்தார்கள் இருவரும். ஒருநாள் சிநேகிதியின் வீட்டுக்கு போய்விட்டு திரும்பிக்கொண்டிருந்தாள் ரேகா. எதிரில் கார் ஒன்று வந்து கொண்டிருந்தது.

காரில் அவள் கணவன் ராஜன். ராஜன் பக்கத்தில் ஒரு பெண்... அவளுக்கு மயக்கம் வரும்போல் இருந்தது. ஒருவாறு சமாளித்துவிட்டாள். ராஜன் அவளைப் பார்த்து கேலிப்புன்னகை புரிந்துகொண்டு போனான்.

சிறிது நேரத்தில் ராஜன் வந்தான். மௌனமாக தலை குனிந்தபடி கதிரையில் இருந்தாள் ரேகா.

'ரேகா அதிர்ச்சியா' என்றான் ராஜன். அதற்கும் அவள் மௌனம்.

'அதிர்ச்சியா எனக்கா? நிரோத்தைப் பிரிந்த அதிர்ச்சியைவிடவா இது அதிர்ச்சி' என்று எண்ணியது அவள் மனம்.

★ ★ ★

மறுநாள் கணவர் வேலைக்குச் சென்றதும் மரகதம்மாளின் வீட்டிற்குச் சென்றாள் ரேகா. நெஞ்சம் படபடக்க வீட்டின் வாசற் படியில் நின்றபடி 'அம்மா, அம்மா' என்று அழைத்தாள்.

'ரே...கா...' என்று எதிர்பாராத ஆனந்த அதிர்ச்சியில் தடுமாறினாள். அவளுக்கு என்னசெய்வதென்றே தெரியவில்லை.

அவளுக்கு நிரோத்தைப் பார்த்ததும் வாய்விட்டு அழவேண்டும் போலிருந்தது.

'இதென்ன கோலம் நிரோத்' என்று அழுதாள். கோலமா? இனி எப்படிப்போனால் என்ன? எனக்கு என்று என்ன இருக்கிறது இனி. அதைவிட எங்கே வந்தாய்! ஏன் வந்தாய் ரேகா? சுகமாய் இருக்கிறாயா? என்றெல்லாம் கேள்விகளை அடுக்கினான்.

'ஏன் நிரோத் தயவுசெய்து குடிக்காதீர்கள். தாடி, மீசை எல்லாம் எடுங்கள் எனக்காக எடுங்கள் நிரோத்' என்றாள் ரேகா.

'உனக்காகவா? நீ இன்னொருத்தன் மனைவி. உன் சொல்லை நான் ஏன் கேட்க வேண்டும்? யார் சொல்லையும் நான் கேட்கமாட்டேன்'

'அதுசரிதான் நீங்களும் ஒரு கல்யாணம் செய்யுங்கோ சரியாகிவிடும்' என்று அழுதாள்.

'ஓ இதுக்குத்தான் வந்தாயா?

'என்வாழ்க்கைதான் கானல் நீர். உங்கள் வாழ்க்கையுமா அழியவேண்டும்?

'ரேகா சுல்யாணம் செய்தும் கன்னி என்றாயே ஏன் ரேகா நீ சந்தோஷமாக இல்லையா? சொல் ரேகா என்று ... ...

நடந்த விஷயங்களை அழுதபடி கூறிமுடித்தாள்.

'நிரோத் உங்களைக் கெஞ்சிக் கேட்கிறேன், திருமணம் செய்து அம்மாவின் ஆசையை நிறைவேற்றுங்கள்' என்றவள் உடனே எழுந்து விறுவிறுவென நடந்து போய்விட்டாள்.

கல்லென நின்றான் நிரோத். 'அத்தெய்வமகளின் ஆசையை நிறைவேற்றப்பா' என்று புத்திமதி சொன்னாள் தாய்.

தீரயோசித்து ஒரு முடிவு எடுத்தான், அம்மா உங்கள் எண்ணம் எதுவோ அதைச் செய்யுங்கள்' என்று மனதைக் கல்லாக்கிக்கொண்டு கூறினான் நிரோத்.

★ ★ ★

ராஜன் தன் காரியாலயத்துக்கு மிக நேரத்தோடு வந்திருந்தான். காரணம் ராதாவோடு அன்று பிக்னிக்போவதாக திட்டம் போட்டிருந்தான்.

'ராதாவை வரச்சொல்லு லெற்றர் ஒன்று ரைப்பண்ண வேண்டும்' என்று பியோனிடம் மனேஜர் என்ற மிடுக்கோடு சொன்னான். அதற்கு பியோன்,

'என்னங்க தெரியாத மாதிரி கேக்கிறீங்க? அவ கல்யாணப்பெண், எப்படிங்க [illegible] சொரிந்தான்.

'என்ன விளையாடுகிறாயா? ராதாவுக்குக் கல்யாணமா?' என்ன பகிடிக் கதையெனச் சிரித்தான்.

'உங்களுக்குத் தெரியவில்லை என்றால் வீட்டை போய்ப் பாருங்க' என்று சொன்னான் பியோன்.

ராஜன், 'இது பொய்யென்றால் உன்னை என்ன செய்கிறேன் பார்' ராதா வீட்டுக்கு விரைந்தான் ராஜன்.

தூரத்தில் ராஜன் வரும் போது நாதஸ்வர ஒலி கேட்டது. ஆவேசத்துடன் காரில் வரும் அவன் காரை நிற்பாட்டி 'யாருக்குக் கல்யாணம்' எனக் கேட்கிறான். 'ராதா என்கிற பெண்ணுக்கும் என்ஜினியர் ஒருவருக்கும் திருமணம்' என்றனர். அப்படியே காரைத் திருப்பினான். மூளையே குழம்பிவிட்டது அவனுக்கு.

எங்கு போவது வருவது எனத்தெரியாமல் வரும்போது கார் ஒரு மரத்தின் மீது மோதியது. காரிலிருந்து தூக்கி எறியப்பட்டான் ராஜன். தலையில் அடிபட்டு தலையிலிருந்து இரத்தம் ஆறாக ஓடியது. மயங்கியநிலையிற் கிடந்த அவனை அடையாளம் தெரிந்த சிலர் ஆஸ்பத்திரியில் சேர்த்தனர்.

விசயம் அறிந்த ரேகா ஓடோடி ஆஸ்பத்திரிக்கு வந்தாள். 'ஐயோ இதென்ன இப்படி ஆகிவிட்டதே என்ன செய்வேன் கடவுளே' என்று அழுது கத்தினாள்.

சிறிது நேரத்தின் பின் நிரோத்தும் இவ்விஷயத்தை அறிந்து அங்கு வந்துவிட்டான். அரைமணித்தியாலம் ஆயிற்று. கஷ்டப்பட்டு கண்களைத் திறந்தான். எதிரே ரேகா. கண்களில் இருந்து கண்ணீர் ஓடியது.

'ரே...கா...' என்று மெல்லக் கூப்பிட்டான். 'என்னை மன்னிச்சிடு. தங்கமாகிய உன்னை விட்டிட்டு, போலித் தங்கத்துக்கு பின்னால் திரிஞ்சன். உன்னை அவமானப்படுத்தி கண்ணீர்விட்டு அழவைச்சன், கல்யாணம் ஆகியும் கன்னியாகவே வாழ்ந்தாய். அகம் பாவம், நான் என்ற திமிர் எல்லாம் அழிஞ்சது' என்று அவள் கைகளைப் பிடித்தான்.

நிரோத்தின் பக்கம் திரும்பி 'நிரோத் ஒரு உதவி செய்வாயா? என்று கேட்டுவிட்டு 'என் ரேகாவை உன் மனைவியாக ஏற்றுக்கொள்வாயா? நான் உயிரோடிருக்கமாட்டேன், சொல் நிரோத்' என்றான்.

நிரோத்துக்கு ஒன்றுமே புரியவில்லை. மௌனமாக சிறிதுநேரம் இருந்துவிட்டு 'ராஜன் காலம் கடந்துவிட்டது. இன்னும் சிலநாட்களில் எனக்குத் திரு...மணம்... என்னை மன்னிச்சிடு'

★ ★ ★

ஒரு மாதம் கழிந்துவிட்டது. ரேகா திரும்பவும் வேலைக்குப் போகத்தொடங்கிவிட்டாள். இப்போது அவள் ஒரு விதவை கல்யாணம் ஆகியும் கன்னியாக தூயவாழ்க்கை வாழும் ஒரு தூயவள். வெண்ணிறச்சேலை அணிந்து அன்னம் போல இதோ போய்க்கொண்டிருக்கிறாள். அவள் நெஞ்சில் இப்போது மழை, புயல் எல்லாம் அடங்கி ஒய்ந்து ஒரே அமைதி.

★

★ வாசகர் தராசு ★

25. 03. 89, சஞ்சிகையில் வெளியாகிய ''இரண்டு மனம் வேண்டும்'' கதையை வாசித்தேன். அதில், நித்தியா என்பவளின் கணவன், அவளுக்கென்றே வாழ்பவன். எனினும், அவன் ஒரு நோயாளி. சுமதியின் கணவன் பல பெண்களோடு தொடர்புடையவன்.

கதை முடிவில் ஆசிரியர், நித்தியாவின் மனதை வெளிக்காட்டினார். அவள், ஒரு உத்தமனோடு வாழ்பவள். தனது கணவனின் இறுதி நாளை எதிர்பார்த்துக் கொண்டிருப்பவள். ஒழுக்கம் தவறியவனோடு வாழும் சுமதியின் வாழ்வு, தன் வாழ்வை விட மேல் என, எண்ணுகிறாள். ஏனெனில் சுமதியின் கணவன் இறுதியில் வீடு வந்து சேர்கிறான்.

ஆனால், இப்படிப்பட்ட கணவன் வீடு வந்து சேர்ந்தாலென்ன, விட்டாலென்ன என்பதே பெண்களின் அபிப்பிராயம்.

ஆசிரியர் ஓர் ஆண்மகன் என்பதால், கதையை ஆண்களுக்குச் சார்பாக முடித்துவிட்டார்.

இக் கதையை வாசிக்கும் ஆண்கள், பெண்களின் மனதைப் பிழையாக விளங்கி — அதாவது பெண்களுக்கு ஆண்கள் வீடு போய்ச் சேர்ந்தால் போதும் என்ற மனப்பான்மைதானே. எனவே நாங்களும் ஒழுக்கம் தவறினால் என்ன? என்ற எண்ணம் உதிக்கும்.

பெண்களின் மனம் அப்படிப்பட்டதல்ல.

தனது கணவன் நோயாளியோ, குடிகாரனோ எந்த ரகமாக இருந்தாலும், ஒவ்வொரு நிமிடமும் தன்னோடுதான் வாழவேண்டும் என்ற அவாக் கொண்டவள்தான் பெண்.

''ஒருத்தனுக்கு ஒருத்தி
ஒருத்திக்கு ஒருத்தன்''
ஆண் சமுதாயமே! பெண்களை ஏமாற்றாதே!!

திருமதி. க. விக்கினராசா
மல்லாகம்.

நான்கு ரூபா பெரிது அல்ல

நாங்கள் சஞ்சீவிக்குக் கொடுக்கும் நான்கு ரூபா பெரிது அல்ல. சஞ்சீவி எங்களுக்குத் தரும் அறிவுக்கட்டுரைகள் தான் அதிகம்.

—க. பரமலிங்கம்,
லிங்கமாவிகை,
நீலிப்பந்தனை, காரைநகர்.

ஆங்கிலத்தில் பேச வேண்டும்
என்ற விருப்பம்
ஆனால்
தவறாகப் பேசிவிடுவோமோ
என்ற தயக்கம்

இதுதானே உங்கள் பிரச்சினை?

பரீட்சையில் சித்தி பெற்றவர்களிடம் கூட இக்குறை காணப்படுகிறது.

இதற்கான காரணம் நாம் பாடசாலைகளில் படித்தது
WRITTEN ENGLISH

ஆனால் நடைமுறையில் நாம் பிறரிடம்
உரையாடக் தேவைப்படுவது
SPOKEN ENGLISH

எனவே முறையான பயிற்சி இருந்தால் தான் யாருடனும் சாதாரணமாக ஆங்கிலத்தில் உரையாட முடியும்

இதனைக் கருத்திற்கொண்டு
BRIGHT TRAINING CENTRE
நிறுவனத்தினர் மிக இலகு நடையில் அமைந்த தபால் முறையில் மிகச்சிறந்த பயிற்சி நெறியினை அறிமுகப்படுத்துகிறார்கள்.

உளவியல் அடிப்படையில் மிக மிகப் புதுமையான முறையில்
SPOKEN ENGLISH
பயிற்சி நெறியினை மூன்றே மாதங்களில் கற்றுத் தேறலாம்.
விபரங்களுக்கு முத்திரையொட்டிய சுய விலாசத்துடன் தொடர்பு கொள்க.

Bright Training Centre
P. O. BOX 162, C/2024 COLOMBO.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வியர்வை சிந்த உழைக்கப் போகும் இயந்திர மனிதன் 'மேன்னி'

அமெரிக்காவில் அதிசய 'ரோபோ' மனிதன் ஒன்று தயாரிக்கப்பட்டுள்ளது.

அசல் அச்சாகவே மனிதனைப் போலவே உள்ள அந்த 'ரோபோ' வுக்கு 'வாய், மூக்கு' — ஆகியன உள்ளன.

அது சுவாசிக்கிறது. அப்படி மூக்கு விடும்போது அதன் மார்பு விரிந்து சுருங்குகிறது.

'மேன்னி' என்ற அந்த ரோபோவுக்கு மனிதனைப் போலவே தோல் இருக்கிறது.

அதற்கு வியர்வையும் ஏற்படுகிறது.

அதன் உடல் வெப்பநிலையைக் கண்டறிய முடியும். இந்த ரோபோ நடக்கிறது; குனிகிறது. கால்மேல் கால் போட்டுக்கொண்டு உட்காருகிறது; தரையில் சம்மணம் போட்டும் அதனால் உட்கார முடியும். தரையில் தவழ்ந்து செல்லவும் முடியும்.

இயந்திர மனிதன் என்ற பெயர் இதற்குப் பொருந்தும்.

அமெரிக்காவில் பாற்றலே ஆய்வுகூடம் (Battele Labo--ratories) என்னும் நிறுவனம் இதை உருவாக்கி உள்ளது.

அசல் மனிதனைப் போல (Man) உருவாக்கப்பட்டுள்ளதால் அதற்கு அந்த நிறுவனம் 'மேன்னி' என்று பெயர் சூட்டியுள்ளது.

20 லட்சம் டாலர் செலவில் உருவாக்கப்பட்டுள்ள 'மேன்னி' ரோபோ அமெரிக்க இராணுவத்தின் உபயோகத்துக்காகத் தயாரிக்கப்பட்டதாகும்.

'மேன்னி' யின் 'உடலில்' 40 மூட்டுக்கள் உள்ளன. இவற்றின் மூலம்தான் அது நடக்கிறது, தவழ்கிறது, குனிகிறது.

இந்த ரோபோவுக்குள் 12 வெப்பமூட்டும் கருவிகள் உள்ளன.

ரோபோவின் தோல் குறிப்பிட்ட வெப்பநிலையில் இருக்க இவை உதவுகின்றன.

அசல் மனிதன் மாடிப் படிகளில் ஏறினால் அல்லது அதிகப்பிரயாசை தேவைப்படுகிற பணியைச் செய்தால் உடல் சூடேறுகிறது; வியர்வை அதிகம் வெளிப்படுகிறது.

அதுபோலவே 'மேன்னி'க்கும் பல்வேறு பணிகளைச் செய்யும்போது அதற்குக் கூடுதலாக அல்லது குறைவாக வியர்வை ஏற்படுகிறது.

குறிப்பிட்ட பணிகளுக்கு ஏற்ற அளவில் வியர்வை வெளிப்பட இந்த ரோபோவுக்குள் கட்டுப்பாட்டுக் கருவிகள் உள்ளன.

ரோபோவின் எலும்புக்கூட்டுக்கு மேலாகப் பொருத்தப்பட்டுள்ள படலம்தான் தோலின் வெப்ப நிலையைக் கட்டுப்படுத்துகிறது. இப்படலத்தின் மீதுதான் தோல் அமைந்துள்ளது.

'மேன்னி'க்கு வியர்க்கிறது என்றால் அது நிஜ வியர்வை அல்ல. மிக நுண்ணிய குழாய்களில் நிரப்பப்பட்டுள்ள நீர்தான் இப்படி வியர்வையாக வெளிப்படுகிறது.

இவ்விதக் குழாய் ஏற்பாட்டின் பலனாகத்தான் 'மேன்னி'யின் மார்பு சுருங்கி, விரிந்து அது வாய், மூக்கு வழியே சுவாசிக்கிறது.

போகிற போக்கை பார்த்தால் 'மேன்னி' ஒரு நாளைக்கு மனிதனின் 'மென்னி'யைப் பிடித்துத் திருகினாலும் அதிசயப் படத்தேவையில்லை. ★

நீல நிற மீனை உண்ணலாமா?

மிகப்பெரிய மீன் ஆராய்ச்சி ஒன்று அண்மையில் அமெரிக்காவில் நடத்தப்பட்டது.

நியூயோர்க்கில் உள்ள ஆராய்ச்சி நிலையத்தில் கெத்லாக்லூட், தோமல் பிலிட்டன், புருசி ரூபின் ஆகிய மூன்று விஞ்ஞானிகள் கம்பியூட்டர் உதவியுடன் இந்த ஆராய்ச்சியை நடத்தினர்.

அமெரிக்கா மற்றும் பல நாடுகளில் கடல்களில் வாழும் மீன்கள் ஆராய்ச்சிக்குப் பயன்படுத்தப்பட்டன.

★ இம் மீன்கள் எப்படிப் பட்டது?

★ அவற்றின் உடலினுள்எப்படிப்பட்ட கிருமி இருக்கிறது?

★ இதனை உட்கொள்ளுவதால் மனிதனுக்கு எப்படிப்பட்ட வியாதிகள் வருகின்றன?

இக்கேள்விகளுக்கான விடைகளை ஆராய்ச்சி மூலம் கண்டு பிடித்தனர்.

'நீல நிறத்தில் காணப்படும் மீன்களை உண்ணாதீர்கள். வாரம் ஒரு நாள் மட்டும் மீனை நன்கு பதப்படுத்தி சமையல் செய்து உட்கொள்ளுங்கள்'— இதுவே ஆராய்ச்சியின் பின்னர் விஞ்ஞானிகள் விடுத்த அறிவிப்பு ஆகும். ★

மிகப் பெரிய சுழலும் அன்டெனா

உலகிலேயே மிகப்பெரிய சுழலும் அன்டெனாவை வத்திக்கான் வானொலி நிலையம் பயன்படுத்துகிறது.

இந்த அன்டெனாவின் உயரம் 106 மீற்றர். சிறியது 79 மீற்றர் உயரம் கொண்டது.

இந்த இரண்டு அன்டெனாவும் 89 மீற்றர் சுற்றளவு கொங்கிரீட் பீடத்தில் இணைக்கப்பட்டுள்ளது.

இங்கிருந்து ஒலிபரப்பாகும் தமிழ் நிகழ்ச்சிகள் 31, 41, 49 மீற்றர் அலைவரிசையில் தெளிவாகக் கேட்கலாம் என்று தெரிவிக்கப்படுகிறது. ★

வருவதும் போவதும்

வருவதும் போவதும்—
இன்பம், துன்பம்
வந்தால் போகாதது—
புகழ், பழி
போனால் வராதது—
மானம், உயிர்
தானாக வருவது—
இளமை, மூப்பு
நம்முடன் வருவது—
பாவம், புண்ணியம்
அடக்க முடியாதது—
பசி, தாகம்
அழிவைத் தருவது—
பொறாமை, கோபம்

★

துளசி பற்றி...

மீண்டும் ஒரு 'துளசி' புராணம்!

வாகனங்களை இயக்க உதவும் பெட்ரோலில் ஒரு லிற்றருக்கு இருபது சொட்டு துளசிச் சாற்றையோ, 20 துளசி இலைகளையோ சேர்த்தால் ஒரு லிற்றர் பெட்ரோலுக்கு 10 கிலோ மீற்றர் அதிகமாக ஓட்ட முடிகிறதாம்.

மண்ணெண்ணையில் துளசிச் சாற்றையோ, இலைகளையோ சேர்த்தால் 25 முதல் 40 சதவிகிதம் வரை அதிக பயன் கிடைக்கிறதாம். ★

குற்றாலம் அருவியில் குளிக்க மறுத்த அண்ணல் காந்திஜி

இந்தியாவை பிரிட்டிஷார் ஆண்டபோது குற்றால அருவியிலே வெள்ளையர் குளிக்கும்போது வேறு யாரும் குளிக்கக்கூடாது என்ற தடை 1909 இல் இருந்து வந்தது.

நம் நாட்டில் விழும் அருவி

காந்திஜி

யிலேயே நாம் குளிக்கக் கூடாது என்று இந்த வெள்ளையர் தடை செய்கிறார்களே என்று குற்றால மக்கள் கொதித்தனர்.

குற்றாலம் கோயில் தர்மகர்த்தாக்கள் இதை எதிர்த்து திருநெல்வேலி நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்தனர்.

இங்கு வெள்ளையர் குளிக்கும்போது அவர்களுக்கு இடைஞ்சல் செய்யக்கூடாது என்று தீர்ப்பாகியது.

இதை எதிர்த்து 1910 இல் சென்னை உயர் நீதிமன்றத்தில் அப்பீல் செய்யப்பட்டது.

இரண்டு வெள்ளைக்கார நீதிபதிகள் அப்பீலை விசாரித்தனர். முடிவில் 'விசேட தினங்களில் வெள்ளையர்கள் அருவியில் குளிக்கமாட்டார்கள்' என்று தீர்ப்பளித்தனர்.

இத்தீர்ப்பை எதிர்த்து லண்டன் பிரிவுக்கவுன்சிலுக்கு அப்பீல் செய்யப்பட்டது.

1915 இல் பிரிவுக்கவுன்சில் வழங்கிய தீர்ப்பில், 'ஹரிஜனங்கள் நீங்கலாக வேறு யார் வேண்டுமானாலும் எப்போதும் குளிக்கலாம்' என்று தீர்ப்புக் கூறியது.

இத்தீர்ப்பு 1917 இல் அமுலுக்கு வந்தது.

1934 இல் குற்றாலம் வந்த காந்திஜி 'ஹரிஜனங்கள் குளிக்க அனுமதி இல்லாத அருவியில் நான் குளிக்க விரும்பவில்லை' என்று குளிக்க மறுத்துவிட்டார்.

பின்பு கடைசியாக 1938இல் ராஜாஜி அமைத்த அமைச்சரவை இத்தடைச்சட்டத்தை நீக்கிவிட்டது. ★

தொழில் ரகசியம்

ஒரு சோப்புக் கம்பெனியில் விற்பனைப் பெண்ணாக ஓர் அழகி சேர்ந்தாள்.

அவளிடம் 'நீ எப்படி சோப்பு விற்பாய்' என்று கேட்டார் மேல் அதிகாரி.

அதற்கு அவள் 'ஒவ்வொரு வீட்டுக்கும் நேரில் போய் நமது சோப்பின் பெருமையை பெண்களிடம் எடுத்துச் சொல்வேன்'— என்றாள்.

உடனே மேலதிகாரி குறுக்கிட்டு 'அதுதான் தவறு. அப்படிச் செய்தால் உன் பேச்சைப் பெண்கள் கேட்க மாட்டார்கள். அதனால் நீ அந்த வீட்டு ஆண்களிடம் இரகசியமாகப் பேசு. அப்போதுதான் நீ பேசுவதை ஒரு வார்த்தைகூட விடாமல் அந்த வீட்டுப் பெண்கள் கேட்பார்கள்'— ★

அணுகுண்டின் சக்தியை நேரிற் கண்டவர்

5-8-1945 காலை 8.13 மணி

ஜப்பான் நகரான ஹிரோஷிமா – நாகசாகி நகரங்கள் மீது அமெரிக்கப் போர் விமானம் அணுக்குண்டு வீசியது.

இதைக் கண்ணால் கண்டவர் இன்றும் உயிருடன் இருக்கிறார்.

அவர் பெயர் டாக்டர் சுந்தரராய் ஹிடா (70 வயது)

அவர் கூறுகிறார்:

'பெரிய தீப்பிழம்பாகக் காட்சியளித்த அணுப்புகை நிர்மலமான ஆகாயத்தை மேகமூட்டமாகச் சூழ்ந்து கொண்டு ஹிரோஷிமா நகரை நோக்கிப் பரவியது.

மரங்கள், செடி, கொடிகள், மாடிவீடுகள், பலமாடிக் கட்டடங்கள் அனைத்தும் தீப்பற்றி எரிந்தன.

ஒரு சில வினாடிகளில் 2 லட்சத்து 30 ஆயிரம் மக்கள் இறந்தனர்.

பாதுகாப்பான மேட்டுப் பகுதிக்கு என் சைக்கிளில் விரைந்து கொண்டிருந்தேன், வழியில் தீப்பற்றிய ஆடையுடனும் இரத்தக் காயங்களுடனும் நிர்வாண நிலையில் ஆண்கள், பெண்கள் உயிர் பிழைப்பதற்காக ஓடோடிச் சென்றனர்.

வழி நெடுகிலும் பள்ளிச் சிறார்கள் மாண்டு கிடந்த காட்சி என் கண்முன் இன்றும் தெரிகிறது.

இப்படிக் கூறும் டாக்டர் ஹிடா 'போரற்ற புனிதமான உலகை உருவாக்குவோம்'— என்று பிரதிக்ஞை எடுத்துள்ளார்.

இப்படி வல்லரசுகள் பிரதிக்ஞை எடுக்க வேண்டுமே! ★

197, 29, 49, 008

பூமியின் வயதை அச்சொட்டாகக் கூற முடியுமா?

இந்திய விஞ்ஞானி ஒருவர் அச்சொட்டாக வயதைக் கூறியிருக்கிறார்.

197 கோடி 29 லட்சத்து 49 ஆயிரத்து 8 ஆண்டுகள் தான் பூமியின் வயது.

லக்னோவில் நடந்த விஞ்ஞானிகள் மாநாட்டில் பீர்பால் சாகினி ஆராய்ச்சிக் கழகத்தைச் சேர்ந்த பிரபல விஞ்ஞானி திரு. பி. எஸ். வெங்கடாசலம் பூமியின் சரியான வயதைத் தெரிவித்தார். ★

பஞ்சாமிர்தம் பலாச அமிர்தம்

கரப்பான் பூச்சியை அழிக்க மூன்று வகைப் பூச்சிகள்

கரப்பான் பூச்சி இல்லாத இடம் இந்த உலகத்திலேயே இல்லை. வீடுகள், ஹோட்டல்கள், ஆஸ்பத்திரிகள், அரசாங்க அலுவலகங்கள், பண்டகசாலைகள் ஆகியவைகளில் எல்லாம் கரப்பான் பூச்சிகள் வாழ்கின்றன.

ஏன் ஆழமான சுரங்கங்களில்கூட அவை வசிக்கின்றனவாம்.

பார்வைக்கு அசிங்கமாகத் தோன்றுவதோடு அவை கொடுக்கும் தொல்லைகளோ அளவில. உணவை உண்ணுகின்றன. சேமித்த தின்பண்டங்களுக்குள் நுழைந்து அவற்றை அழுக்காக்குகின்றன. மின்சம்பிகளையும் ஈயக் குளாய்களையும்கூட வெட்டி விடுகின்றன.

வாந்திபேதி நோய், என்ரிக் காய்ச்சல் ஆகியனவைகளையும் பரப்புகின்றன. கரப்பான் குஞ்சுகள் குளிர்சாதனப் பெட்டிகளுக்குள்ளும் நுழைந்துவிடுகின்றன.

தொல்லைகளைக் கொடுக்கும் நோய்களைப் பரப்பும் கரப்பான் பூச்சிகளை அழித்தொழிக்க வேண்டும் என்பதில் எவரிடமும் கருத்துவேறுபாடுகள் இல்லை; இருக்கவும் முடியாது.

பிரச்சினை அவைகளை எப்படி அழிப்பது என்பதுதான்.

உலகின் ஆரம்ப காலத்தில் இருந்தேவாழும் ஒரேயொரு உயிரினம் கரப்பான் பூச்சிதான். இருபது கோடி ஆண்டுகளாக கரப்பான் பூச்சியினம் உலகில் இருப்பதாக விஞ்ஞானிகள் நம்புகின்றனர்.

அத்துடன், ஆதிகாலத்தில் வாழ்ந்த கரப்பான் பூச்சிகளுக்கும் இன்று வாழும் கரப்பான் பூச்சிகளுக்கும் அதிக வேறுபாடுகள் இல்லையாம்.

உலகில் 3,500 இன கரப்பான் பூச்சிகள் வாழ்கின்றன. அவற்றில் 33 இனங்கள் மட்டும் இலங்கையில் இருக்கின்றன.

அந்த 33 இனங்களில் பத்து மட்டும்தான் வீடுகளில் வாழ்ந்து தொல்லைகொடுக்கின்றனவாம்.

ஆதிகாலத்திலிருந்தே மனிதன் கரப்பான் பூச்சியைத் தனது எதிரியாகத்தான் கருதி வந்திருக்கிறான். அவற்றைக் கண்டதும் அடித்துக்கொல்வதை விரதமாகக்கொண்டிருக்கிறான், அந்த வேட்டைக்கெல்லாம் பயந்துவிடுமா கரப்பான்?

மனிதனின் கைகளும் அவன் உபயோகிக்கும் ஆயுதங்களும் நுழையமுடியாத சந்துகளுக்குள் பொந்துகளுக்குள் புகுந்து பூச்சாண்டிகாட்டி வருகிறது கரப்பான்.

அடுத்து இரசாயனப் பூச்சி கொல்லிகளை உபயோகிக்க ஆரம்பித்தான் மனிதன். இப்பொழுதும் பலவகை நச்சுப்பொருள்களையும் உபயோகிக்கிறான் அவன். ஆனால் கரப்பானை மட்டும் மண்டியிட வைக்கமுடியவில்லை மனிதனால்.

இப்பொழுது கரப்பான் பூச்சிகளின் பெருக்கத்தைக் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருப்பதற்கு இயற்கை அன்னை கையாண்ட வழிகளிடம் தஞ்சம் புகுந்துள்ளான் மனிதன்.

கரம்பான் பூச்சிகளை அழிக்கும் பூச்சிகளைக் கண்டுபிடிப்பது அந்தப் புதுமுயற்சியின் முதலாவது கட்டம்.

அந்தக்கரப்பான் கொல்லிப் பூச்சிகளைப் பெருக்குவது இரண்டாவது கட்டம்.

இத்தகைய ஆராய்ச்சி உலகின் பல நாடுகளில் நடைபெறுகின்றது.

இலங்கையிலும் 1976 ஆம் ஆண்டு முதல் ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தில் நடைபெறுகின்றது. அந்த ஆராய்ச்சியை இரண்டு பெண்கள்தான் ஆரம்பித்தனர். அவர்களின் பெயர் கலாநிதி (திருமதி) தயாமானவடு, கலாநிதி (திருமதி) ஜே.பி. எதிரிசிங்க.

இப்பொழுது அந்த ஆராய்ச்சியை மூவர் தொடர்ந்துசெய்கிறார்கள். அவர்களின் பெயர் திருமதி பி. தல்கஸ்வத்த. திரு. என். சி. குமாரசிங்க, திரு. ஒ. பி. பெரேரா.

எமது வீடுகளில் புகுந்து விளையாடும் கரப்பான்களைக் கொல்லும் மூன்று வகைப் பூச்சிகளைக் கண்டுபிடித்திருக்கின்றார்கள் அவர்கள் என்கிறார் பேராசிரியர் வின்ஸ்டன். ஈ. ரத்னாயக்கா. இவர் ஸ்ரீ ஜயவர்த்தனபுரப் பல்கலைக்கழகத்தின் விலங்கியல் பேராசிரியர். அந்த மூன்று வகைப்பூச்சிகளும் ஐமெனோ பெற்றான் இனத்தைச் சேர்ந்தவை.

— நன்றி பனோஸ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடம் பயில்வோம்

இந்துநாகரிகம்

சோழப் பேரரசர் ஆட்சிக்கால இந்து நாகரிக வளர்ச்சி

(சென்றவாரத் தொடர்ச்சி)

சைவசித்தாந்தம்:

தோத்திர நூல்களுடன் சாஸ்திரி நூல்களும் சோழர் காலத்தில் எழுந்தன. சைவத் திருமுறைகள் வேதசாரமாய் அமைந்தன என்பர். தேவார திருவாசகங்கள் வேதத்தின் உட்பொருளை தமிழில் எடுத்துக் கூறுவதாலேயே அங்ஙனம் அழைக்கப்பட்டன. அதேநேரத்தில் திருமுறைகள் சைவ சித்தாந்தக் கருத்துக்களையும் கூறுகின்றன.

சங்கரரது அத்துவைதக் கோட்பாடு, இராமானுஜரது விசிஷ்ட அத்துவைதக் கோட்பாடு ஆகியவற்றைப்போலச் சைவசித்தாந்தத்திற்கும் வேத உபநிடதங்களே ஊற்றுக்கண்ணாக அமைந்துள்ளன. தோத்திரப் பாடல்களில் ஆங்காங்கே காணப்பட்ட சைவ சித்தாந்தக் கருத்துக்களைத் தொகுத்து சோழர்காலத்தில் சைவ சித்தாந்தத நூல்கள் எழுதப்பட்டன. அதனால் சைவசித்தாந்தம் ஒருமுறையான சாஸ்திரமாக நிறுவப்பட்டது.

இந்நூல்கள் மெய்கண்ட சாஸ்திரங்கள் எனவும் அழைக்கப்படுகின்றன. இவை பதினான்கு. அவற்றுள் முதன்மையானது மெய்கண்ட தேவர் இயற்றிய சிவஞானபோதம் ஆகும். ஆனால் திருவுந்தியார், திருக்களிற்றுப்படியார் ஆகிய இரண்டும் கி.மு. 1000 வருடத்தால் முந்தியவை.

சிவஞானபோதம் பன்னிரு சூத்திரங்களைக்கொண்ட ஒரு சிறு நூலானபோதும் சைவ சித்தாந்தக்கருத்துக்கள் பலவற்றையும் தன்னுள்கொண்டு விளங்குகின்றது. பதி, பசு, பாசம் ஆகிய முப்பொருளின் உண்மையினையும் அவற்றின் இலக்கணங்களையும் வீடுபேற்றிற்குரிய நெறியினையும், அந்நெறியினையும், அற்நெறி நின்றார் பெறும் பயனையும் சைவ சித்தாந்த சாஸ்திரங்கள் பதினான்கும் எடுத்துக்கூறுகின்றன.

மெய்கண்ட சாஸ்திர நூற் பட்டியல்:

1. திருவியலூர் உய்யவந்த தேவர் – திருவுந்தியார்
2. திருக்கடவூர் உய்யவந்த தேவர் – திருக்களிற்றுப்படியார்
3. மெய்கண்ட தேவர் – சிவஞானபோதம்
4. அருணந்தி சிவாச்சாரியார் – சிவஞானசித்தியார்
   - இருபா இருபஃது
   - உண்மை விளக்கம்
   - சிவப்பிரகாசம்
   - திருவருட் பயன்
   - வினாவெண்பா
   - போற்றிப் பஃறொடை
   - கொடிக்கவி
   - நெஞ்சுவிடு தூது
   - உண்மை நெறிவிளக்கம்
   - சங்கற்ப நிராகரணம்
5. மனவாசங் கடந்தார்
6. உமாபதி சிவாச்சாரியார்

கட்டடக்கலை:

தென்னிந்தியாவில் அழியாத பொருள்களைக்கொண்டு முதன்முதலாகக் கோயில் அமைக்கத்தொடங்கியவர்கள் பல்லவ மன்னர்களாகும். ஆனால் உண்மையான கோயிற் கட்டடக்கலை வளர்ச்சியினை நாம் சோழர் காலத்திலேயே காணக்கூடியதாயிருக்கிறது.

சோழர் வானளாவிய விமானங்கள் நுழைவாயிற் கோபுரங்களுடனும், பெரிய மண்டபங்கள் பிரகாரங்களுடனும் கோயில்களை அமைத்து கோயிற் கட்டடக்கலையை உன்னத நிலை எய்தச்செய்தனர்.

ஊர்கள்தோறும் கோயில்கள் அமைத்தனர். காவிரிக் கரையின் இருமருங்கிலும் சோழர் அமைத்த சிவாலயங்களை இன்றும் காணலாம். தாராசுரம், கும்பகோணம், தஞ்சாவூர், கங்கைகொண்ட சோழபுரம் ஆகிய இடங்களில் பாரிய கோயில்கள் காணப்படுகின்றன.

இவற்றில் தஞ்சாவூர்க் கோயிலும் கங்கைகொண்ட சோழபுரக்கோயிலுமே தலை சிறந்தன. உயரம், பரிமாணம், கம்பீரம், கலைச்சிறப்பு ஆகிய எல்லா அம்சங்களிலும் இவை தன்னிகரற்று விளங்குகின்றன. கங்கைகொண்ட சோழபுரக் கோயில் இப்பொழுது நிலமடைந்துள்ளது, ஆனால் இராஜராஜனால் கட்டப்பட்ட தஞ்சாவூர்க் கோயில் இன்றும் புதுப்பொலிவுடன் திழ்கின்றது.

ஆலயங்களின் சமுதாய முக்கியத்துவம்:

ஆலயங்கள் வழிபாட்டிடங்களாக மட்டுமல்லாது சமுதாய முக்கியத்துவம் வாய்ந்த நிலையங்களாகவும் விளங்கின. அரசர்கள் ஆலயங்களுக்கு மானியங்களை வழங்கினர். அதனால் ஏராளம் நிலங்கள் கோயில்களுக்குச் சொந்தமாயின. சாதாரண பூஜை, திருவிழாக்களை நடத்துவதற்கும், கோயில் நிலங்களை பராமரிப்பதற்கும் பல தொழிலாளர்களைக் கோயில் வேலைக்கமர்த்தியிருந்தன.

பலர் கோயில் நிலங்களைக் குத்தகைக்கு எடுத்துச்செய்தனர். கோயில்களில் கல்வி போதிக்கப்பட்டது. வைத்தியமும், செய்யப்பட்டது. ஏழை எளியவர்களுக்கு அங்கு அன்னதானம் முதலியன வழங்கப்பட்டன. ஆலயங்கள் மையமாகக்கொண்டே அன்று எல்லாக்கலைகளையும் இந்துக்கள் வளர்த்தனர்.

பல தேவைகளுக்காகவும் மக்கள் கோயில்களை நாடவேண்டியிருந்ததால் அக்காலத்தில் கோயில்கள் சமூகத்தை இணைக்கும் நிறுவனங்களாக விளங்கின.

சிற்பமும் ஓவியமும்

சோழர் காலக் கோயில்கள் எல்லாமே சிற்பங்களால் பொலிவுபெற்றவை. சிற்பங்கள் செதுக்கப்படாத தூண்களே இல்லை! விமானங்களையும் வாயில் கோபுரங்களையும் முழு உருவக் கருங்கற் சிலைகள் அலங்கரிக்கின்றன. கங்கைகொண்ட சோழபுரக் கோயில் (தாராசுரக் கோயில் ஆகியவை) சிற்பக்கலைச்சுரப் பெயர்பெற்றவை. தஞ்சைப் பிரகதீஸ்வரஆலய நந்திபாரப் போரைப் பிரமிக்கவைக்கிறது.

பல ஆலயங்களில் அக்கால ஓவியங்களைக் காணலாம். பிரகதீஸ்வரர் ஆலய விமானத்தின் உட்புறத்தில் அழகிய பல ஓவியங்களைக் காணலாம், அற்று தீட்டப்பட்ட ஓவியங்கள் இன்றும் புதுப் பொலிவுடன் விளங்குவது அற்புதமே!

உலோக வார்ப்புக்கலை:

உலோக வார்ப்புக் கலை சோழப் பேரரசர் காலத்தில் உச்சநிலையை அடைந்தது. சோழர் கால வெண்கல விக்கிரகங்கள் உலகப் பிரசித்தி பெற்றவை. இன்று எங்கள் கோயில்களில் காணப்படும் விக்கிரகங்கள் பலவும் சோழர் காலத்திலேயே உருவ அமைப்புப்பெற்றன.

உற்சவ விக்கிரகங்களது எழில்கொஞ்சும் முகமும் அதில் தவழும் புன்னகையும் ஒளியும் சாந்தியும் பார்ப்போரைப் பரவசப்படுத்துபவை. சோழர்கால உலோக வார்ப்புக்கலை, சிற்பக்கலை ஆகியவற்றின் சிகரமெனச் சொல்லத்தக்கது. அவர்கள் அமைத்த நடராஜர்சிலை, தென்னாட்டுச் சிற்பக் கலை, நடனக்கலை, இறை தத்துவம் ஆகியவற்றின் முகிழ்ப்பாகத் திகழ்வது 'இந்த நடராஜர் சிலையெனின் அது மிகையாகாது!

இசை நடனம், ஏனைய கலைகள்

இசையையும் நடனத்தையும் வளர்ப்பதற்கெனத் தேவதாசிகள் இருந்தனர். ஒவ்வொரு கோவிலை அண்டியும் இத்தகைய தேவதாசிக் குடும்பங்கள் வாழ்ந்துவந்தன. இசை, நடனம் போன்ற நிழ்ச்சிகளை அரங்கேற்றுவதற்கு கோவில்களிலேயே அரங்கங்களும், மண்டபங்களும் அமைக்கப்பட்டிருந்தன. மற்றும் கைவினைக் கலைகள் எல்லாம் அக்காலத்தில் அரசர்களினதும் கோயில்களினதும் ஆதரவிலேயே வளர்ந்தன.

ஈழத்தில்:

இலங்கையிலும் சைவ சமயம் சிறப்புற்றிருந்தகாலம் சோழர் காலம் எனலாம். சோழராட்சிக்காலத்திற்கு முன்பே இலங்கையில் இந்துமதம் பரவியிருந்தது. 'சிவா' என்ற பெயர் உடைய பல சிங்கள மன்னர்களே இலங்கையை ஆண்டிருக்கின்றனர். உ+ம்: முடசிவன்: முத்த சிவன், சிறிகண்ட சிவன் அத்துடன் சேனன், குத்திகன், எல்லாளன் போன்ற இந்து மன்னரும் இலங்கையை ஆண்டனர்.

வரலாற்றுக் காலத்திற்கு முன்பிருந்தே கதிர்காமக் கோயில் இருந்திருக்கிறது. திருகோணமலையில் அமைந்திருந்த திருக்கோணேசர் ஆலயமும் மாதோட்டத்தில் அமைந்திருந்த திருக்கேதீஸ்வர ஆலயமும்கூட இத்தகைய வரலாற்றுச் சிறப்புமிக்கவை என்று கருதப்படுகிறது.

ஞானசம்பந்தர் கோணேஸ்வரத்தின்மீதும், சம்பந்தரும் சுந்தரமூர்த்தி நாயனாரும் திருக்கேதீஸ்வரத்தின் மீதும் பதிகங்கள் பாடியதை சைவ உலகம் நன்கறியும். இவையெல்லாம் சோழர்காலத்திற்கு முந்திய நிகழ்ச்சிகள்.

சோழர் காலத்தில் ஈழத்தில் இந்துமதத்தின் சிறப்பு மேலும் பெருகியது. இலங்கை முழுவதையும் நீண்டகாலம் (கி.பி. 1017–1070) ஆண்ட சோழர், தீவின் பல பகுதிகளிலும் சிவாலயங்களை நிறுவியிருக்கவேண்டும். அவற்றில் பொலநறுவையில் உள்ள இரண்டாம், ஐந்தாம் சிவாலயங்கள் என்று அழைக்கப்படுபவையே இன்று நல்லநிலையில் உள்ளன. அவை சோழர் கால நடுத்தர அளவிலான வகையைச்சார்ந்த கோயில்கள்.

மற்றும் கந்தளாய், பதவியா போன்ற இடங்களில் சிவாலயங்களின் வழிபாடுகள் காணப்படுகின்றன. இவ்முழுவதிலும் சோழர்காலத்து வெண்கலச் சிலைகள் கிடைக்கப்பெற்றுள்ளன. எங்கெங்கெல்லாம் வெண்கல விக்கிரகங்கள் கிடைத்தனவோ, அங்கெங்கெல்லாம் சிவாலயங்கள் இருந்திருக்கின்றன என்று நாங்கள் ஊகிக்கலாம். சுருக்கமாகக் கூறினால் ஈழத்தில் வளர்த்துவந்த இந்துநாகரிகச் செல்வாக்கிற்கு சோழராட்சி மகுடம் வைத்தது எனலாம்.

தென்கிழக்காசிய நாடுகள்:

இலங்கையைப்போலவே யாவா, சுமத்திரா, மலேசியா போன்ற தென்கிழக்காசியப் பகுதிகளிலும் சோழர் காலத்தில் இந்துநாகரிகம் பரவியது. இந்தப் பகுதி இந்து நாகரிகத் செல்வாக்கிற்கு உட்பட்டிருந்தமைக்கான சான்றுகள் நிறையக் கிடக்கின்றன. அதற்கு ஒரு குறிப்பிட்ட அரசமரபு மட்டும் காரணமல்ல.

இந்து நாகரிகமானது பல்லாயிரக்கணக்கான வருடங்களாகப் படிப்படியாகத் தென்கிழக்காசியாவில் பரவி இருக்கவேண்டும். ஆனால் சோழரைத்தவிர வேறெந்த இந்திய அரச மரபினரும் இப்பகுதியைக் கைப்பற்றி ஆண்டதற்குச் சான்றுகள் இல்லை. எனவே இப்பகுதியை வென்றடிமைப்படுத்திய சோழப்பெருமன்னர் காலத்தில்தான் இந்துநாகரிகம் இங்கு பெருமளவில் பரவியது என்று சொல்வதில் தவறில்லை.

முடிவுரை:

இந்து நாகரிகம் சோழர் காலத்தில் இந்தியாவில் சிறப்புற வளர்ந்து, கடல் கடந்த நாடுகளிலும் பெருமளவிற் பரவியமையால் இக்காலம் இந்துநாகரிகத்தின் மகோன்னத காலங்களில் ஒன்று என்று கூறலாம். ★

தயாரிப்பு:
அராலியூர் ந. சுந்தரம்பிள்ளை
(பி. ஏ. கல்வித்துறை டிப்ளோமா)

குழந்தையும் பெற்றோரும்

குழந்தைகள் விளையாடலிலே உயர்ந்த பொம்மைகளைத்தான் வாங்கிக்கொடுக்க வேண்டும் என்பது இல்லை. சாதாரண எளிய பொம்மைகளைக்கூட அவர்கள் நீண்ட நேரம் விதம் விதமாக வைத்து விளையாடமுடியும்.

ஒரு சாதாரண அட்டைப் பெட்டியே குழந்தைகளுக்கு கொஞ்ச நேரம் ரயில், பின் வீடு, பிறகு கார், கடைசியில் கார் ஷெட் ஆகிவிடும், அவர்களின் கற்பனை ஆர்வத்துக்கு அளவே கிடையாது.

ஒரு நல்ல அட்டைப் பெட்டிக்கு நான்கு மூடிகளைச் சக்கரமாக அமைத்துக் கயிற்றைக் கட்டிக் கொடுங்கள். இரண்டு வயதுக் குழந்தைக்கு இதுதான் அலுக்காத விளையாட்டுப் பொம்மை...!

பெண் குழந்தைகளுக்கு அழகான பொம்மையையும் சில கந்தல் துணிகளையும் கொடுத்துவிட்டால் போதும்...! விதம் விதமாகக் கட்டி அழகு பார்ப்பார்கள்.

இரண்டு வயதுக்கு மேற்பட்ட குழந்தைகள் பெற்றோர்களை முன் மாதிரியாகக் கொள்கின்றனர்.

நாற்காலி காராக மாறுவதும், பொம்மைக்கு வைத்தியம் பார்ப்பது, சமையல் செய்வதாக நடிப்பதும் இதனால்தான்...!

குழந்தைகள் முன் தவறு செய்யாதீர்கள், கோபப்படாதீர்கள், பிடிவாதம் செய்யாதீர்கள், பொய் பேசாதீர்கள். குழந்தைகள் அப்படியே 'காப்பி' அடிக்கும்.

குழந்தைகள் நம்மைப் போல இருக்க வேண்டும் என்று நினைக்காதீர்கள். படங்களில் ஆகாயத்துக்கு சிவப்பு வர்ணமும், புல் தரைக்கு நீல வர்ணமும் கொடுத்தால் தவறு என்று சுட்டிக்காட்டாதீர்கள்.

அவர்கள் தாங்களாகவே ஆகாயத்துக்கு நீலமும் புல் தரைக்கு பச்சை வர்ணமும் கொடுக்கும் போது அவர்களின் மனவளர்ச்சியைப் பார்த்து நீங்களே அதிசயப் படுவீர்கள்.

பொம்மைகளை இப்படித்தான் வைத்து விளையாட வேண்டும் என்றும், வண்டியை இப்படித்தான் ஓட்ட வேண்டுமென்றும் உத்தரவு போடாதீர்கள். குழந்தைக்கு விளையாட்டு போர் அடித்து விடும்.

நாம் குழந்தைகளின் அளவுக்குத் தாழ்ந்து போக வேண்டும். குழந்தையை உயர்த்திவிடக் கூடாது.

சிறு குழந்தைகளுக்குத் தன்னுடையது என்ற உரிமையும் அதற்காக ஒரு பிடிவாதமும் உண்டு.

பெயர் போட்டுவைத்துக் கொள்வார்கள். பிறருக்கு அதைக் கொடுக்கமாட்டார்கள். அதை சுயநலம் என்று நினைக்கவேண்டாதீர்கள். வளர வளர இந்தச் சுபாவம் போய், பரந்த மனம்பான்மை உண்டாகிவிடும்.

ஐந்து வயதை அடையும் போது குழந்தைகள் நாலைந்து பேராகச் சேர்ந்து விளையாட விரும்புவார்கள். வீட்டில் தனியாக அடைத்து வைக்காதீர்கள்.

குழந்தைகளுக்கு செல்வம் கொடுக்கக்கூடாது. சிறுமுயற்சிகளையும் பிரமாதப் படுத்தக்கூடாது.

விளையாட்டில் அடிபட்டால் பொருட்படுத்தக் கூடாது. பேச்சையோ செயலையோ பகிரங்கமாகப் பாராட்டக் கூடாது. இதனால் உலகமே தன் காலடியில் என்று குழந்தை நினைத்துவிடும்...!

ஆனால் குழந்தை அன்புடன் வரும்போது அலட்சியப் படுத்தாதீர்கள். ஆசையாகக் கேட்டால் அடித்துவிடாதீர்கள்.

வெளியில் இருந்து வரும் நண்பர்களிடம் தானே பேசட்டும், பாட்டைக்கேட்டு அதைப்போல் பாடட்டும் கிரிக்கெட் மட்டையை வீசி விளையாடட்டும். உங்கள் திருத்தமோ, தனியான பாராட்டோ அதற்கு வேண்டாம் அதுவே குழந்தைகள் நன்றாக வளரும் வழி.

—திரிபுரம்

கொழு கொம்பு

கொழு கொம்பு இல்லாத கொடி, நிலத்திற் படர்ந்து மிதியுண்டு அழிகிறது.

கொடி சுற்றாத கொழு கொம்பும் வெறும் தடியாய் வழியே செல்வோரை இடறி விழச் செய்கிறது.

அது பொழிவு பெற்று மணத்தோடு பெருமை அடைவதில்லை.

இது பற்றியே மணுளனைக் கொழுநர் என்றும், மணுட்டியைப் பூங்கொடி என்றும் தமிழர் புகழ்ந்து பாடினர்.

— தெ. பொ. மீயின் 'வள்ளுவரும் மகளிரும்' நூலில் இருந்து.

நங்கை

குலமகள் குடும்பப் பண்பு!

சொல்லுதல் எளிது யார்க்கும்
சொன்னவர் செய்ய மாட்டார்
சொல்லியே திருத்த எண்ணில்
சொற்படி நடக்க மாட்டார்
செய்துமே காட்டி விட்டால்
சிந்தையைக் கவர்ந்து நிற்கும்
திருந்தவும் வழி பிறக்கும்
தீமைகள் விலகி நிற்கும்.

குடும்பத்தின் உயர்ந்த பண்பு
கொண்டுமே வாழும் பெண்கள்
குற்றமோ குறையோ இன்றிக்
குணத்துடன் வாழ்தல் போலே
காதலில் உயர்ந்த மங்கை
காதலன் குறை பொறுத்து
வாழுதல் கண்டு தோழி
வாழ்த்தியே வியந்து நின்றாள்.

சிறுமியாய் இருந்தாள் அன்று
திருமணம் முடித்த பின்பு
திடீரென வந்த பண்பு
திறமையின் உயர்வு கண்டு
தோழியே வியந்து நின்றாள்
துயருற்று உடல் மெலிந்து
முடிய மலர்கள் போலே
வாடியே வருத்தம் உற்றாள்

கணவனும் மனை அடைந்தான்
காதலி கடிவாள் என்று
கருதியே மனமும் நொந்தாள்
கவிமொழி பேசி நின்று
காதலி வரவு சொன்னாள்
காட்சியைக் கண்ட தோழி
தாயவள் பண்பு பெற்ற
தன்மையைப் போற்றி நின்றாள்.

— வ. யோகானந்தசிவம்

கொடியும் - கொடிதும்

கொடி அவரைச் செய்கையில் இன்று மக்கள் ஊக்கம் செலுத்துகின்றனர். இதைக் கொடியவரைச் செய்கையில் மக்கள் ஊக்கம் செலுத்துகின்றனர் என்றும் சொல்லலாம்.

கொடியவரைக்கண்டு கந்தன் பயப்பட்டான்; என்பதில் கொடுமை அல்லது கொடியது செய்பவர் என்னும் பொருளைத் தருகின்றது.

'விதையொன்று போடச் சுரை (சுரைக்கொடி) ஒன்று முளைக்குமா?' கொடியிற்காய் கொடிக்குப் பாரமா?'' அடம்பன் கொடியும் திரண்டால் மிடுக்கு' என்பவை கொடி என்னும் பொருளைத் தருகின்றன.

கொடியனார் பூந்தோட்டத்தில் பூக்காய்கின்றார்கள் என்பதில் 'கொடிபோன்ற பெண்கள்' என்னும் பொருளைத் தருகின்றது.

கொடியவரைக்கண்டு – கொடியவரைக் – கன்று வித்தியாசம் காண்க.

கொடியனார், கொடியனாரைக் கண்டு அஞ்சினர். கொடி போன்ற பெண்கள் கொடுமை செய்பவர்களைப் பார்த்துப் பயப்பட்டனர் என்பது பொருள்.

'குப்புறவுற்றனர் கொடியன் தேரினும்' என்றதில் கொடுமை செய்பவனது தேரினின்றும் நிலத்தில் குதித்தனர் என்னும் பொருள் தந்து நிற்கின்றது.

கொடியரை – கொடுமை செய்பவர்களாகிய பூதப்படைகளைத் தாங்கியதால் பூமிதேவி உடல் வருந்தினார்.

கொடிப்படை – கொடி பிடித்துச் செல்லும் படை சேனைக்கு முன்னே சென்றது.

கொடியர் – கொடியை உடையவர்கள் தேரின் மீது வந்தார்கள்.

கொடிது கொடிது வறுமை கொடிது.

அதனினும் கொடிது இளமையில் வறுமை—

என்பதில், கொடுமை உள்ளது, துன்பந்தருவது என்னும் பொருள் தந்து நிற்கின்றது.

'முல்லைக் கொடிக்குப் பாரி தேர் நல்கினான்;' மாளிகையின் மேலுள்ள கொடிகள் இங்கே வரவேண்டாம் என்று கைகாட்டுவனபோல அசைந்தன; மாளிகைகளின் மேல் வரிசையாகக் கட்டப்பட்ட வெள்ளைக் கொடிகள் வெள்ளைக் கொக்குகள் வரிசையாகச் செல்வது போன்று காட்சியளித்தன — இவைகளில் கொடிபற்றிக் குறிப்பிடப்பட்டிருக்கின்றன.

கொடியும் கொடிதும் வருவது பார்த்தோம். ★

- க. சி. சண்முகம்

இல்லை என்று சொல்லாதே!

வீடுகளில் நம்மைச் சுற்றி எப்போதும் ஒரு தேவதை இருந்து கொண்டே இருக்கிறதாம். நாம் எதைச் சொன்னாலும், 'அப்படியே ஆகட்டும்' என்று அந்தத்தேவதை ஆசீர்வதித்துக்கொண்டே இருக்குமாம்.

நாம் பேசுவது, சொல்வது எல்லாம் நல்ல வார்த்தைகளாகவும், மங்களகரமாகவும் இருந்தால் தேவதைகள் 'அப்படியே ஆகட்டும்' என்று ஆசீர்வதிக்கும் போது எல்லாம் நல்லதாகவே அமையும்.

ஏதாவது ஒரு பொருள் இருக்கிறதா? என்று கேட்டாலும் 'இல்லையே...' என்று சொல்லக்கூடாது.

'நிறைய இருக்கிறது... மறுபடியும் வாங்கிவர வேண்டும்' என்பதுபோல சொன்னால் தேவதையும் 'அப்படியே ஆகட்டும்' என்று ஆசீர்வதிக்கும்போது வீடுகளில் எல்லாம் நிறைந்து கொண்டேயிருக்கவே இருக்கும். ★

பெர்னுட்ஷாவின் வாழ்வில் ஒருநாள்...

பெர்னுட்ஷாவுக்கு மலர்களின் மீது மிகவும் பிரியம் என்று கேள்விப்பட்ட ஒருவர், அவர் வீட்டுக்குச் சென்றார்.

ஆனால் அங்கு மலர்களையே காணோம்.....! மலர்கள் வைக்கும் அலங்கார ஜாடிகளும் இல்லை. வியப்படைந்த அவர் ஷாவை நோக்கிக் கேட்டார். 'உங்களுக்கு மலர்கள் மீது மிகந்த பிரியம் என்றல்லவா கேள்விப்பட்டேன்...?'

'ஆமாம்.' இல்லையென்று யார் சொன்னார்கள்? எனக்குக் குழந்தைகள் மீதும்தான் பிரியம். அதற்காக அவர்களின் தலைகளைக் கொய்து என் வீட்டு அலங்கார ஜாடிகளை அழகு செய்ய வேண்டும் என்பதில்லையே.....!' என்றார் ஷா.

தொகுப்பு:
எம். எம். அபூபக்கர்
மன்னார்.

பகிடிக்கும் பொய் சொல்லாதே!

குமரன் வீட்டிற்கண்மையில்
குளம் ஒன்றமைந்திருந்தது
ஆழமான நீரிலே
அடிக்கடி அவன் நீந்துவான்
சுழியும் ஓடி மகிழுவான்
சுட்டித்தனமும் பண்ணுவான்
அமிழ்ந்தவன்போல் அரற்றுவான்
அபயக்குரலும் எழுப்புவான்
ஆழச்சுழிக்குள் அகப்பட்டு
மாண்டு போவான் என்றுமே
அயலவர் சேர்ந்து ஓடினால்
கேலி செய்து மகிழுவான்
மாரி மழை பொழிந்தது
ஏரி முட்டிப் போனது
எங்கிருந்தோ முதலை ஒன்று
அங்கு வந்து சேர்ந்தது
ஆருமற்ற போதிலே
ஆழக்குளத்தில் நீந்தினான்
மூழ்கி நின்ற முதலையோ
முன்னம் காலைப் பிடித்தது
ஓலமிட்டு அலறினான்
உதவி என்று கத்தினான்
நித்தம் போடும் சத்தம் என்று
கிட்ட எவரும் வரவில்லை
கெட்டமுதலை இழுத்தது
கீழே கொண்டு போனது
மரணம் அவனை அணைத்தது
பகிடிக்குப் பொய் சொன்னதால்!

— செவ்வந்தி மகாலிங்கம் —

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிரிப்பு நடிகராக இருந்து வில்லனாக மாறும் நாகேஷ்!

கோவை செழியனின் 'கைதி நம்பர் 786' படப் பிடிப்பு.

பழம் பெரும் நடிகர் ஒருவர் நடிக்க வந்திருந்தார்.

அவர் நன்கு பிரபலமானவர். கலகலப்பாகப் பேசக் கூடியவர். நவரசங்களையும் நடித்திக் காட்டக்கூடியவர்.

இத்தனைக்கும் மேலாக அவரைச் சொல்ல வேண்டுமானால் சிரிப்பு நடிகரான அவர், கமலஹாசனின் 'அபூர்வ சகோதரர்கள்' படத்தில் முதன் முறையாக வில்லன் வேடத்தில் நடித்து வருகிறார்.

அவர்தான் நாகேஷ். அவருக்கு அறிமுகம் தேவையில்லை. நாடறிந்த நடிகர். ஸ்ரமிங் சென்ஸ், என்பதை நான் இவரிடமிருந்தே கற்றுக் கொண்டேன்' — என்று வை. ஜி. மகேந்திரன் ஒப்புக் கொள்ளும் அளவுக்குப் பேசி நடித்தவர்.

நாகேஷின் நடிப்பில் வேகம் உண்டு; விவேகமும் உண்டு.

தான் சிரிக்காமலேயே பிறரைச் சிரிக்க வைத்த நடிகரால் முகத்தில் எள்ளும் கொள்ளும் வெடிக்கும் வெறுப்பை உமிழும் பயங்கர வில்லனாக நடிக்க எவ்வாறு முடிந்தது?

'சஞ்சீவி' சார்பில் அவரிடமே கேட்டோம்.

ஆயிரம் படங்களிலே நடித்து முடித்த அவர் புன்முறுவலுடன் கூற ஆரம்பித்தார்:

'மற்றவர்களுக்கு நாகேஷால் எவ்வாறு வில்லனாக நடிக்க முடிந்தது என்பது கேள்விக்குறியாக இருக்கலாம் ஆனால் எனக்கோ கமலஹாசனுக்கோ அப்படித் தெரியவில்லை.

காரணம் கமலஹாசனுக்குத் தெரியும் நாகேஷிடம் என்ன என்ன திறமைகள் உள்ளன என்று. எனக்குத் தெரியும், என்னால் அந்த வில்லனை எவ்வாறு வெளிக்கொணர முடியும் என்று.

வில்லனாக நடிக்க எனக்குத் தயக்கமில்லை.

நடிப்பின் எல்லாப் பரிமாணங்களையும் தொட்டுப் பார்க்க வேண்டும் என்ற ஆவல் ஒவ்வொரு நடிகனுக்கும் இருப்பது இயற்கை. அப்படி எண்ணுபவன் நடிகனே அல்ல..... சீரியஸான கதாபாத்திரங்களைச் செய்திருக்கின்றேன். கதாநாயகனாகவும் நடித்திருக்கிறேன். வில்லனாகச் செய்ததில்லை. அதனால் உடனடியாக ஒப்புக்கொண்டேன்.

படத்தில் எனக்கு 'தர்மா' பாத்திரம். தில்லானா மோகனாம்பாள் படங்களில் வில்லனாக வந்த வைத்தி, பலபடங்களில் வில்லனாக நடிக்கும் நம்பியார் — இந்த இருவருக்கும் இடைப்பட்ட ஒரு வில்லனாக நடிக்க வேண்டும் என்று கமல் கேட்டுக் கொண்டார். சரி முயற்சி செய்கிறேன் என்று மட்டும் கூறி விட்டுக் கற்பனைக்கு வேலை கொடுத்து 'தர்மா' பாத்திரத்தைத் திரையில் பேச வைத்துள்ளேன் பாருங்கள். பாராட்டுவதா, வேண்டாமா என்று முடிவு செய்யுங்கள்.

இப்படிக் கூறினார் நாகேஷ். வில்லனாக நடித்துப் பின்னர் நகைச்சுவை நடிகராக சக்கைபோடு போட்டவர் பாலையா.

ஆனால் நகைச்சுவை நடிகராக இருந்து இப்போது வில்லனாக நடிக்க வந்திருக்கிறார் நாகேஷ்.

நாகேஷ் வில்லனாகக் கொடிகட்டிப் பறப்பாரா என்பதை ரசிகர்கள்தான் தீர்மானிக்க வேண்டும். (எ-4)

புதிய படம்

'ஊரெல்லாம் உன்பாட்டு'- ராமராஜன் இயக்கும் இப்படத்தை சிட்டிசன் பிலிம்ஸ் தயாரிக்கிறது.

கதாநாயகனே ராமராஜன் நடிக்கிறார். கதாநாயகி இன்னும் முடிவாகவில்லை.

இசை: இளையராஜா,
ஒளிப்பதிவு: நிவாஸ்

தமிழக சினிமா - அரசியல் பற்றி சட்டசபையில் நடந்த விவாதம்

சினிமா நடிகர், நடிகையருக்கு பரிசு வழங்கும் விதம் பற்றி சுவையான விவாதம் ஒன்று அண்மையில் தமிழ் நாடு சட்டசபையில் நடந்தது.

அதன் விவரம் வருமாறு:

பி. எச். பாண்டியன் கலைஞர்களை ஊக்குவிக்கவும் பரிசு தரவும் பல தனியார் நிறுவனங்கள் இருக்கின்றன. படத்தில் நடிப்பவர்கள் உயர்ந்து கொண்டே போகிறார்கள். ஆனால் டிக்கெட் கொடுத்துப்படம் பார்ப்பவர்கள் தரை டிக்கெட்டாக அப்படியே தான் இருக்கிறார்கள்.

நடிகர்களிடம் பணம் சேர்ந்து கொண்டே இருக்கிறது. பத்திரிகை நிருபர்கள் அந்த நடிகர்களிடம் சென்று 'அரசியலில் குதிப்பீர்களா?' என்று கேட்கிறார்கள். நடிகர்களும் 'இப்போதைக்கு அப்படிப்பட்ட எண்ணம் இல்லை' என்கிறார்கள்.

நல்ல அறிஞர்களைத் தேடிச் சென்று 'நீங்கள் அரசியலில் ஈடுபடுவீர்களா?' என்று எந்த நிருபரும் கேட்பதில்லை.

எனவே ஒழுக்கம் மிக்கவர்களை அழைத்து பரிசு வழங்கி கௌரவிக்க முதல்வர் முன்வர வேண்டும்.

ஒழுக்கக்கேடு உள்ளவர்கள் தான் சமுதாயத்தைக் கெடுத்து வருகிறார்கள். ஒவ்வொருவரும் 5 சதவீதம் அளவுக்கேனும் கேடு புரிகின்றனர்.

சபாநாயகர்: அப்படியானால் நாட்டைக் கெடுக்க 20 பேருக்கு மட்டும்தானே வாய்ப்புக் கிடைக்கும்?

பாண்டியன்: நாட்டில் எழுதி, பேசி, நடித்து வாக்கு கேட்கும் நிலை பெருகி வருகிறது. இனிமேல் பாட்டுப்பாடி வாக்கு கேட்க வேண்டிய நிலையும் ஏற்படலாம். எல்லாக் கட்சியினரும் தேர்தல் காலத்தில் கலை நிகழ்ச்சி நடத்துகின்றனர்.

சினிமாவில் கற்புக்கரசி போல் நடிக்கும் நடிகைக்கு பரிசு வழங்குகிறீர்களே! உண்மையிலேயே கற்புடன் நடப்பவர்களுக்கு என்ன பரிசு வழங்கப்போகிறீர்கள் என்று ஒரு சினிமா விழாவில் கேட்டேன்.

அதற்குப் பதில் அளித்துப் பேசிய கருணாநிதி. 'சினிமாவில் கற்புடையவளாக நடித்தால் அந்தத் திறமையைக் கண்டறிய அளவுகோல் இருக்கிறது. ஆனால் உண்மையிலேயே கற்புடன் நடந்து கொள்ளும் பெண்ணைப்பற்றித் தெரிந்து கொள்ள அப்படிப்பட்ட நிலைமை இல்லையே' என்று கூறினார்.

மூன்று முறை விவாகரத்து செய்த ஒரு நடிகைக்கு பரிசு தரப்பட்டது. கற்புடையவளாக சிறந்த முறையில் நடித்ததற்காக பரிசு!

திருமதி பாப்பா உமாநாத்: கற்பு பற்றி இங்கு அலசி ஆராயப்பட்டு வருகிறது. 3 முறை விவாகரத்து செய்த ஒரு நடிகையைப் பற்றி இங்கே பாண்டியன் பேசுகிறார். 3 முறை விவாகரத்து செய்தவருக்கு கற்பு இல்லை என்று கூறிவிட முடியுமா?

பாண்டியன்: என் மனதில் பட்டதைக் கூறியிருக்கிறேன்.

அழகிரிசாமி: பெண்களின் கற்பு பற்றி விவாதிக்கப்படுகிறதே! கற்பு என்பது பெண்களுக்கு மட்டும்தானா? இருபாலாருக்கும்பொதுவானதா?

சபாநாயகர்: 'கற்பு நிலை பற்றி இங்கு பேச வந்தால், இருபாலருக்கும் அதைப் பொதுவில் வைப்போம்'. என்று பாரதி பாடியுள்ளார்.

இவ்வாறு வாக்குவாதம் நடந்தது. (எ-4)

செ.ா.னை ஸ்டுடியோக்களில்....

சாத்தானின் ரொல்லைத் தட்டாதே —இப்பெயருள்ள படத்தை குக்கூ பிலிம் ஸ்தயாரித்து வருகிறது.

ராம. நாராயணன் டைரக்ஷனில் உருவாகும் இப்படத்தில் இசை: சங்கர் கணேஷ்.

கதாநாயகன் சந்திரசேகர், கதாநாயகி ரேகா.

★ ★ ★

உலகின் சிறந்த படம் 'மழை மனிதன்'

61 ஆவது ஒஸ்கார் பரிசளிப்புவிழா அமெரிக்காவில் லொஸ் ஏஞ்சல்ஸ் நகரில் அண்மையில் நடந்தது.

இந்த விழாவில் பல நாடுகளைச் சேர்ந்த சிறந்த நடிகர்கள், நடிகைகள், சினிமா டைரக்டர்கள் உட்பட ஏராளமானவர்கள் கலந்துகொண்டனர்.

உலகின் தலைசிறந்த நடிகைக்கான ஒஸ்கார் விருது, ஹொலிவூட் நடிகை ஜூடி போஸ்டருக்குக் கிடைத்தது.

26 வயதான ஜூடி போஸ்டர் 'தி அக்கியூஸ்ட்' (குற்றவாளி) என்ற படத்தில் மிகவும் சிறப்பாக நடித்ததற்காக விருதுபெற்றார்.

உலகின் சிறந்த நடிகருக்கான ஒஸ்கார், (Rain Man) 'மழை மனிதன்' படத்தில் கதாநாயகனாக நடித்த டஸ்டின் ஹொப்மன் என்பவருக்கு வழங்கப்பட்டது.

51 வயதாகும் டஸ்டின் ஹொப்மன் ஏற்கனவே ஒரு முறை ஒஸ்கார் விருது பெற்றவர்.

1979 ஆம் ஆண்டு 'ரோமர் வேர்கஸ் கிராமர்' படத்தில் நடித்ததற்காக இவர் ஒஸ்கார் விருது பெற்றார்.

ரெயின்மன்(மழை மனிதன்) படம் 4 ஒஸ்கார் பரிசுகளைத் தட்டிச்சென்றது.

சிறந்த படம், சிறந்த டைரக்ஷன், சிறந்த கதை-வசனம் ஆகியவற்றுக்கும் 'மழை மனிதன்' ஒஸ்கார் விருது பெற்றன.

சிறந்த ஒளிப்பதிவுக்கான பரிசு 'மிசிசிபி பேர்னிங்' (மிசிசிபி தீப்பிடித்து எரிகிறது) என்ற படத்திற்குக் கிடைத்தது. (எ-4)

பரதநாட்டியக் கலை வளர்ச்சிக்கு செல்வி மதி சேவியரின் பங்கு

செல்வி மதி சேவியர் சமீபத்தில் யாழ். திருமறைக் கலாமன்றம் நடத்திய 'தேம்பாவணி' விழாவில் காவியப் படலங்களில் ஒன்றான திருமணப்படலத்தை நாட்டிய நாடகமாகத் தயாரித்து பலரது பாராட்டுக்களைப் பெற்றார்.

அவரது நடன அமைப்பில் பல புதிய முத்திரைகளை ரசிகர்கள் அனுபவிக்கக் கூடியதாக இருந்தது.

அவர் கூறுகிறார்:

குழந்தைப் பருவத்தில் வீட்டில் வானொலிப் பாடல்களைக் கேட்டு அதற்கேற்ப ஆடுவதைப் பெற்றோர்கள் அவதானித்தனர்.

நாட்டியத்துறையில் எனக்கு ஆர்வம் இருப்பதைக் கண்ட அவர்கள் பரதநாட்டியம் பயில என்னை திருமதி லீலா ஆறுமுகையாவிடம் சேர்ப்பித்தனர்.

எனது நாட்டிய அரங்கேற்றம் 9. 10. 1982 இல் யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் மறைந்த பேராசிரியர் திரு. எஸ். வித்தியானந்தன் முன்னிலையில் நடந்தது.

யாழ் திருக்குடும்பக் கன்னியர் மடத்திற்கு மேலை நாடுகளில் இருந்து சபை அதிகாரிகளுக்குப் பரதநாட்டியக் கலையின் மேன்மையை விளங்க வைக்கக் கூடிய வகையில் எனது கலைப்பணி அமைந்து உள்ளது.

பேட்டி: - தேவி பரமலிங்கம் -

தரமான கலைநிகழ்ச்சிகளைத் தயாரித்து வழங்குவதில் நான் ஈடுபட்டுள்ளேன்.

கிறிஸ்தவ சமயக் கருத்துக்களைப் பரதநாட்டியக்கலை மூலம் மக்கள் அறியவேண்டும். அந்தப் பணியில் தான் நான் ஈடுபட்டுள்ளேன். பெருமளவு கிறிஸ்தவ நிகழ்வுகளையே நாட்டியமாகத் தயாரித்து வருகின்றேன்—

இப்படிக் கூறுகிறார் செல்வி. மதி சேவியர். (எ-51)

அனுமானம் என்றால் என்ன?

நாம் சில நிகழ்வுகளைக் காண்கிறோம். அவைகள் ஏன் நிகழ்கின்றன என வினாக்களை எழுப்புகின்றோம். அவற்றோடு தொடர்புடைய வேறு சில கூறுகளையும் கவனிக்கின்றோம் அப்போது சில கருத்துக்கள் நமக்குத் தோன்றுகின்றன. அவைகளைத் தான் நாம் அனுமானங்கள் என்கிறோம்.

ஒரு டாக்டர் புற்றுநோயைப் பற்றிய ஆராய்ச்சியில் ஈடுபட்டுள்ளார் என வைத்துக் கொள்வோம். புற்றுநோயால் துயரப்படுவோரில் பலர் புகை பிடிப்பவர்களாக இருப்பதை அவர் காண்கிறார். உடனே புகை பிடிப்பதால் புற்றுநோய் வருகிறது என்ற கருத்து மனதில் தோன்றலாம். இதுதான் அனுமானம் (Hypothesis) என்பன.

வேறு ஒரு ஆய்வாளர் கெட்டுப்போன சிறுவர்களைப் பற்றிப் படிக்கிறார் என வைத்துக்கொள்வோம். அவர் அந்தச் சிறுவர்களது குடும்பச் சூழலை ஆராய்கிறார். அப்போது அந்தச் சிறுவர்களின் பெற்றோர்களில் பலர் பொறுப்பற்றவர்களாய் இருக்கிறார்கள் என்பதை அவர் கவனிக்கிறார். உடனே பெற்றோர்களின் அலட்சியத்தினால்தான் குழந்தைகள் கெட்டுப்போகிறார்கள் என்ற கருத்து உருவாகலாம். இதுவும் ஓர் அனுமானம்தான்.

இப்படியாகத் தோன்றும் அனுமானங்கள் சரியா அல்லது தவறு எனக் கண்டுபிடிக்கும் முயற்சிதான் ஆய்வில் முக்கியமானது.

அனுமானம் என்பது ஒரு சிக்கலுக்கு நாம் தரும் ஒரு தற்காலிக விடைதானே தவிர அதுவே தத்துவம் அல்ல, இரண்டு மாறிகட்கு இடையேயுள்ள உறவு பற்றிய கருத்து அது. எடுத்துக் காட்டாக,

1. புகைப்பிடித்தலும் புற்றுநோயும்.
2. பெற்றோரின் அலட்சியமும், குழந்தைகளின்சீரழிவும்.

அனுமானத்தை நாம் ஒரு தெளிந்த கூற்றாகவே சொல்ல வேண்டும்.

'புகை பிடித்தால் புற்றுநோய் வரும்' அனுமானத்தை நாம் தர்க்க இயல் முறைப்படி சொல்ல வேண்டும் என பெர்ட்ரண்டு ரஸ்ஸல் கூறுகிறார்.

'இது இருந்தால் அது'
'புகை பிடித்தால் புற்றுநோய்''

இவ்வாக்கியத்தில் உள்ள முதல் பகுதியை (புகை பிடித்தால்) முன்னோடி என்றும் இரண்டாவது பகுதியை (புற்றுநோய்) பின்னோடி என்றும் சொல்லலாம். முன்னோடி இருந்தால் அதன் விளைவாகப் பின்னோடி தோன்றும்.

காரண காரியமா...?

ஆனால் மாறிகளிடையே உள்ள உறவு காரண காரியமானதாகத்தான் இருக்க வேண்டும் என்ற கட்டாயம் இல்லை. பொதுவாக ஒன்று நடந்தால் அது வேறொன்றின் விளைவாகத் தான் இருக்க வேண்டும் என்று நாம் கருதுகிறோம். அது தவறு. நன்றாக வளர்ந்துவிட்ட அறிவியல் பாடங்களில் அப்படி இருப்பதில்லை.

அனுமானங்கள் உருவாவதே ஒரு சுவையான நிகழ்ச்சி. நாம் ஒரு பாடத்தில் வரும் தத்துவங்களை மாற்றும் விளக்கங்களை உன்னிப்பாகப் படித்தால் புதிய புதிய அனுமானங்கள் தோன்றும். மாட்டு அம்மை நோய் வந்தவருக்கு பெரியம்மை நோய் வருவதில்லை என்ற அனுமானத்தை எட்வர்டு ஜென்னர் உருவாக்கியதே இப்படித்தான்.

ஆப்பிள்கள் கீழே தான் விழுந்து கொண்டு இருக்கின்றன. நியூட்டன் அந்த நிகழ்ச்சியை உற்றுநோக்கியதால் தான்,

'பூமிக்கு இழுப்பு சக்தி ஏதும் இருக்கிறதோ...! என்ற அனுமானம் அவருக்குத் தோன்றியது.

சில சமயங்களில் அனுமானங்கள் குருட்டாம் போக்கில் தோன்றுவதுண்டு. நாம் ஒரு குறிப்பிட்ட விஷயத்துக்காக ஆய்வு செய்துகொண்டிருக்கலாம். அப்போது நாம் எதிர்பாரதது நிகழக்கூடும். அதனால் நாம் புதிய அனுமானங்களை உருவாக்கலாம். ஃப்ளெமிங் பென்சிலின் மருந்து கண்டு பிடித்தது மற்றும் ரான்ட்ஜென் எக்ஸ்-ரேயைக் கண்டுபிடித்தது. ஆயவற்றை நாம் எடுத்துக் காட்டுகளாகக் கூறலாம்.

ஒரு நல்ல அனுமானத்திற்கு சில தன்மைகள் வேண்டும் அவையாவன:

- ஜி. வில்சன் அமல்ராஜ் -

1. ஓர் அனுமானம் தெளிவான கருத்துக்களை உள்ளடக்கியதாக இருக்கவேண்டும். மாறிகள் எந்தப் பொருளில் பயன்படுத்தப்படுகின்றன என்பதைத் தெளிவாக வரையறுத்துக் கூறவேண்டும். அவைகளை எந்த ஆய்வாளரும் அதே பொருளில் பயன்படுத்தக்கூடியதாக இருக்க வேண்டும்.

2. ஓர் அனுமானம் சோதனைக்கு உள்படக்கூடியதாக இருக்கவேண்டும். புள்ளியியல் முறையில் தகவல் சேர்த்து அதனை நாம் ஆய்வதாக இருக்கவேண்டும். பெறுப்பேற்ற கூற்றுக்களை நாம் அனுமானங்களாகக் கொள்ள முடியாது.

எடுத்துக்காட்டிற்கு 'சில தமிழர்கள் எல்லாம் சோம்பேறிகள்' 'வேலைக்குப் போகும் பெண்கள் எல்லாம் கெட்டவர்கள்' போன்றவர்கள் இளைஞர்களை ஈர்ப்பதில்லை. அனுமானம் என்று கொள்வதேயில்லை.

3. ஓர் அனுமானத்தை எழுதும்போது சொற்சுருக்கம் தேவை. 'புகை பிடித்தால் புற்றுநோய் வரும்' இதையே புகைபிடித்தலின் காரணமாகப் பலருக்குப் புற்றுநோய் வரக்கூடிய வாய்ப்புள்ளது என்பதை முதற்கண் சொல்லிக்கொள்ள கடமைப்பட்டுள்ளேன்' என்ற முறையில் எழுதக்கூடாது.

4. குறிப்பிட்ட தொழில் நுட்பச்சொற்களைக் கொண்டு தான் நாம் அனுமானத்தை உருவாக்கவேண்டும். அதை விடுத்துப் பெதுவான கன மற்ற வார்த்தைகளைக் கொண்டு அதை எழுதக் கூடாது.

5. இருக்கின்ற அறிவியல் வழிமுறைகளைக் கொண்டு சோதிக்கக் கூடியதாக அந்த அனுமானம் இருக்கவேண்டும். எடுத்துக்காட்டாக பேய், பிசாசு மற்றும் ஆவிகளைப் பற்றி இன்றைக்கு அறிவியல் வழியில் ஆய்வு செய்யமுடியுமா...?

6. சில நேரங்களில் சில அனுமானங்கள் புதிய அறிவியல் வழிமுறைகளைக் கண்டுபிடிக்கவும் நமக்குத் துணை புரிகின்றன.

7. இன்றைக்கு நம்மிடையே உள்ள உண்மைகள் மற்றும் தத்துவ விளக்கங்களோடு அது தொடர்புடையதாக இருக்கவேண்டும். அனுமானம் என்பது ஆகாயத்தில் இருந்து குதித்த ஒன்றல்ல. இருக்கின்ற தத்துவம் ஒன்றை மறுக்கவோ அல்லது திருத்தவோ அல்லது [illegible] தானே அனுமானம் என்ற ஒன்றே உருவாகிறது. ★

பொது அறிவுப்போட்டி இல. 23

1. தாவித்திரிவது எது? ... ... மனம் / குரங்கு
2. எதைச் செல்வம் என்பார்கள்? ... ... வீடு / மாடு
3. கண்ணனின் கையில் இருப்பது? ... ... சக்கரம் / குழல்
4. உள்ளே முத்து இருக்கும்? ... ... மாதுளை / சிற்பி
5. வெய்யிலில் உருகுவது? ... ... மெழுகு / வெண்ணெய்
6. வலையில் சிக்குவது? ... ... மீன் / மான்
7. அளக்கமுடியாது என்பர்? ... ... பெண்மனம் / சமுத்திரம்
8. பூப்போன்றது? ... ... குழந்தை / பெண்
9. நம்மைக் காப்பது? ... ... நல்வினை / கடவுள்
10. சாத்திரம் பார்ப்பது? ... ... திருமணத்திற்கு / எதிர்காலத்திற்கு
11. சீதையின் சகோதரன் என்பர் ... ... வால்மீகி / விஸ்வாமித்திரர்
12. திருக்குறளின் முதல் எழுத்து? ... ... ஆனா / தீனா

பெயர்:- .....
விலாசம்:- .....
.....

பொது அறிவுப்போட்டி இல: 23
சஞ்சீவி,
292/2, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

..... இங்கே வெட்டுக .....

நிபந்தனைகள்

சரியான விடைகளை அனுப்பியவர்களில் மூன்றுபேர்கள் குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்பட்டு பரிசுகள் வழங்கப்படும். கடிதம் கிடைத்தவுடன் நேரில் வந்து பணத்தைப் பெற்றுக் கொள்ளலாம்.

ஆசிரியரின் தீர்ப்பே முடிவானது. உதயன் / சஞ்சீவி ஊழியர்கள் போட்டிகளில் கலந்து கொள்ள முடியாது.

சரியான விடைகளின் கீழ்க் கோடு இடுக. பின்னர் இப்படிவத்தைக் கத்தரித்து அஞ்சல் அட்டையில் ஒட்டி 26 – 04 – 1989 புதன்கிழமைக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக அனுப்பவும்.

கடித உறையினுள் வைத்து அனுப்பப்படும் படிவங்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

முதலாம் பரிசு: 100 ரூபா
இரண்டாம் பரிசு: 50 ரூபா
மூன்றும் பரிசு: 25 ரூபா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிலுவை தாங்கிய பிச்சைக்காரன்!

'ஈழத் திருநாட்டின் அப்போஸ்தலர்' என்ற சிறப்புப் பெயரால் மிகவும் வணக்கத்துடன் இதுவரைகாலமும் ஆசாரத்துக்குரியவர் என அழைக்கப்பட்டுவருபவரும் அறியப்பட்டவருமான யோசேவாஸ் முனிவரை தாய் திருச்சபையானது, 'ஆசாரத்துக்குரியவர்' (Venerable) என உத்தியோகபூர்வமாக அங்கீகரிக்கும் சமய நிரூபனானது 4.4.1989 உரோமை மாநகரில் உள்ள சம்பேதுருவானவர் பேராலயத்தில் நடைபெற்றது. இவரைப் புனிதர்கள் வரிசையில் மகிமைப்படுத்த வேண்டும் என நம் நாட்டின் அனைத்துக் கத்தோலிக்க மக்களும் கடந்த பல ஆண்டுகளாக அவர்பெயரால் இறைவனை வேண்டிவந்தனர். அவர்களது முயற்சி வீண்போகவில்லை. இதுபற்றி நேரில் அறியவும், ஆராயவும் ரோமிலிருந்து இதற்குப் பொறுப்பாளரான அதிவண. ஜேம்ஸ் பிற்ஸ்பற்றிக் அ. ம. தி. என்பவர் கடந்தவருடம் ஆடிமாதம் இங்குவந்து பல பெறுமதியான, உண்மையான தகவல்களைத் திரட்டிச் சென்றார், இதன் நற்பலன்கள்தான் இன்றைய மகிழ்ச்சிக்குரியதும், மகிமைக்குரியதுமான சடங்காகும்.

'ஈழத் திருநாட்டில் அப்போஸ்தலர்' என்ற சிறப்புப் பெயரால் அழைக்கப்பட்டு வருபவரான யோசேவாஸ் முனிவர் 'ஆசாரத்துகுரியவர்' (Venerable) என்று உத்தியோகபூர்வமாக இம்மாதம் 4 ஆம் திகதி ரோமில் சம்பேதுருவானர் பேராலயத்தில் தாய்த் திருச்சபையால் பிரகடனப் படுத்தப்பட்டார்.

அன்னார் பற்றிய வரலாற்றுக்குறிப்பு இங்கு பிரசுரமாகிறது.

'இலங்கையின் அப்போஸ்தலன்' என ஏன் அழைக்கப்பட்டார்?

நமது பண்டைய வரலாறுகளைப் புரட்டிப்பார்ப்போமானால், போர்த்துக்கேயர் வருகையினால்தான் ஈழத்தில் கத்தோலிக்கம் தோன்றியது, கிறிஸ்தவ மதம் பரவுவதற்கும் காலாகியது,

அதன்பின்னர் ஏற்பட்ட சரித்திர மாறுபாடுகளினால், கத்தோலிக்க சமயத்தின் வளர்ச்சி தடைப்படுத்தப்பட்டது. இதனை அழித்தொழிக்கும் அரசியல் முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டன. இத்தனைக்கும் மத்தியில் வேதவிசுவாசத்தை உறுதியுடன் கத்தோலிக்க மக்கள் காப்பாற்றிவந்தார்கள்.

இன்னல்கள் மத்தியிலே இதனை ஊக்குவிக்கவும், உறுதிப்படுத்தவும் வந்து சேர்ந்தவர்தான் கோவையின் கோமகனும் யோசேவாஸ் முனிவர்.

இன்று நம்நாட்டில் கிறிஸ்து மதம் நிலைத்திருப்பதற்கு இவரது தியாகம், தற்பரித்தியாகம், மனவைராக்கியம், பணிவுதான் காரணம்.

17 ஆம் நூற்றாண்டின் அன்றைய நிலையிலே காடு மேடு எல்லாம் கால் நடையாகச் சென்றார். இரப்போன்வேடம் பூண்டு இறைவாக்குரைத்தார். எனவேதான் 'இலங்கையின் அப்போஸ்தலன்' என ஆசாரத்துடன் அழைக்கப்படுகின்றார்.

'தோற்றமும் தொண்டும்'

பிராமண குலத்தவரான யோசேவாஸ் முனிவர் அவர்கள் இந்தியாவிலுள்ள கோவாப் பட்டணத்திலே உள்ள சாயிட்டியில் கிறிஸ்தோப்பர் வாஸ் என்பவருக்கும், மரியாதேமிரண்டா என்னும் மங்கைக்கும் மூன்றாவது குழந்தையாக 1651 ஆம் ஆண்டு சித்திரை மாதம் 29-ந் திகதி பிறந்தார்.

1676 இல் இறைவனின் குருவானார். அன்னை மரியாய்க்கு அடிமையாகத் தம்மை 1677 ஆவணி 5இல் அர்ப்பணித்தார். ஐந்துவருடங்கள் தன் சொந்த நாட்டிலும், பின்னர் கன்னடத்திலும் தொண்டாற்றியபின் 1685 புரட்டாதி 21 இல் தியான சம்பிரதாயத்திற் சேர்ந்து, அதன் சிரேஷ்டராகவும் சிலகாலம் பணிபுரிந்தார்.

யோசேவாஸ் முனிவர்

இக்காலத்தில், நம் இலங்கையில் குருமாரின்றி மக்கள் படும் கஷ்டங்களைக் கேட்டறிந்து, இம்மக்களுக்காக உழைக்க விருப்பங்கொண்டார். அதை நிறைவேற்றயாசகன் வேடம்பூண்டு கால் நடையாகவே 1686இல் புறப்பட்டார். ஒருவருடத்தின் பின்னர் 1687 இல் இரகசியமாக மன்னாரிலே வந்திறங்கி, அங்கிருந்து யாழ்ப்பாணம் வந்துசேர்ந்தார்.

'யாழ்ப்பாணத்தில் பணி'

அக்காலத்திலே, ஒல்லாந்தரின் அடக்குமுறைகளாலும், கொடுமைகளினாலும் ஒடுங்கி, ஒதுங்கி வாழ்ந்த யாழ். கத்தோலிக்க மக்கள், பிறமதத்தவர்களைப்போலவே வாழ்ந்து வந்தார்கள். இதனால் இங்கு வந்த யோசேவாஸ் முனிவருக்கு உடனடியாகத் தம்மை வெளிக்காட்டவும், உண்மையான கத்தோலிக்கரைக் கண்டுபிடிப்பதும் மிகவும் கடினமாக இருந்தது.

இதனால் அவர் பிச்சைக்காரன் வேடம்பூண்டு, வீடு வீடாகத் திரிந்து பிச்சை எடுப்பதன்மூலம் உண்மையான கத்தோலிக்கரைக் கண்டறிந்தார்.

பின்னர்தான் அவர் தம்மை வெளிப்படுத்தி 30வருடங்களாகக்குருக்களின்றியும், சமய அனுட்டானங்களின்றியும் கஷ்டப்பட்ட மக்களுக்குத் தமது பணியினை இரகசியமாகத் தொடங்கினார். ஆனால் மிகவிரைவிலே இவரது பணிக்கும் பாதுகாப்பிற்கும் ஆபத்து வருகிறதை அறிந்த யாழ்மக்கள், அவரை, 'சின்ன உரோமை' என அழைக்கப்படும் சில்லாலைக்கு அனுப்பிவைத்தனர்.

இங்குவாழ் கத்தோலிக்க மக்கள் உறுதியானவிசுவாசம், மனவைராக்கியம்கொண்டவர்களாய் விளங்கியமையால் போர்த்துக்கேயர் காலத்தில் கட்டப்பட்ட ஆலயத்தில் யோசேவாஸ் தலைமையில் வழிபாடுகளை நடத்திவந்தனர்.

எனினும் மிகவும் அந்தரங்கமான முறையில் நடத்தப்பட்ட இவ்விடயம் ஹென்றிக்கு வன்றீ என்ற ஒல்லாந்த அதிகாரியின் காதுகளுக்கு எட்டவே, முனிவரைக் கைது செய்யத் திட்டமிட்டான். ஆனால் தெய்வ செயல் முனிவர் பக்கம் இருந்தது.

"கண்டிக் களத்திலே"

இதன் பின்னர் யோசேவாஸ் முனிவரவர்கள் இங்கிருந்து பூநகரி வழியாகக் கால் நடையாகப் புத்தளத்தை அடைந்து, அங்கு சில காலம் பணி புரிந்தபின் கண்டி மாநகரை அடைந்தார்.

இவரை ஓர் உளவாளியாகச் சந்தேகித்த அரசன் 2- ம் விமலதர்ம சூரியன் இவரைச் சிறையிலிட்டான். பின்னர் உண்மை வெளிப்படவே இவர் விடுதலை பெற்று அரசனின் அனுமதியோடு பணி புரிந்தார்.

அறுவடையோ பெரிது, வேலையாட்களோ மிகவும் குறைவாக விளங்கிய அக்காலத்தில், துடிப்புடன் பணியாற்ற மேலும் இரு குருக்களை வரவழைத்தார். இவர்களின் வருகையின் பின்னர், கண்டியை விட்டு வெளியேறி முனைய இடங்களுக்கு மீண்டார்.

"பணிக்குக் கிடைத்த பதவிகள்"

இவருடைய அயராத கொண்டினையும், சிறப்பினையும் கண்ட கொச்சின் மேற்றிராணியார், இவரை இலங்கையில் தமது பதிலாளியாகவும் (Vicar General) இலங்கையிலுள்ள தியான சம்பிரதாய சபைக் குருக்களுக்கு சிரேஷ்டராகவும் நியமித்தார். இப்பதவிகளினால் தமக்களிக்கப்பட்ட தத்துவங்களைக் கொண்டு இலங்கையின் ஆன்மீகத் தாகத்தைப் போக்க முனைந்தார்.

"பரிவும் பிரிவும்"

1697 இல் கண்டியிலும் அதன் சுற்றுப் புறத்திலும் மிகவும் கொடிய நோயானவை சூரி உண்டாகியது. இந்நோயின் கடுந்தாக்கத்தினால் அநேகர் இறந்தனர். இதனைக் கண்டு பயந்த மக்கள் இடம் பெயர்ந்து சென்றனர். அரசனும் அவன் பிரபுக்களும் கூட இடம் மாறினர்.

இந்நிலையில் நோயாளிகளுக்குச் சிகிச்சை அளிக்கவோ, இறந்தோரை அடக்கம் செய்யவோ முடியாத நிலை ஏற்பட்டது. இவ்வேளை யோசேவாஸ் முனிவரினதும் அவர் உதவியாளர்களினதும் பணி ஒளி வீசியது.

துணிவுடனும் தியாக மனப்பான்மையுடனும் இரவு பகல் பாராது அரும்பணியாற்றினர். இவர்களுக்காக ஓர் வைத்தியசாலையினை தேவாலயத்திற்கருகாமையில் ஏற்படுத்தினர். கடும் உழைப்பின் பலனாக இவரையும் இந்நோய் தாக்கியது. இருந்தும் இவரது பணியில் இடைநிறுத்தம் ஏற்படவில்லை. மாறாகப் பரிவும் பாசமும் பெருகியது.

இவரது இச் சேவையினை அறிந்த ஒல்லாந்தர் மீண்டும் இவரைச் சிறைப்பிடிக்க முயன்றனர். இவர் இல்லாத நேரம் பார்த்து இவரது ஆலயத்தைத் தரைமட்டமாக்கினர். இறைவல்லமை இவரைக் கைவிடவில்லை. ஆனால் இவரால் வரவழைக்கப்பட்ட குருக்கள்மார் இறந்தனர். இவர்களுக்குப் பதிலாக மேலும் பல புதியவர்களை வரவழைத்து அவர்களையும் பணிக்களத்தில் நிறுத்தினர்.

இவருடைய இறுதிக்கால வேளையில் ஏறக்குறைய 50 சிற்றாலயங்களும், யாழ்ப்பாணம், மாதோட்டம், கண்டி, வன்னி முதலிய இடங்களில் மாத்திரம் 30, 000க்கும் அதிகமான கத்தோலிக்கர்கள் இருந்ததாக அறியக்கிடக்கின்றது.

இவர் நோய்வாய்ப்பட்டுத் தொண்டாற்ற முடியாத காலத்தில் மேலும் பல குருக்களை வரவழைப்பித்து பிரிவு வாரியாகப் பணி புரிய வைத்தார்.

கடைசிக் காலத்திலும் ஒல்லாந்தர் இவருக்கு நெருக்கடி கொடுக்கத் தவறவில்லை. கட்டாய மத நெருக்கடிகளைக் கொண்டு வந்தனர். இவற்றைக் கண்டும் அஞ்சாது பணி புரிந்தார்.

ஈற்றில் இறைவனின் அழைப்பு நெருங்கியது. அதன் பிரகாரம் இவருக்கென ஆயத்தம் செய்யப்பட்ட மகிமை முடியினை அணிந்து கொள்ள 1711 – ஆம் ஆண்டு தைமாதம்16–ஆந் திகதி இறையடி சேர்ந்தார். இவருடைய திருச் சடலமானது இவரால் கட்டப்பட்ட ஆலயத்திலேயே, கண்டி அரசனின் அனுமதியோடு நல்லடக்கம் செய்யப்பட்டது. ★

- அருட்திரு எஸ். ஹில்லறி ஜெபநேசன் -
(புனித மரியன்னை பேராலயப் பங்குத் தந்தை, யாழ்ப்பாணம்)

இன்னல்களுக்கு அஞ்சாது தூய்மை வாழ்வுக்காக நடத்தப்பட்ட பத்ருபோர்

நபிகள் (ஸல்) அவர்களின் ஹிஜ்ரத்திற்கு பத்தொன்பது மாதங்களுக்கு முன் ரம்ழான் பதினேழாம் நாள் (ஜனவரி 624) இஸ்லாத்தின் வளர்ச்சிக்காகவும் மறுமலர்ச்சிக்காகவும் பாடுபட்ட ஸஹாபாக்கள் சகிக்க முடியாத பல இன்னல்களுக்கும் ஆளானார்கள்.

பல யுத்தங்களில் கலந்து ரத்தம் சிந்தி, உயிரையும் விட மேலாகப் புனித இஸ்லாத்தை மதித்தார்கள். அதனால் தங்கள் உயிர்கள், உடைமைகள், உரிமைகள் அனைத்தையும் பகைவர்களிடம் பறிகொடுக்க வேண்டிய நிர்ப்பந்தத்திற்குள்ளானார்கள்.

1989 – 04 – 24ம் திகதி பத்ரு ஸஹாபாக்கள் நினைவு தினமாகும். அதனையொட்டி இக்கட்டுரை எழுதப்பட்டுள்ளது.

இஸ்லாம் தளிர்விட்டெழும் விருட்ஷமாக மாறி பூமிக்கடியிலிருந்து வெளிவர ஆரம்பித்தது. அதற்கு நீரும், வளியும் போல் நபிளாரும் சஹாபாப் பெருமக்களும் அமைந்து விட்டனர்.

கலங்கரை விளக்கம்

காலத்தால் அழியாத கலங்கரை விளக்கமான தூயமதம் சமாதானம், ஐக்கியம், ஒற்றுமை, சகோதரத்துவம் போன்றவற்றை வலியுறுத்துவதால் எச்சந்தர்ப்பத்திலும் இவைகளைக் கடைப்பிடித்து பொறுமையுடன் பேணி வந்த சஹாபாக்களுக்கு ஒரு பேரிடி போன்று அமைந்ததே பத்ருப் போர்.

இஸ்லாத்தின் வரலாற்றில் பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்பட்டு பேணிக் காக்கப்படும் அச்சரிதம் இஸ்லாமியர்கள் மத்தியில் அவர்களின் ஆவேசத்தை மீண்டும் தூண்டிடும் பல சம்பவங்கள் அதில் நடைபெற்றுள்ளன.

காரணம் மிகக் குறைந்த நாயகத் தோழர்களுடன் யுத்தகளம் நோக்கிப் புறப்பட்ட (ஸல்) அவர்கள் அங்கே ஆயிரத்திற்கும் மேற்பட்ட பகைவர்கள் குழுமியிருப்பதனைக் கண்டார்கள்.

அப்பகைவர்களோ குதிரை வீரர்கள் அம்பு எறிவதில் நிபுணத்துவம் பெற்றவர்கள், ஒட்டகை வீரர்கள், கால் நடையாக யுத்தம் செய்வோர் போன்ற பலதரப்பட்ட பயிற்சி பெற்றவர்கள்.

ஆனால் நாயகத் தோழர்களோ மிகக் குறைவான முந்நூற்றிப் பதின்மூன்று பேர்களே இருந்தனர். அவர்களில் எழுபது ஒட்டகை வீரர்களும், ஐந்து குதிரை வீரர்களும் எஞ்சியோர் கால் நடையாக யுத்தம் செய்வோராகவுமே இருந்தனர்.

ஆனால் இவர்களில் எவரும் யுத்தப்பயிற்சி பெறாதோராகவே இருந்தனர். இந்நிலையில் என்ன செய்வது என்று ஒரேசிந்தனையில் நபிகள் (ஸல்) அவர்கள் தனிமையில் உட்கார்ந்து இறைவனைப் பிரார்த்தித்துக் கொண்டிருந்தார்கள்.

யுத்தம் ஆரம்பமானது. உச்சக்கட்டத்தையடைந்து கொண்டிருந்த வேளை அல்லாஹ் அவனது அமரர்களை உதவிக்காக அனுப்புகின்றான். அவர்களுடைய உதவியுடன் நாயகமும், அவர்களின் தோழர்களும் வீராவேசத்தோடு போராடிக் கொண்டிருந்தார்கள். சிறுவர்கள் கூட மிகுந்த ஆர்வத்துடன் போராடினார்கள்.

நபிகள் (ஸல்) அவர்களது பொன்னான மேனியில் ஈ, எறும்பு கூட மொய்ப்பதை விரும்பாத சஹாபாத்தோழர்கள் அவ் யுத்தக்களத்திலும் கூட (ஸல்) அவர்களைப் பகைவர்கள் வெட்டிக்கொலை செய்து விடாதவாறு பாதுகாத்தனர். நபிகள் (ஸல்) அவர்களும் தம்தோழர்களுக்கு ஆர்வமூட்டினார்கள்.

'எனதருமைத் தோழர்களே! நாம் மிகக்குறைவானவர்கள் என்ற எண்ணத்தினால் சோர்ந்துவிடாதீர்கள். நாம் பகைவர்களைவிடப் பெருகி வரும் தொகையினராகவே இருக்கின்றோம். யுத்தக் களத்தை விட்டு விரண்டோடிவிடாதீர்கள். நிச்சயமாக அல்லாஹ்வும் அவனது ரசூலும் அச்செயலை விரும்பமாட்டார்கள்' என அறிவுரை கூறிக்கொண்டே இருந்தார்கள்.

யுத்தத்தின் போது இஸ்லாமிய மறைக்கொடியை ஏந்திக்கொண்டு முஸ் அப் (ரலி) அவர்கள் அதனை வானளாவ உயர் தியவர்களாக முன்னேறிக் கொண்டிருந்தார்கள்.

இதனைச் சகிக்காத அப்பகைவன் அவரைக் கொலைசெய்து விடவேண்டும் எனத் தீர்மானித்து அவரின் மார்பகப் பகுதியை நோக்கி ஓரம்பை அனுப்புகிறான்.

அம்பு அவரின்மார்பைத் துளைத்து அவ்விடத்திலே முஸ்அப்(ரலி) அவர்கள் ஷஹீதாக்கப்பட்டார்கள். முஸ் அப் (ரலி) அவர்களின் முன்னைய வாழ்நாகைச் சரிதையைப் படித்துப்பார்த்தவர்கள் அதிர்ச்சியடைவர்.

தியாக மனப்பான்மை

பணம் படைத்த ஓர் செல்வந்தரின் மகன் 200 திர்ஹம்களுக்குமேல் பெறுமதியான ஆடைஅணிவார். சுகமான வாழ்க்கை வாழ்ந்தவர், கஷ்டம், துன்பம் என்றால் என்ன என்றே தெரியாதவர். இத்தகைய ஒருவர் இஸ்லாத்தையும், அதன் தூய்மையான வாழ்க்கைத் திட்டத்தையும் சிறப்புற விளங்கியதனால் தமது உயிரையே தியாகம் செய்வதற்கு முன்வந்தார்களென்றால் அவர்களின் தியாக மனப்பான்மையை நாம் எவ்வாறு விவரிப்பது!

இந்த யுத்தத்தின் போது இறைவனின் உதவி முஸ்லிம்களுக்கு மிக இன்றியமையாத ஒன்றாக மாறியதையிட்டு அதனைப் பற்றி அல்குர் ஆன் பின்வரும் வசனமூலம் தெளிவுபடுத்துகின்றது.

நிச்சயமாக அல்லாஹ் நீங்கள் தோல்வியைத் தழுவுகின்ற நிலையில் இருக்கும்போது உங்களுக்கு உதவி செய்தான். எனவே அவனைப் பயந்து கொள்ளுங்கள் நிச்சயமாக நீங்கள் நன்றியுடையவர்களாவீர்கள். இறைவனின் உதவி அவனை ஏற்போருக்கு நிச்சயம் உண்டு என்பது உறுதி. ★

- மௌலவி கே. பி. நஸார்தீன் (ரசூலி) -
(பேஷ்இமாம் – முஹிதீன் ஜும் ஆப் பள்ளி)

இச்சந்தர்ப்பத்திலேதான் முஸ்லிம்களைத் தோல்வியடையச் செய்யவேண்டும் என்னும் உத்வேகத்தினால் உந்தப்பட்ட ஒரு பகைவன் முஸ்அப் (ரலி) அவர்களின் கொடியைத் தாங்கி நின்ற அக்கரத்தை நோக்கி அம்பு ஒன்றை ஏவினான்.

அம்பு கையில்பட்டு கைதுண்டாக்கப்பட்டநிலையிலும் அக்கொடியைக் கீழே விடாத முஸ்அப் (ரலி) அவர்கள் தமது மறுகரத்தினால் அதனைத் தாங்கினார்கள்.

மறுகரமும் துண்டிக்கப்பட்டது. பின்னர் அக்கொடி கீழே விழுந்துவிட்டால் முஸ்லிம்கள் தோல்வியடைந்து விட்டார்கள் எனப்பகைவர்கள் எண்ணி விடுவார்கள் என்ற கவலையினால் துண்டிக்கப்பட்ட போதும் இரு கரங்களினால் அதனைத் தாங்கிக்கொண்டார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொற்சிலம்பம்



போட்டி இல. 98

சொற்சிலம்பம் இல: 98
சஞ்சீவி,
292/2, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

பெயர்: .....
விலாசம்: .....
.....

இங்கே வெட்டுக

முடிவு திகதி: 3 - 05 - 1989

இடமிருந்து வலம்:

1. வளர்பிறைக் காலம் 6. சங்க காலக் கொடைவள்ளல்களில் ஒருவன் மாறி நிற்கிறான் 7. நாடாளுமன்றம் கலைக்கப்பட்டதும் ஆட்சியில் இருக்கும் அமைச்சரவை 9. கோணத்தை அளவிடும் அலகு 10. பிறக்கும் போது எழுதப்படும் என்பர் 13. இணக்கத்துக்கு உரிய சொல் 14. முகத்தின் உறுப்புகளுள் ஒன்று 15. வலிமை 16, கூட்டு 18. வட்டம். ஓலையால் பின்னியும் தயாரிப்பர் 19. விரோதம் 21. பிரமி 22. தங்கத்தை சுத்தம் செய்வது இப்படி.

மேலிருந்து கீழ்:

1. கப்பலை திசை திருப்பும் கருவி 2. ஒரு வகை சமஸ்கிருத எழுத்துக்கள் 3. சேனை 4. ஆடையில் நெசவு செய்யப்படும் பொன் அல்லது வெள்ளி இழைகள் 5. பிரணவம் 8. வெகுதூரம் 9. அரைவாசி 11. பகுபத உறுப்பில் இறுதியானது 12. போதை தருவது 13. வணக்கத்துக்கு உரியவர் 14. பெண் 15. தினத்தைக் குறிப்பது. தினமும் மாறுவது 16. கணை 17. சளி 20. பறவை.

நிபந்தனைகள்

சரியான விடைகளை அனுப்பியவர்களில் மூன்று பேர் குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்பட்டு பரிசுகள் வழங்கப்படும். கடிதம் கிடைத்தவுடன் நேரில் வந்து பணத்தைப் பெற்றுக் கொள்ளலாம்.

ஆசிரியரின் தீர்ப்பே முடிவானது. உதயன்/சஞ்சீவி ஊழியர்கள் கலந்துகொள்ள முடியாது.

படிவத்தைக் கத்தரித்து அஞ்சல் அட்டையில் ஒட்டி அனுப்பினால் மாத்திரமே ஏற்றுக்கொள்ளப்படும்.

அஸ்தமனங்கள்!

சூரியன்!
ஓர் உதயத்திற்காக
அஸ்தமித்துப் போகிறது...
நானோ...
ஓர் இதயத்திற்காக
அஸ்தமித்துப் போகிறேன்!

— நல்லூர் தாஸ்

உன் நினைவும் என் பேனாவும்

என்
பேனாவுக்கு
உன்பெயரை
எப்போது கூறினாய்...?
அது
தினமும், தினமும்
உன் பெயரையே
எழுதுகிறதே!

★ ★ ★

தழுவல் கதைகளை
எழுதத் தயங்கும்
என் பேனா...
உனைத் தழுவிய கதைகளை
எழுதி... எழுதி...

★ ★ ★

கற்பனைக் கட்டுரையை
கனவிலும் எழுதா
என் பேனா
நீ
என்னைத் தொட்டபின்
இலக்கிய ஆசிரியர்கள்
இரவல் கேட்கிறார்களே!

- நாவற்குழியூர் பிரபாகர்

'பித்தா' என்று ஏன் இறைவன் அழைக்கப்படுகின்றான்?

ஓர் ஏழைப்பெண்ணுக்கு ஆண் குழந்தை ஒன்று பிறந்த சில வருடங்களிலேயே கணவன் காலமாகி விட்டான்.

அந்தப் பெண் படாதபாடு பட்டு தன் மகனை வளர்த்ததுடன் அவனைத் தொடர்ந்து படிக்கவும் வைத்தாள். அவனும் பட்டம் பெற்று உயர் உத்தியோகத்திலும் அமர்ந்தான். அதிலும் வங்கியில் உத்தியோகம். பெரிய பெரிய ஆட்கள் எல்லாம் 'ஓடி ஓடி' (ஓவர் டிராப்ட் என்றும் ஒரு பொருள்) என்று அவனைத் தேடி வந்து பார்ப்பார்கள்.

இந்த செல்வாக்கினால் அவனுக்குப் பெரிய இடத்துப் பெண்ணைத் தர முன் வந்தார்கள். அப்படியே அவனுக்குச் சிறப்பாக திருமணமும் நடந்தது.

வீட்டுக்கு வந்த பெரிய இடத்துப் பெண், அதற்குள் அவன் அம்மாவைப் பற்றி ஏதோ கோள் சொல்லி வைத்தாள்.

தன் அம்மா தனக்காக எவ்வளவு கஷ்டங்களை ஏற்றிருக்கிறாள். அவளால் அல்லவா நாம் இந்த உயர்ந்த நிலைக்கு வந்தோம் என்பதை மறந்த அந்த மகன், உடனே தன் அம்மாவை வீட்டுப் புறக் கடையில் குடியிருக்க வைத்து விட்டான்.

இன்னொரு நாள் அவன் அலுவலகத்தில் இருந்து திரும்பும்போது பெரிய இடத்துப் பெண்ணை அவள் மனைவி விசித்து விசித்து அழுவதைப் பார்த்தான்.

'ஜான் ஜான்' என்று பத்டமாய் அழைத்தான். அவள் பெயரில் ஒரு எழுத்தை விட்டு விட்டு அழைப்பதுதான் இப்போது அவன் வழக்கம். விட்டுப் போன எழுத்து 'கி' என்பதாகும்.

இந்த 'கி' யை மட்டுமா அவன் விட்டான்? விட்டுக் 'கீயையே' (சாவியை) இப்போது அவளிடம் தானே விட்டுவைத்திருக்கிறான்.

அந்த ஜான் விசித்துக் கொண்டேசொன்னாள், உங்கள் அம்மா என்னை உற்று உற்றுப் பார்க்கிறார்கள்?'... என்று...

உடனே 'இந்தமகன் புறக் கடையை எட்டிப் பார்த்து தன் அம்மாவைக் கோபமாக அழைத்து; 'ஏம்மா ஜானை உற்று உற்றுப் பார்க்கிறீர்கள்? என்று கேட்டான்...

'நான் ஒன்னும் தப்பாய்ப் பார்க்கலைப்பா உன் சம்சாரம் இல்லையா... ஆசையா பாத்திருப்பேன், என்றாள்.

'அம்மா... என்னவா இருந்தாலும் ஏன் அவளைப்பார்க்கிறீர்கள்? என்றுகேட்டபடியே அந்தமகன் தாயை ஓங்கி அடித்தான். அந்த வயதில் வலிதாங்க முடியாத அம்மா அடுத்த அடியை இருகைகளாலும் தடுக்கமுயன்றாள்...

அதற்குள் மருமகளோ, 'ஐயோ அத்தையை அடிக்காதீங்க' என்று சொல்லிக் கொண்டே அத்தையின் இரு

கைகளையும் சேர்த்துப் பிடித்துக்கொண்டாள்.

இப்போது மகனுக்கு அம்மாவை அடிக்க வசதியாய்ப் போய்விட்டது. மேலும் பல அடிகளைக் கொடுத்தான்!

மகனிடம் அடிபட்டு புண்ணாய் வலித்த உடம்போடு அந்த அம்மா சாயந்தரம் சர்வேஸ்வரன் கோயிலுக்குப் போனாள்.

'பகவானே... அவன் என் பிள்ளை. அவனோட மனைவியும் எனக்கு இன்னொரு பிள்ளை மாதிரித்தான் அவர்கள் ஏதோ அறியாமல் நடத்துவார்கள் அதை நீ பெரிசாக எடுத்துக் கொண்டு, அவர்களுக்கு ஏதும் குறை வைக்கக்கூடாது'

என்று அந்த அம்மா உருகி வேண்டினாள்.

இதைத்தான் 'பெத்தமனம் பித்து' என்று சொல்கிறோம்.

இங்கே பித்து என்று சொல்லப்படுவது 'பைபித்தியம்' என்ற பொருளில் இல்லை. தனக்குச் செய்யும் துன்பத்தை மறந்து பிள்ளைகள்மேல் ஒரு தாய் வைக்கிற மெய் அன்பையே பித்து என்று குறிப்பிடுகிறோம்.

இதேமாதிரித்தான் நாம் கடவுளைப் பழித்தாலும் கோவிலையே இடித்தாலும் நம்மீது மெய்யன்பைச் செலுத்தி நம்மை சர்வேஸ்வரன் வாழவைக்கிறான். அதனால்தான் அவனுடைய மெய்யன்பை மனதிற்கொண்டு அவனைப் 'பித்தா' என்று அழைத்தார்கள்.

★

திருமுருக கிருபானந்தவாரியார்

என்ன வியாதி உனக்கு?

— செ. குணரத்தினம் —

வைத்தியரே ஐயா
வந்தனம்; என்னுடைய
கை பிடித்துப் பாராமல்
கண்டறிய ஓர் வியாதி
மெய்க்குள்ளே கிடந்தென்னை
மின்னலைப்போல் அடிக்கிறது
பொய்யில்லை; உங்களுக்கு
புரியநான் செப்புகிறேன்.

'கருக்கல்' விழும்நேரம்
காகங்கள் தூங்கியபின்
'சரக்' கென்று வேலியோரம்
சத்தங்கள் கேட்டாலும்
சுருக் கென்று நெஞ்சமது
சுருங்கித் தவிக்கிறது!
இதுக்கேதும் பரிகாரம்
இருக்கிறதா வைத்தியரே?

முற்றத்தில் நிற்கின்ற
முருங்கைமர இருளும்
சுற்றி வளைத்தெம்மைச்
சுடும் ஆமட்கார் போல
புத்தியிலே உறைக்கிறதே
பூவரசம் வேலிகூட
பட்டாளக் காரர்களின்
பவனிபோல் தெரிகிறதே!

குடத்தடி வாழைமொத்தி
கோபுரக் கலசம், நம்ம
மடத்தடி முருகர் மொட்டை
மனைவியின் கொண்டைகூட
எடுத்தடி வைக்கும் போதே
எறிகுண்டாய்த் தெரிந்துநெஞ்சை
உடைப்பதேன் ஐயா நீங்கள்
உடன்பரிகாரம் சொல்வீர்?

'ஆலா' பறந்து செல்ல
அதைக் ஹெலிக்கப்டரென்றும்
வேலாப் போடியாரின்
வெற்றிலைக்குட்டான் ஜீப்பை
தூளாக்கும் கண்ணிவெடித்
தோற்றம் போல் இருக்குதென்றும்
நாளாந்தம் எனது நெஞ்சம்
நம்பிவீண் நடுங்குதய்யா!

தகரத்தில் மழைவிழுந்தால்
தார் ரோட்டில் 'ரியூப்' வெடித்தால்
அகமெல்லாம் வெடிக்குதய்யா!
ஆர்வீட்டு நாயெனினும்
பகலிரா வேளைதன்னில்
பாதையில் சத்தமிட்டால்
தகதிமித்தாதெய்யென்று
தலைமெய்கால் உதறுதய்யா!

அதிகமேன் உங்கள் காதில்
ஆடிடும் கடுக்கன்கூட
பதிந்துடல் துளைத்துச் செல்லும்
'புளட்'டைப்போல் தோன்றி நெஞ்சை
வெடித்திட வைக்குதய்யா!
விரைவாக இதற்கு நீங்கள்
பரிகாரம் செய்யாவிட்டால்
பாவிநான் வாழேனய்யா!

கொஞ்சம் பொறு!

நண்பனே! கொஞ்சம் பொறு
என் மௌனத் தவத்தைத்
தவறாகப் புரிந்து விடாதே!
கயலின் விழி என்பாய் - பின்
கண்ணே என்பாய்.....
குயிலின் மொழி என்பாய் - பின்
கனி மொழியே என்பாய்.....
வர்ணனைகளைத் தொடங்கி விடாதே!
எண்ணங்களைச் சிதற விடாதே!
வீட்டுக் கதவைத் தட்டு - என்
இதயக் கதவைத் தட்டி விடாதே!
யாசிப்பதற்கு யோசிக்காதே
பூஜிக்க ஒரு தெய்வம்
உள்ளே இருக்கிறது!

- யாழ். அஸீம் -

சீதனம்

தேடி எமை அன்பு சேர்த்து
கோடி ஆசை பல வளர்த்து - பின
நாடிச் செல்கின்றீர் கோடீஸ்வரரை
மாடி மனை வேண்டுமென்று;
வாடிய எமது இதயம் புரியாமல்
ஓடிச்செல்லும் நீங்கள் எமக்கு
சூடித்தந்த சீதனம்
'தாடி'யும் 'பீடி'யும் தான்
கோடிகள் கண்டதும் சோடி பல மாறும்
கேடிகள் நாமில்லை
இலட்சங்கள் கண்டதும் இலட்சியத்தை மாற்றிடும்
அலட்சியர்கள் நாமில்லை.

- மானியூர் ரட்ணேஷ்

CHUMS

மீண்டும்சுவைத்திட

அன்று அனைவரும் விரும்பிச் சுவைத்த
CHUMS சுவை மீண்டும்.....
CHUMS ஜேம், கோர்டியல், ஜுஸ் வகைகள்

ஸ்ட்றேபரி
பிளெக் கரண்ட்
பெஷன்புருட்
அன்னாசி
மிக்ஸ்ட்புருட்
மார்மலேட்
மாம்பழம்
விளாம்பழம்

மதுரச் சுவை
குடும்பத்தவரைக் களிப்பூட்டும்

CHUMS உயர்ரக ஜேம், கோர்டியல், ஜுஸ் வகைகள்

ஐலண்ட் கன்ஸ்யூமர் ப்ரொடக்ட்ஸ் லிமிட்டெட், 3 வது மாடி, யோக ஆக்கே பில்டிங், கொழும்பு - 1 தொலைபேசி 34734

★ மில்ரொக்ஸ் கொயில்கள், "பபிள்" சலவைப் பவுடர், ரிப்போல் மற்றும் ஏனைய ரகங்கள் ★
எமது ஏக விநியோகஸ்தர்களாக

★ V. வடிவேல் ★
(லங்கெம் பிராந்திய விற்பனை நிலையம்)
219, 221, மின்சார நிலையவீதி, யாழ்ப்பாணம்.

நியமிக்கப்பட்டுள்ளார்கள் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்ளுகின்றோம்.

(C/2293)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எமது அடுத்த யாத்திரைகள்

உல்லாசபுரி சுற்றுலாக்கள்

159 ஆவது – ஆனி 89 – தமிழ்நாடு. கேரள, கர்நாடக —ஆந்திர யாத்திரை.
160 ஆவது – ஆடி 89 – தமிழ்நாடு, கேரள, கர்நாடக —ஆந்திர யாத்திரை.
161 ஆவது – ஆவணி89 – தமிழ்நாடு,கேரள, கர்நாடக —ஆந்திர யாத்திரை.
16 ஆவது – வைகாசி 89 – பாங்கொக்,சிங்கப்பூர் —உல்லாச சுற்றுலா.
17 ஆவது – ஆவணி 89 – பாங்கொக், சிங்கப்பூர் —உல்லாச சுற்றுலா.

சுஞ்சுவி சஞ்சிகை

22 - 04 - 1989 சனிக்கிழமை

வடமாகாணத்தில் அரசாங்க உல்லாசப் பயண சபையால் அங்கீகரிக்கப்பட்ட ஒரேயொரு பிரயாண ஸ்தாபனம்.
28 வருட அனுபவமுள்ளோர்
பாஸ்போட்டுக்கள், இந்திய விசாக்கள் எடுத்துக் கொடுக்கப்படும்.

ராஜா டூர்ஸ்
168/1, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

உள்நாட்டு யுத்தத்தால் சீரழியும் லெபனான்

அதிகாரப்போரில் முஸ்லிம்கள் - கிறிஸ்தவர்கள்

லெபனான் நிலைமை தற்போது மோசம் அடைந்து வருகிறது. கிறிஸ்தவர்கள் வாழும் பகுதிகளில் இருந்தும் முஸ்லிம்கள் வாழும் பகுதிகளில் இருந்தும் எறியப்படும் ஷெல்களினால் நூற்றுக்கணக்கானோர் கொல்லப்பட்டு வருகின்றனர். ஆயிரக்கணக்கானோர் காயமடைந்து வருகின்றனர். ஷெல்கள் மழை போல் பொழிவதால் வீடுகள், தொழிற்சாலைகள், மற்றும் கட்டடங்கள் தரைமட்டமாகி வருகின்றன.

1987 ஆம் ஆண்டு ஸ்ரீலங்காவின் வடபகுதியில் நடத்தப்பட்ட ஷெல் தாக்குதல்களின் பின்பு குடிமக்கள் வாழும் பகுதிகளில் நடத்தப்படும் பெரும் தாக்குதல்களாக லெபனான் தாக்குதல்கள் கருதப்படுகின்றன.

ஷெல் வீச்சில் இருந்து தப்புவதற்காக மக்கள் தமது வீடுகளில் இருந்து வெளியேறி பாதுகாப்பு அரண்களில் தஞ்சம் அடைந்து வருகின்றனர்.

உள்நாட்டு யுத்தத்தினால் சின்னாபின்னமடைந்துள்ள லெபனானில் தற்போது தோன்றி உள்ள நிலைமை அதிபயங்கரமானது என்று அவதானிகள் கருதுகின்றனர்.

கிறிஸ்தவ - முஸ்லிம் பலப்பரீட்சை

தற்போதைய நெருக்கடியில் சம்பந்தப்பட்டிருப்பவை. மேஜர் ஜெனரல் மைக்கல் அவுனின் (Michael Aoun) கிறிஸ்தவப் படைகளும் முஸ்லிம் ஆயுதக் குழுக்களும் ஆகும்.

முன்னாள் ஜனாதிபதி அமின் ஜமாயல் (Amin Gemayel) ஏற்படுத்திய இராணுவ அமைச்சரவைக்கு மைக்கல் அவுன் தலைமை வகிக்கிறார். முற்று முழுதாக கிறிஸ்தவர்களைக் கொண்ட கிழக்கு பேரூட்டில் மைக்கல் அவுனின் நிர்வாகம் இருந்து வருகிறது.

முஸ்லிம்களைக் கொண்ட மேற்கு பேரூட்டில் பிரதமர் சேலிம் ஹோஸ்ஸின் (Selim Hoss) ஆதிக்கம் இருக்கிறது.

லெபனானின் அரசமைப்புப்படி ஒரு கிறிஸ்தவ ஜனாதிபதியும் முஸ்லிம் பிரதமரும் இருக்க வேண்டும். கிறிஸ்தவர்களுக்கும் முஸ்லிம்களுக்குமான அரசியல் அதிகாரப் பகிர்வை உறுதி செய்யும் நோக்கத்துடன் அரசமைப்பில் இதற்கு வழி செய்யப்பட்டுள்ளது. ஆனால் கிறிஸ்தவர்களும் முஸ்லிம்களும் தற்போது ஒன்றிணைய மறுத்து வருகிறார்கள். மதரீதியாக நாடு துண்டாடப்பட்டிருக்கிறது.

மேஜர் ஜெனரல் மைக்கல் அவுனின் கிறிஸ்தவப்படை சுமார் 15 ஆயிரம் வீரர்களைக் கொண்டது. இந்தப்படைக்கு எதிராக 6 முஸ்லிம் ஆயுதக் குழுக்கள் செயற்படுகின்றன. ட்ரூஸ் (Druze) ஷியா (Shiite) சுனி (Sunni) என்று பல்வேறு பிரிவுகளாக இந்த முஸ்லிம் குழுக்கள் செயற்படுகின்றன. எனினும் மேஜர் ஜெனரல் மைக்கல் அவுனின் கிறிஸ்தவ படைகளை எதிர்ப்பதில் இவை ஐக்கியப்பட்டுள்ளன. முஸ்லிம்களுக்கு ஆதரவாக லெபனானில் உள்ள சிரியப் படைகள் செயற்பட்டு வருகின்றன.

சிரியப் படை

1976 ஆம் ஆண்டு அதாவது லெபனானில் உள்நாட்டு யுத்தம் ஆரம்பமாகி ஒருவருடத்தின் பின்னர் சிரியா லெபனானுக்குள் படைகளை அனுப்பியது. கிழக்கு லெபனானில் பெக்கா பள்ளத்தாக்குப் (Bekaa Vally) பகுதியில் சிரியப்படைகள் நிலை கொண்டுள்ளன. லெபனானில் சுமார் 75 சதவீத பகுதியைத் தமது கட்டுப்பாட்டின் கீழ் இவை வைத்துள்ளன. சுமார் 35,000 பேர் வரை இப்படையில் இருக்கலாம் என்று நம்பப்படுகிறது.

கிறிஸ்தவப் படைகளுக்கு எதிராகப் போராடும் முஸ்லிம் குழுக்களுக்கு சோவியத் யூனியனில் தயாரிக்கப்பட்ட நவீன ரொக்கெட் லோஞ்சர்கள் (Multi Barrel rocket launchers) கிடைப்பதற்கு சிரியாவே காரணம் ஆகும்.

மத்திய கிழக்கில் சோவியத் யூனியனின் மிக நெருங்கிய நட்புநாடு சிரியா. இஸ்ரவேலுடனான தகராற்றைச் சாதகமாகப் பயன்படுத்தி சோவியத் யூனியனின் உதவியுடன் சிரியா தனது ஆயுத பலத்தை அதிகரித்துக் கொண்டுள்ளது. மத்தியகிழக்கில் உள்ள அரபு நாடுகளில் பலம் வாய்ந்த நாடாக இது கருதப்படுகிறது. தலைநகரான பேரூட் முற்றாக அழிந்தாலும் சிரியப் படைகளை லெபனானில் இருந்து வெளியேற்ற வேண்டும் என்பதில் மேஜர் ஜெனரல் மைக்கல் அவுன் பிடிவாதமாக இருந்து வருகிறார்.

துறைமுகத்தடை

கடந்த மாதம் 14 ஆம் திகதி லெபனானில் மீண்டும் சண்டை மூண்டதுக்குப் பிரதான காரணம் மேஜர் ஜெனரல் மைக்கல் அவுன் மேற்கொண்ட ஒருதலைப்பட்ச நடவடிக்கை ஆகும்.

அரசாங்கத்தின் உத்தியோகபூர்வ துறைமுகங்கள் தவிர்ந்த ஏனைய தனிப்பட்ட துறைமுகங்களுக்கு இவர் தடை விதித்திருந்தார்.

லெபனான் ஒரு புறம் கடலாலும் மறுபுறம் தரையால் இஸ்ரவேலையும் சிரியாவையும் எல்லைகளாகக் கொண்ட நாடாகும். நாட்டின் பெரும் பகுதி அரசாங்கத்தின் கட்டுப்பாட்டின் கீழ் இல்லாததால் ஆயுதக் குழுக்கள் தமது கட்டுப்பாட்டின் கீழ் உள்ள பகுதிகளில் துறைமுகங்களை நிர்வகித்து வந்தன. ஆயுதக் குழுக்களுக்குத் தேவையான 'சப்ளை'கள் இப்படியான துறைமுகங்கள் மூலமே கிடைத்து வந்தன. முஸ்லிம் ஆயுதக்குழுக்களின் உயிர்நாடி இத்துறைமுகங்களே.

தற்போதைய நெருக்கடியைத் தீர்த்து வைப்பதற்காக அரபு லீக் 3 அம்ச சமரசத் திட்டம் ஒன்றை சமீபத்தில் வெளியிட்டிருந்தது. ஆனால் அதுவும் பயனற்றுப் போய் விட்டது.

★ யுத்த நிறுத்தம் செய்தல்.

★ துறைமுகங்களுக்கு விதிக்கப்பட்ட தடையை நீக்குதல்.

★ முஸ்லிம்களைக் கொண்ட மேற்கு பேரூட்டுக்கும் கிறிஸ்தவர்களைக் கொண்ட கிழக்குப் பேரூட்டுக்கும் இடையிலான சகல வழிகளையும் (Crossing Points) திறந்து விடுதல்.

ஐ. நா. படை

லெபனானில் தற்போது ஐ. நா. இடைக்காலப்படைகள் (U. N. Interimforce) இருந்து வருகின்றன. 9 நாடுகளைச்சேர்ந்த 5800 பேர் இதில் அங்கம் வகிக்கின்றனர்.

1978 ஆம் ஆண்டு தென் லெபனானின் மீது இஸ்ரவேல் படை எடுத்தபோது ஐ. நா. படைகள் அங்கு அனுப்பப்பட்டன. 1982 ஆம் ஆண்டில் இஸ்ரவேலின் சுற்றிவளைப்பு ஒன்றில் சிக்கிய பலஸ்தீன விடுதலை ஸ்தாபனத்தின் படைகள் லெபனானில் இருந்து வெளியேறியதைத் தொடர்ந்து இஸ்ரவேல் தென்லெபனானில் இருந்து படைகளை வாபஸ் பெற்றுக் கொண்டது.

தற்போது ஜோர்தானின் மேற்குக் கரையில் சுதந்திர பலஸ்தீன அரசு ஒன்றைப் பிரகடனம் செய்துள்ள பலஸ்தீன விடுதலை ஸ்தாபனத் தலைவர் யாஸீர் அரபாத் 1982 இல் லெபனானில் இருந்து இஸ்ரவேல் படைகளால் வெளியேற்றப்பட்ட பின்பு, டுனிஸில் தனது தலைமை அலுவலகத்தை அமைந்தார்.

தொடர்ந்து டுனிஸிலேயே பலஸ்தீன விடுதலை ஸ்தாபனம் தலைமை அலுவலகத்தைக் கொண்டிருக்கிறது.

1982ஆம் ஆண்டு இஸ்ரவேல் படைகள் தென் லெபனானில் இருந்து வெளியேறிய பின்னர் ஐ. நா. படை அங்கு தனியே விடப்பட்ட நிலையில் இருந்து வருகிறது. தற்போது தென் லெபனானின் ஒரு பகுதியில் இருந்து கொண்டு இப்படைகள் சோதனை நடவடிக்கைகளில் மட்டும் ஈடுபடுகின்றபோதிலும் பெரும்பாலும் தம்மைத் தாமே பாதுகாக்க வேண்டிய நிலையிலேயே இருந்து வருகின்றன.

தேர்தல் இல்லை

உள்நாட்டு யுத்தம் காரணமாக லெபனானில் 1972 ஆம் ஆண்டுக்குப் பின்னர் நாடாளுமன்றத் தேர்தல் நடத்தப்படவில்லை.

மொத்தம் 99 எம். பிக்களில் 75 எம். பிக்கள் மட்டுமே தற்போது உயிருடன் இருக்கின்றனர். ஷெல் தாக்குதல் காரணமாகக் கடந்த வாரமும் எம். பி. ஒருவர் கொல்லப்பட்டார். கடந்த வாரம் ஷெல் தாக்குதல்கள் காரணமாக உயிரிழந்தோரில் ஸ்பெயின் நாட்டுத் தூதுவரும் அடங்கி உள்ளார்.

பிரான்ஸ் நடவடிக்கை

தற்போதைய நிலையில் வெளிநாடுகளின் தலையீட்டால் நிலைமை மேலும் மோசம் அடையும் அபாயம் இருந்து வருகிறது. லெபனானின் கிறிஸ்தவப் படைகளுக்கு எதிராகப் போராடுவதற்கு 1000 பேர் கொண்ட தற்கொலைப்படை ஒன்றை அனுப்பப்போவதாக ஈரான் பயமுறுத்திவருகிறது.

மேஜர் ஜெனரல் மைக்கல் அவுனின் கட்டுப்பாட்டில் உள்ள பேரூட்டின் அதிகாரபூர்வத் துறைமுகத்துக்குத் தனது உதவிக் கப்பல்களை அனுப்பும் பிரான்ஸின் முடிவு மற்றும் ஒரு கொந்தளிப்பை ஏற்படுத்தி வருகிறது.

முதலாம் உலக மகாயுத்தத்துக்கும் இரண்டாம் உலக மகாயுத்தத்துக்கும் இடைப்பட்ட காலத்தில் லெபனானைத் தனது கட்டுப்பாட்டில் வைத்திருந்த பிரான்ஸ் உதவிப் பொருள்கள் அடங்கிய இரு கப்பல்களையும் மருத்துவ சிகிச்சைக் கப்பல் ஒன்றையும் எண்ணெய் தாங்கி ஒன்றையும் பேரூட்டுக்கு அனுப்புகிறது.

உதவி என்ற பெயரில் பிரான்ஸ் ஆயுதங்களைக் கிறிஸ்தவப் படைகளுக்கு விநியோகிப்பதாக முஸ்லிம் ஆயுதக் குழுக்கள் தற்போது குற்றஞ்சாட்டி வருகின்றன.

இதனால் பிரான்ஸ் மீண்டும் லெபனான் நெருக்குதலுக்குள் சிக்கிக் கொள்ளும் அபாயம் உருவாகி வருகிறது. 1983 ஆம் ஆண்டு லெபனானில் உள்ள ஐ. நா. படைத்தலைமை அலுவலகம் மீது முஸ்லிம்களினால் நடத்தப்பட்ட தாக்குதலில் பிரான்ஸைச் சேர்ந்த 53 பராசூட் துருப்புக்கள் கொல்லப்பட்டிருந்தனர்.

உலகில் எந்த ஒரு நாட்டிலும் இல்லாதவாறு நாட்டின் பெரும்பான்மைப் பகுதியில் ஆதிக்கம் செலுத்த முடியாத நிலைமை நீண்டகாலமாக லெபனானில் இருந்து வருகிறது. சிரியப்படைகளை வெளியேற்ற முடிந்தாலும் தற்போது ஆயுதபாணிகளாக உள்ள குழுக்களிடம் இருந்து ஆயுதங்களைக் களைவது சுலபமான காரியம் அல்ல.

★

லெபனான்

உத்தியோக பெயர்:
அல்-ஜும்ஹூரியா அல்-லுப்நானியா-லெபனான் குடியரசு.
அரசமைப்பு: ஒரு நாடாளுமன்றத்துடன் பலகட்சி அரசியல் முறை.
நாட்டுத் தலைமை: ஜனாதிபதி.
அரசுத் தலைமை: பிரதமர்.
தலைநகர்: பேரூட்.
உத்தியோக மொழி: அரபு.
உத்தியோக மதம்: இல்லை.
சனத்தொகை: 27 லட்சத்து 7 ஆயிரம் (1986) 1990 இல் 33 லட்சமாகவும் 2000ஆவது ஆண்டில் 39 லட்சத்து 92 ஆயிரமாகவும் அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.
இன விகிதாசாரம்: (1983) லெபனியர்கள்-82.6%, பலஸ்தீனியர்-9.6% ஆர்மேனியன்-4.9%, சிரியர்கள், குர்டிஷ் மற்றும் இனத்தவர் – 2.9%
மதவிகிதாசாரம்: 1932க்குப் பின்னர் உத்தியோபூர்வ புள்ளி விவரம் கிடைக்கவில்லை. அப்போது கிறிஸ்தவர் பெரும்பான்மையினராகயிருந்தனர் என்று கூறப்பட்டது. இன்று முஸ்லிம்கள் பெரும்பான்மையினர் என்று கூறப்படுகிறது. 1984 இல் உத்தியோகப்பற்றற்ற புள்ளி விவரக்கணக்கெடுப்பின்படி — ஷியா முஸ்லிம்: 32%, மரோனைட்கிறிஸ்தவர்:24.5%, சுனி முஸ்லிம்: 21%, ட்ரூஸ்: 7%, கிரேக்கப் பழைமைவாதிகள்: 6.5%, கிரேக்கத்தோலிக்கர்: 4%, ஆர்மேனிய கிறிஸ்தவர்: 4%, ஏனையோர்: 1%.

★

லகஉரை

எஸ்.பி.சிங்கன்

குடிமக்கள் வாழும் பகுதிகள் இரத்தக் காடாகின்றன

அடக்கம்

அடுப்பினுள் கடும் வாக்குவாதம் நடந்து கொண்டிருந்தது. அடுப்பை மூட்டுவதற்காக கடதாசி, சிறுவிறகுத்துண்டுகள், பெரியவிறகுக் கட்டைகள் யாவும் அடுக்கப்பட்டிருந்தன. மண்ணெண்ணெயை ஊற்றினுள் இல்லத் தரசி.

என்னுடைய சிறப்புப்பற்றி நான் கூறவேண்டுமா? என்ன? நானும் எனது சகோதரர்களும் இல்லாவிட்டால் உலகமே இல்லை. எனது சகோதரர்களான பெற்றோல், டீசல் இலையின்றி உலகமேது? இவற்றை உற்பத்தி செய்யும் நாடுகளே இன்று உலகில் செல்வந்த நாடுகள் என்றது மண்ணெண்ணெய்.

கடதாசிக்குப் பற்றிக் கொண்டு வந்தது. என்னைப் பற்றி நான் அதிகம் புகழக் கூடாது. செல்வம் என்றால் நான்தானே. அந்தநாளில் தங்கமே செல்வம். இன்றோ பண நோட்டுகள். அவை எல்லாம் நம் சகோதரர் அன்றோ? பணம் இருந்தால் வேறென்னவேண்டும் பேரா சிரியர் முதல் பேப்பர் விற்கும் பையன் வரை நான் இன்றி வாழமுடியுமா? என்றது கடதாசி.

நாங்கள் இல்லாது கடதாசி ஏது? எங்களைப்போன்ற சிறு குச்சிகள் தங்களைத் தியாகம் செய்து நானே கடதாசியாகி ஊர்கள். தியாகிகள் எவ்வளவு பெருமைக்குரியவர்கள் தெரியுமா? வீண் பிதற்றல் வேண்டாம் என்றன சிறுகுச்சிகள்.

பெரு விறகுகளுக்கோ பொறுமை எல்லை மீறியிருந்தது. நாங்கள் இல்லாவிட்டால் சிறு குச்சிகள் ஏதாவது ஒரு சேட்டை ஓடும் ரயில் உட்கார்ந்து நாற்காலி, கடலில் ஓடும் கப்பல், கதவு, யன்னல் என்னவெல்லாமோ எங்கள் உடன்பிறப்புக்களே தங்களைத் தியாகம் செய்து மனிதனுக்கு உதவுகின்றன. இவைகளுக்கு இடையில் வாக்குவாதம் நடந்து ஒரே அமளி அடுப்பில்.

தீக்குச்சியைத் தட்டி அடுப்பைப் பற்ற வைத்தாள் இல்லத்தரசி. மண்ணெண்ணெய் அலறியது ஏதோ செய்கிறதே; சிறுகுச்சிகள் சிரித்தன. பார் வாய்வீரம்தான் அடையாளமே இல்லாமற் போய் விட்டான்.

அடுத்துக் கடதாசி அலறத் தொடங்கியது. அதன் அடையாளமும் இல்லை. சிறுகுச்சிகள் இம்முறை சிரிக்கவில்லை. ஏதோ ஆபத்தை உணர்ந்திருக்க வேண்டும். பல்லைக் கடித்துக்கொண்டு சமாளிக்கப் பார்த்தன. அவற்றின் அடையாளமும் தற்பொழுது குறையத் தொடங்கியது.

பெருவிறகுத் துண்டுகள் இவர்களெல்லாம் வாய்வீச்சிற்தான் வீரர் கருமம் எதுவுமே இல்லாதவர். சிறுபயல்கள் தங்கள் தங்கள் சின்னத் தனத்தைக் காட்டின. அகந்தையுடையவன் அழியவே செய்வான். இவைகளுக்கு இதுவும் வேண்டும் இன்னமும் வேண்டும். இத்தனை பிற்றல்கள் கட கட என்று சிரித்தன பெருவிறகுத்துண்டுகள்.

என்ன இது? எனது உடலிலும் ஏதோ செய்கிறதே, ஓலமிட்டது பெருவிறகுத் துண்டு. ஆம் அதிலும் தான் நெருப்புப் பிடித்துக்கொண்டது. சில நிமிட நேரத்தில் அனைத்தும் சாம்பற் குவியலாகி விட்டது. இதுவரையும் பேசாமடந்தையாகி நீண்ட பெருமூச்சுவிட்டு ஒரு

—ஹெலன் பேர்ன்ஸ்

சிங்கர் குளிர்ப் பெட்டி வாங்கிப் பிரவேசியுங்கள்!

சிங்கர்* வழங்கும் கவர்ச்சி நிறைந்த குளிர்ப் பெட்டிப் போட்டி.

1 2 3
4 5 6
7 8 9

3 சட்டமுப்பு

3 வெல்வதற்கு 3 சந்தர்ப்பம்

100 அதிர்ஷ்ட வெற்றியாளர்

அதிர்ஷ்ட எண்களைத் தேர்ந்தெடுத்து வெல்ல முனையுங்கள்.

Licence No S/697

GRANT BJK&E SLL 3255

மேலதிக விபரங்களை அருகிலுள்ள சிங்கர் வியாபாரியிடம் பெறவும்.

சிங்கர்* மாசற்ற மேன்மை

சொற்சிலம்பம் இல: 97

பரிசு பெறுபவர்கள் விபரம்

முதலாவது பரிசு பெறுபவர்:
செல்வி. நவீனா நடராஜா, "சந்தோஷ் இல்லம்" சங்குவேலி, மானிப்பாய்.

இரண்டாவது பரிசு பெறுபவர்:
திரு. கே. இராஜகோபால், "பொன்மலை" தொல்புரம், சுழிபுரம்.

மூன்றாவது பரிசு பெறுபவர்:
செல்வி. க. ஞான செல்வி, தபாற்கந்தோர், மாதகல்.

சொற்சிலம்பம் இல: 97 சரியான விடைகள்

இடமிருந்து வலம்:
1. சகவாசம் 6. மஞ்சம் 7. ஈழம் 8. பசி 9. பதர் 11. குவளை 12. ஈகை 13. திரவம் 15. மடு 16. சில 17. மாது 20. யது 21. சுபம் 22. கம்பளி.

மேலிருந்து கீழ்:
1. சமபந்தி 2. கஞ்சி 3. வாசம் 4. சம்பவம் 5. அம்பிகை 7. ஈர் 10. தளை 11. குவலயம் 12. ஈடு 14. ரசி 15. மதுரம் 18. அரளி 19. பசு.

பொது அறிவுப் போட்டி இல: 22

சரியான விடைகள்

1. டிசம்பர் 2. பின்லாந்து 3. 645 நாள் 4. தோல்வி 5. 4 ஆண்டும் 6. அறிவு 7. அன்பினால் 8. சினம் 9. காக்டஸ்பூ 10. இந்திரன் 11. மனம் 12. அரேபியா.

பரிசு பெற்றவர் விபரம்

முதலாவது பரிசு:
கே. அரசேஸ்வரன், சுலைமகள் வீதி, நல்லூர் வடக்கு யாழ்ப்பாணம்.
(ஒருவர் மட்டுமே சரியான விடைகளை அனுப்பியிருந்தார்).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org